பொழிவு - 16
குவிப்பு -08
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
ஓகஸ்ட் 2013
(ISSN 1800-2641)
Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை මන්නා

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 36 / News / 2013"

# இளையோரே

## உங்களில் கிறிஸ்துவைக் காண்கின்றேன்!

### 28வது உலக இளையோர் தினத்தில் திருத்தந்தை

"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" என்ற தலைப்பில் கடந்த 28வது உலக இளையோர் தினம் பிறேசில் நாட்டில் கொண்டாடப்பட்டது. அந்நாட்டின் புகழ்பெற்ற கடற்கரைகளில் ஒன்றான அட்லாண்டிக் கடற்கரையில் 30 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் மத்தியில் திருத்தந்தை உரையாற்றினார். அனைத்து மக்களின் மனங்களிலும் மகிழ்ச்சி பொங்க இளையோர் தத்தமது நாட்டின் கொடிகளையும், பாப்பிறைக் கொடிகளையும் அசைத்தவாறு ஆர்வமுடன் திருத்தந்தையை வரவேற்று தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

திருத்தந்தை அங்கு கூடியிருந்த இளையோருக்கு தனது வாழ்த்துச் செய்தியைக் கூறினார். "உங்களிடம் எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. இயேசுக் கிறிஸ்துவிலும், மீட்பளிக்கும் அவரது சிலுவையிலும், நீங்கள் உறுதியாய் இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்" என்றார்.

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

### அருட்தந்தை விக்ரர் குரூஸ் (அ.ம.தி)

## இறைபதமடைந்தார்



மன்னார் மண்ணின் மைந்தனும் அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்தவருமான அருட்பணியாளர் விக்ரர் குரூஸ் அடிகளார் கடந்த யூலை மாதம் 4ஆம் திகதி இறைபதமடைந்தார்.

இவர் மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் குருமுதல்வர் அருட்பணியாளர் ஏ. சேவியர் குரூஸ் அடிகளாரின் சகோதரர் ஆவார். மன்னார் வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்தந்தை 1957ஆம் ஆண்டு யூன் மாதம் 06ஆம் திகதி குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு 56 வருடங்களாகத் தன் பணி வாழ்வை வாழ்ந்தார். அடிகளாரின் இறுதிச் சடங்கு கடந்த யூலை மாதம் 08ஆம் திகதி மன்னாரில் இடம்பெற்றது. அடிகளார் பற்றிய விரிவான கட்டுரை 12ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

### மன்னார் மக்களின் தேவைகள் தொடர்பாக

## மன்னார் குருக்கள் ஜனாதிபதியை சந்தித்துப் பேச்சு



மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் மன்னார் மறைமாவட்டக் குருக்கள் ஜனாதிபதி மஹிந்த இராஜபக்ச அவர்களை கடந்த 18.07.2013 அன்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையின் அனுமதியுடன் இடம்பெற்ற இச்சந்திப்பில் அருட்பணியாளர்களான எமிலியானுஸ்பிள்ளை, டெஸ்மன் குலாஸ், எவ். றெஜினோல்ட், இ. செபமாலை, எஸ். ஜெயபாலன், ஜி. ஏ. அருள்ராஜ் குரூஸ் ஆகியோர் பங்கெடுத்தனர். இப்பேச்சுவார்த்தையின்போது அமைச்சர்களான ஜீ. எல். பீரிஸ், பஸில் ராஜபக்ஷ, நிமல் சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேமஜயந்த, பிரதி அமைச்சர் சரத்குமார குணரத்ன மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின்

## 'விசுவாச ஒளி' திருமடல்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் முதல் அப்போஸ்தலிக்க திருமடல் கடந்த யூலை மாதம் 05ஆம் திகதி வெளியிடப்பட்டது.

**'Lumen Fidei'** அதாவது 'விசுவாச ஒளி' என்ற பெயரில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் முதல் அப்போஸ்தலிக்க திருமடல் வெளியிடப்பட்டது. திருச்சபையில் சிறப்பிக்கப்பட்டு வரும் நம்பிக்கை ஆண்டை ஒட்டி முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களால் தொடங்கப்பட்ட இத்திருமடல், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் முடிக்கப்பட்டுள்ளது. எனவே "நான்கு கைகள்" திருமடல் என இதனை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

## மன்னாரில் மாபெரும் மூன்று நாள் விழா

### மன்னார் நகரம் விழாக்கோலம்

தமிழ் மொழியை உலக அரங்கில் ஏற்றிவைத்த தமிழ்த்தாயின் தன்னிகரில்லாத் தலைமகனாம் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாருடைய பிறப்பின் நூற்றாண்டு விழா கடந்த ஓகஸ்ட் 2ஆம் திகதி தமிழ் கூறும் நல்லுலகெங்கும் நினைவுகூரப்பட்டது.

இந்நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மன்னார்த் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் மாபெரும் விழா ஏற்பாடு செய்யப்பட்டது. ஓகஸ்ட் மாதம் 2ஆம் 3ஆம் 4ஆம் திகதிகளில் இந்த நூற்றாண்டு விழா நிகழ்வுகள் இடம்பெற்றன.

மூன்று நாட்கள் இடம்பெற்ற இவ்விழாவில் தொடக்கவிழா, நிறைவு விழா உட்பட ஆய்வரங்குகள், இலக்கிய அரங்குகள், கலை அரங்குகள் என எட்டு அரங்குகள் இடம்பெற்றன. அனைத்து அரங்குகளும் மன்னார் நகர மண்டபத்திலேயே இடம்பெற்றன. இவ்விழாவில் பங்குகொள்ள இலங்கையின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தமிழ் அறிஞர்கள், கல்விமான்கள், படைப்பாளிகள், எழுத்தாளர்கள் என பலரும் மன்னாருக்கு வருகை தந்திருந்தனர்.

ஓகஸ்ட் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 – 12.00 மணி வரை தொடக்க விழாவும், மதியம் 2.00 – 5.00 மணிவரை இலக்கிய அரங்கும் மாலை 6.30 – 9.30 வரை கலை அரங்கும் இடம்பெற்றன. 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 – 12.00 மணி வரை ஆய்வரங்கும், பகல் 2.00 – 5.00 மணி வரை இலக்கிய அரங்கும், மாலை 6.30 – 9.30 மணி வரை கலை அரங்கும் இடம்பெற்றன. 4ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 – 12.00 மணி வரை ஆய்வரங்கும் பகல் 2.00 – 6.30 மணி வரை நிறைவு விழாவும் இடம்பெற்றன. இவ்விழா பற்றிய விரிவான தகவல்களும் படங்களும் 11ஆம் 12ஆம் பக்கங்களில் உள்ளன.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

### குருத்துவ வாழ்வில் வெள்ளி விழாக் காணும்

## அருட்பணியாளர்கள் ஞானாதிக்கம் மற்றும் அவிதப்பர்





மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் விக்ரர் அவிதப்பர் அடிகளாரும் அருட்பணியாளர் எல். ஞானாதிக்கம் அடிகளாரும் தமது குருத்துவ வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து செப்ரம்பர் 6ஆம் திகதி வெள்ளி விழாக் காண்கிறார்கள். 1988ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 6ஆம் திகதி அன்றைய மன்னார் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டனர்.

அருட்பணி. அவிதப்பர் அடிகளார் செப்ரம்பர் 6ஆம் திகதி பேசாலை ஆலயத்தில் காலை 9.30 மணிக்கும், அருட்பணி. ஞானாதிக்கம் அடிகளார் செப்ரம்பர் 9ஆம் திகதி வஞ்சியன்குளம் ஆலயத்தில் காலை 10.30 மணிக்கும் தமது யூபிலி விழா நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுகின்றனர்.

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர்கள் அ. லோறன்ஸ் மற்றும் ம. பெ. ஞானரெட்னம் ஆகியோரும் இவ்வாண்டு தமது குருத்துவ வெள்ளி விழாவைக் கொண்டாடுகின்றனர்.

குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாக் காணும் இக்குருக்களின் பணி வாழ்வு சிறக்க மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், இறைமக்கள் சார்பாக மன்னா வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கிறது.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

### வங்காலையில் இருந்து இயேசு சபைக்கு முதல் குரு!

## அருட்பணியாளர் ஜேம்ஸ் அன்ரன்தாஸ் மொறாய்ஸ்



வங்காலையைச் சேர்ந்த ஜேம்ஸ் அன்ரன்தாஸ் மொறாய்ஸ் (அனிஸ்ரன் மொறாய்ஸ்) அவர்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

வங்காலையில் இருந்து இயேசு சபையில் குருவாக வந்த முதல் நபர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. பணி வாழ்வில் காலடி பதிக்கும் புதிய குரவரின் பணி சிறக்க மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா தனது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது. (புதிய குரவர் பற்றிய. விபரமான தகவல்களை 14ஆம் பக்கத்தில் காணலாம்)

# தொல்லை வினைதரு தொல்லை யகன்று .....

இ.இ. வசீகரன், ஆசிரியர், யாழ். பத்திரிசியார் கல்லூரி

உலகில் மூத்த இனங்களில் தமிழினமும் ஒன்று. மொழி, கலாசாரம், பண்பாடு, கல்வி எனப் பலவற்றாலும் பெருமை கொண்டது நம் தமிழினம். அண்மைக்காலமாகப் பல இன்னல்களைக் கடந்து மீண்டும் எம் சமூகம் எழுச்சியுறத் தொடங்கியுள்ளது. இதற்கு மத்தியில் பயிர்களுக்குள் களைகள் எழுவதுபோல ஆங்காங்கே சமூகச் சீரழிவுகள் தலைகாட்டி நிற்கின்றன. அவை முளையிலே கிள்ளி எறியப்படாவிட்டால் முப்பது ஆண்டுகாலப் போரைவிட கொடூரமான பல பாதிப்புக்களை நாம் சந்தித்து எமது முகவரிகளை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகவேண்டி ஏற்படும் என அபாயச் சங்குகள் ஒலித்த வண்ணம் உள்ளன.

தமிழர் வாழ்வியலை ஒருகணம் மீட்டிப்பார்த்தால் தமிழர் தம் பெருமைகளும், அப்பெருமைகளுக்கெல்லாம் காரணமான செம்மொழியாம் நம் தமிழ்மொழியின் சிறப்பினையும் தெளிவாக உணரமுடியும். நம் தாய் மொழியாம் தமிழ் மொழி நாகரீக முதிர்ச்சிபெற்ற குமரிக்கண்டத்திலே தோன்றி, சங்கத்திலே வீற்றிருந்து தண்ணொளி வீசிய தமிழின் "சீரிளமைத்திறன் வியந்து செயல் மறந்து வாழ்த்துதமே" என்ற மனோன்மணிய தமிழ்த்தாயின் வணக்கத்திற்கேற்ப காலத்தை வென்று இன்றுவரை பொலிவு குன்றாது நிற்பது அதன் உயிர்த்தன்மைக்கு சான்றாகும். இத்தகைய மொழியைத் தமது வாழ்வாகக் கொண்ட தமிழர்கள் இன்று யாது செய்து வருகின்றார்கள் என்பதே வினவப்பட வேண்டிய விடயமாகும்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்ற மகுட வாக்குடன் உலக வாழ்வைத் துறந்தும் தமிழைத் துறக்க முடியாது உலகத் தமிழ்த் தூதாய் திக்கெட்டும் பறந்த தவத்திரு தனிநாயகம் அடிகளாரை இவ்விடத்தில் ஒவ்வொரு தமிழ் மகனும் சிந்தையில் கொண்டு நாம் என்ன செய்கின்றோம் என சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். வீணாகப் பழங்கதைகள் பேசுவதிலோர் மகிமையில்லை; சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் கேட்கச் செய்வீர்" என்ற பாரதியின் குரலுக்கு நாம் செவிமடுக்க வேண்டும்.

தமிழின் சிறப்பை உணர்ந்த ஜப்பானிய பல்கலைக்கழகம் ஒன்று தனது நுழைவாயிலில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மகுட வாசகத்தைத் தமிழில் பதித்துள்ளது. ஆனால் நாம் இன்று எமது பெயர்களையே தமிழில் வைக்கத் தயங்குகிறோம். தென்றல் வந்து போனதற்குச் சுவடு ஏது? தேன் மலரில் வண்டு வந்து போனதற்குச் சுவடு ஏது? ஆனால் தமிழர்கள் உலகெங்கும் பரந்துபட்டு வாழ்வதற்குச் சுவடு இருக்க வேண்டும். அவை காலத்தால் அழியாத கலைப் பொக்கிஷங்களாகத் திகழ வேண்டும். தமிழ்ப் புலவர் பெருமக்கள் தாங்கள் எழுதும் இலக்கியங்களில் எல்லாம் முதற்பாட்டில் முதல் வரியில் உலகத்தை வைத்தே எழுதி வருகின்றனர். "உலகெலாம்" என்று தொடங்குகிறது பெரிய புராணம். "உலகம் யாவையும்" என்று தொடங்குகின்றது கம்பராமாயணம். "உலகம் உவப்ப" என்று தொடங்குகின்றது திருமுருகாற்றுப்படை. "ஆதிபகவன் முதற்றே உலகு" என்று தொடங்குகின்றது உலகப் பொதுமறை திருக்குறள். இதிலிருந்து தமிழ் மக்களின் பரந்த அறிவும், தூர நோக்கும் மிகத் தெளிவாகப் புரிகின்றது.

பரந்த உலக மனப்பான்மை, விருந்தோம்பல், பிறரன்பு, ஈகை, தனக்கென வாழாப் பிறக்குரியர் என்னும் கோட்பாடு, என் கடன் பணி செய்து கிடப்பதே, அகத்திணை புறத்திணை மரபு, மானமென்றால் உயிரைக் கொடுத்து காப்பாற்றும் வேட்கை, மனத்தூய்மை, விடாது முயலல் என்னும் கொள்கை, யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நிகரற்ற மனநிலை, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்னும் உயர்ந்த இலட்சியம், புறமுதுகில் புண்படா வீரச் சிறப்பு என்பன தமிழர் பண்பாட்டின் அரிய சில கோட்பாடுகளாகும். ஆயகலைகள் அறுபத்தினான்காகக் கண்ட தமிழர்கள் அந்த கலைகளை வளர்த்து அவற்றைத் தமது வாழ்வியலோடு இணைத்தும் நின்றனர்.

உலகத்தில் தலைசிறந்த வாழ்வியல் தத்துவங்களைத் தமது வாழ்வியல் பாதையில் கொண்டு வலம் வந்த தமிழினத்தின் இன்றைய நிலை "தாளம் தவறுமோ தறிகெடுமோ' என்ற நிலையில் சென்றுகொண்டிருக்கின்றது. நல்லதொரு வீணை செய்து அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ? தமிழ் செய்த நவீன திருமூலரான தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் வழியில் தமிழ் செய்தல் என்ற சொல்லாட்சி கொண்டு தமிழ் மொழியையும் தமிழர்தம் வாழ்வியல் பண்பாடுகளையும் செப்பனிட வேண்டிய காலத்தின் கட்டாயப் பணியில் நாம் அனைவரும் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

தமிழ்ப்பணியின் நோக்கம் அறியாமையையும், வறுமையையும் நீக்கலாகும். இதனையே பாரதிதாசன் "தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை" என அழுத்தமாகத் தன் "தமிழனுக்கு வீழ்ச்சியில்லை" பாடலிலே கூறியுள்ளார். அதே பாடலில் "பிறந்துள்ளார் தமிழறிஞர் ஆதல் வேண்டும், வருந்தமிழர் வையகத்தை ஆழ வேண்டும்" என்ற புரட்சிக் கவிஞனின் அதே கனவுடன் பணி செய்யப் புறப்பட்ட அறிஞர்தான் தவத்திரு தனிநாயகம் அடிகள். அவரது கனவு மெய்ப்பட நாம் உழைக்க வேண்டும். "பத்தாவது முறை கீழே விழுந்தவனை பூமி முத்தமிட்டுச் சொன்னது நீ ஒன்பது முறைகள் எழுந்தவனல்லவா?"

ஆம் வீழ்வது நாமாக இருந்தாலும் வாழ்வது தமிழும் தமிழ்ப் பண்பாடும் எனக் கொண்டு நன்றாகத் தமிழ் செய்வோம், அதனை இன்றே செய்வோம்.

# மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கான பணி மாற்றங்கள் - 2013

| இல | பெயர் | பங்கு / ஆணைக்குழு / நிறுவனம் |
|---|---|---|
| 01. | அருட்பணி. எம். சூசைப்பிள்ளை | பங்குத்தந்தை ஆக்காட்டிவெளி, இயக்குனர் திருத்தந்தையின் மறைபரப்புச் சபைகள் |
| 02. | அருட்பணி. எஸ். ஜெயபாலன் குரூஸ் | மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 03. | அருட்பணி. ஏ. இராயப்பு | மடுத்தியான இல்லம், இயக்குனர் - மறைமாவட்ட மறைபரப்பு ஆணைக்குழு. |
| 04. | அருட்பணி. ஏ. செபமாலை | பங்குத்தந்தை, கோமரசன்குளம் |
| 05. | அருட்பணி. எம். பி. பீற்றர் மனோகரன் | பங்குத்தந்தை, முருங்கன், முருங்கன் மறைக்கோட்ட முதல்வர். |
| 06. | அருட்பணி. எஸ். கே. பெப்பி சோசை | பங்குத்தந்தை, மன்னார் பேராலயம் |
| 07. | அருட்பணி. எஸ். ஸ்ரீபன்ராஜ் | பங்குத்தந்தை, பள்ளிமுனை |
| 08. | அருட்பணி. டி. அலெக்ஸ்சாண்டர் சில்வா (பெனோ) | இயக்குனர் - குருக்கள், துறவியர், குருமட மாணவர்களுக்கான மறைமாவட்ட ஆணைக்குழு. |
| 09. | அருட்பணி. எஸ். மாக்கஸ் | பங்குத்தந்தை, கற்கடந்தகுளம் |
| 10. | அருட்பணி. எஸ். ஜெயபாலன் | பங்குத்தந்தை, வங்காலை |
| 11. | அருட்பணி. ஆர். அகஸ்ரின் புஸ்பராஜ் | பங்குத்தந்தை தாழ்வுபாடு, மன்னார் மறைக்கோட்ட முதல்வர் |
| 12. | அருட்பணி. எஸ். சத்தியராஜ் | பங்குத்தந்தை, வவுனியா (இறம்பைக்குளம்) |
| 13. | அருட்பணி. எஸ். லக்கோன்ஸ் பிகிறாடோ | பங்குத்தந்தை, ஓமந்தை |
| 14. | அருட்பணி. ஜி. ஏ. அருள்ராஜ் குரூஸ் | பங்குத்தந்தை, நானாட்டான். |
| 15. | அருட்பணி. ஏ. ஆரோக்கியம் | இயக்குனர், திருவழிபாட்டு ஆணைக்குழு |
| 16. | அருட்பணி. எவ். ஞானராஜ் குரூஸ் (நேரு) | பங்குத்தந்தை, தேவன்பிட்டி |
| 17. | அருட்பணி. எ. றஜனிகாந்த் | பங்குத்தந்தை, அந்தோனியார்புரம் (புதிய பங்கு) |
| 18. | அருட்பணி. கே. ஏ. சுகுணராஜ் குரூஸ் | பங்குத்தந்தை, குஞ்சுக்குளம் |
| 19. | அருட்பணி. ஏ. மரியதாசன் குரூஸ் (றொக்சன்) | பங்குத்தந்தை, தோட்டவெளி |
| 20. | அருட்பணி. ஏ. லக்ஸ்ரன் டி சில்வா | பங்குத்தந்தை, வேப்பங்குளம் |
| 21. | அருட்பணி. எஸ். நியூட்டன் தேவராஜ் | பங்குத்தந்தை, அடம்பன் |
| 22. | அருட்பணி. எஸ். தவராஜ் | பங்குத்தந்தை, முள்ளிக்குளம் |
| 23. | அருட்பணி. வி. எமில் எழில்ராஜ் | பங்குத்தந்தை, சிறுக்கண்டல் (புதிய பங்கு) |
| 24. | அருட்பணி. இ. டெஸ்மன் அஞ்சலோ | உதவிப்பங்குத்தந்தை, வவுனியா |
| 25. | அருட்பணி. எஸ். அருட்குமரன் | உதவிப்பங்குத்தந்தை, மன்னார் |
| 26. | அருட்பணி. பி. லோறன்ஸ் லியோன் | உதவிப் பரிபாலகர் மடு. |
| 27. | அருட்பணி. ஆர். ரெறன்ஸ் கலிஸ்ரஸ் குலாஸ் | உதவிப்பங்குத்தந்தை, மன்னார். |

**வாசகப் பெருமக்களே!**
மன்னா பத்திரிகைப் பணத்தை காலம் தாழ்த்தாமல் உடனடியாகச் செலுத்துவதன் மூலம் மன்னா விநியோகஸ்-தர்களுக்கு உங்கள் மேலான ஒத்துழைப்பை வழங்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.
- மன்னா நிர்வாகம்

## வின்சன் டி போல் மத்திய சபையின் புதிய நிர்வாகிகள்

மன்னார் மறைமாவட்ட புனித வின்சன் டீ போல் மத்திய சபையின் 05.05.2013ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெற்றது. திரு. தோமஸ் மரியதாஸ் (புனித செபஸ்ரியார் வளர்ந்தோர் பந்தி, மன்னார் பங்கு) தலைவராகவும், திருமதி. ஏ. ஆபிரகாம், சோசை (புனித ஆனாள் வளர்ந்தோர் பந்தி வங்காலைப் பங்கு) செயலாளராகவும், திரு. ஏ. பத்திநாதன் பிகிறாடோ (புனித லூசியா வளர்ந்தோர் பந்தி, பள்ளிமுனைப் பங்கு) பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

தகவல் - செயலாளர்

# மன்னார் மறைமாவட்டம்

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2013

## ஆவணி

04 - பெரியகட்டு தூய அந்தோனியார் திருவிழா
- மரிய மாதா திருவிழா - மாளிகைத்திடல்

06 - தூய அந்தோனியார் திருவிழா - பெரிச்சார் கட்டு
- மடுத்திருப்பதியில் திருவிழாவிற்கான கொடியேற்றம் - நவநாள் ஆரம்பம், குழந்தை இயேசு ஆலயம், ஆலங்குளம்

10 - தூய லோறன்ஸ் திருவிழா - தலைமன்னார்.

15 - மடுமாதா திருத்தலத் திருவிழா - கடன் திருநாள் (கன்னி மரியாள் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது)

20 - வேளாங்கண்ணி அன்னை விழா - தம்பனைக்குளம்.

22 - தூய பரலோக அன்னை திருவிழா - கோமரசன்குளம், பறப்பாங்கண்டல்.
- வேதசாட்சிகளின் இராக்கினி திருவிழா - தோட்டவெளி.
- அன்னை திரேசா மறைபரப்பு அருட்சகோதரிகளின் விழா.

24 - தூய பத்தலோமேயு திருவிழா - ஓலைத்தொடுவாய்.

25 - கிறிஸ்து அரசர் திருவிழா - பெரியமடு
- தூய அந்தோனியார் திருவிழா - உயிர்த்தராசன்குளம்.

26 - தூய பரலோக அன்னை திருவிழா - முள்ளிக்குளம். அளவக்கை பங்குத் திருவிழா

27 - தூய அந்தோனியார் திருவிழா - பன்னவெட்டுவான்.

30 - முத். அன்னை திரேசா திருவிழா - துட்டுவாகை

31 - தூய சவேரியார் திருவிழா - ஆட்காட்டிவெளி

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத்தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## பள்ளிமுனை மரியாயின் சேனையார் குருசுக்கோவிலுக்கு திருயாத்திரை

கடந்த 26.07.2013 அன்று பள்ளிமுனைப் பங்கின் மரியாயின் சேனையார் முன்னின்று பங்கிலுள்ள அனைத்துப் பக்திச்சபைகளுடன் இணைந்து பங்கு மக்கள், பங்குத்தந்தை, திருக்குடும்ப அருட்சகோதரிகள் சகிதம் மன்னார் குருசுக்கோவிலுக்கு யாத்திரையாகச் சென்றனர்.

ஒரே மனதுடன் மரியன்னையின் திருச்செபமாலையை ஓதிக்கொண்டு மாலை 4.00 மணியளவில் பள்ளிமுனையில் இருந்து கடற்கரை வீதி வழியாகத் தமது பயணத்தைத் தொடந்தனர். குருசுக் கோவிலைச் சென்றடைந்தவுடன், திருச்செபமாலையுடன், உளமாற்ற வழிபாடுகளும், ஒப்புரவு அருட்சாதனமும் நிறைவேற்றப்பட்டது. தூய உள்ளத்துடன் கல்வாரிப் பலியில் அனைவரும் பங்குபற்றினர். "இயேசுவை அறிதலும் இயேசுவைப் பற்றி அறிதலும்" எனும் கருப்பொருளில் அருட்தந்தை வின்சன் பற்றிக் அ.ம.தி அடிகளார் ஆன்மீக உரை வழங்கினார்.

இந்த ஆன்மீக விசுவாசப் புதுப்பித்தல் பயணத்தை மரியன்னையோடு இணைந்து செய்ய ஆக்கமும், ஊக்கமும் வழங்கிய பங்குத்தந்தை அருட்பணி எம். பி. பீற்றர் மனோகரனுக்கு பங்கு மக்கள் நன்றி தெரிவித்தனர். "அவர் சொல்வதைச் செய்யுங்கள்" என்ற அன்னையின் வார்த்தையின்படி விசுவாசத்தை செயல் வடிவம் காட்ட திடமான மனதுடன் அனைவரும் திடசங்கற்பம் பூண்டனர். மரியே வாழ்க!

## மாபெரும் நற்கருணைப் பேரணி

கடந்த 07.07.2013 ஞாயிறு அன்று அடம்பன், ஆட்காட்டிவெளி, காத்தான்குளம் ஆகிய மூன்று பங்குகளும் இணைந்து நடாத்திய மாபெரும் நற்கருணைப் பேரணி அடம்பன் புனித வியாகுல மாதா ஆலயத்தில் ஆரம்பமாகி கறுக்காக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நற்கருணை ஆசீர்வாதத்துடன் நிறைவு பெற்றது.

அருட்பணியாளர்கள் ரமேஸ் அ.ம.தி, றொக்சன், நெவின்ஸ் ஆகியோரால் மறையுரைகள் ஆற்றப்பட்டன. இதில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

இப்புனித நிகழ்வை அடம்பன், ஆட்காட்டிவெளி, காத்தான்குளப் பங்குத்தந்தையர்களான அருட்பணியாளர்கள், லக்கோன்ஸ், ஜெயபாலன், வசந்தகுமார் ஆகியோர் ஆயத்தம் செய்திருந்தனர்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி மெசஞ்சர்)

# துன்பப்படும் தமிழ் மக்களுக்கு 'விடிவெள்ளி' விக்னேஸ்வரன்!

## அவர் பின்னால் அணிதிரளுமாறு மன்னார் ஆயர் அழைப்பு

தமிழ் மக்கள் மிகப்பெரும் இன்னல்களை அனுபவித்துவரும் நிலையில் அவர்களது விடிவிற்காக பாடுபடக்கூடிய உத்தமர் ஒருவர் வடமாகாண முதலமைச்சர் வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதனை ஆண்டவனின் தெரிவாகக் கொண்டு அவர் பின்னால் அனைவரும் அணிதிரண்டு தமிழ் மக்களின் விடுதலை நோக்கிய மற்றொரு பயணத்தை ஆரம்பிக்க ஆண்டவர் எப்போதும் அருள்புரிவாரென மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபைக்கான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் பிரதம நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்: நீதியரசரது தெரிவானது தமிழினத் தலைவர்கள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்களின் சிந்தனை வல்லமையைக் காண்பிப்பதுடன் காலத்தை நுணுக்கமாக நோக்கி முடிவெடுக்கும் திறனை அவர்கள் கொண்டிருப்பதையும் வெளிப்படுத்தியுள்ளது.

இன்றைய நிலையில் எவர் தேவையோ அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதற்கு நான் முதற்கண் எனது பாராட்டையும் வாழ்த்தையும் அவருக்கும் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறான ஒருவர் தெரிவுசெய்யப்பட வேண்டுமென்ற எதிர்பார்ப்பு மக்களிடையேயும் இருந்தது. அதற்கேற்ப அவரது தெரிவும் அமைந்துள்ளது.

நீதியான, நேர்மையான, இறைபக்தி மிகுந்த இலஞ்சம் ஊழல் போன்றவற்றை தனது வாழ்க்கையில் முழுமையாகத் தோற்கடித்த இவரது தெரிவு கடவுளின் தெரிவென்றுதான் சொல்ல வேண்டும். இன்றைய நிலையில் இவரது தெரிவை எல்லாம் வல்ல ஆண்டவனும் விரும்பியுள்ளார். உள்நாட்டிலும் சர்வதேசமெங்கிலும் வாழும் தமிழ் மக்களின் பிரதிநிதியாக நீதியரசர் செயற்பட அனைவரும் உதவ வேண்டும். அவருடன் சேர்ந்து தமிழ் மக்களின் துன்ப, துயரங்களைப் போக்கும் விதத்தில் சிறந்த வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான தனது தூரநோக்கை அவர் உடனடியாகவே வெளிப்படுத்தியுள்ளார். யுத்தத்தாலும் இடம்பெயர்வுகளாலும் பெரும் இழப்புக்களைச் சந்தித்து நிற்கும் தமிழ் மக்களை இவற்றின் தாக்கத்திலிருந்து தூக்கிவிடும் பெரும் பொறுப்பை நீதியரசர் ஏற்றுள்ளார்.

தமிழ் மக்கள் தற்போது மிகப்பெரும் சவால்களையும் நெருக்குதல்களையும் வடக்கு - கிழக்கில் எதிர்கொண்டுள்ளனர். தாங்கள் வாழும் மண்ணில் இந்த சவால்களிலிருந்து அவர்கள் மீள வேண்டும். இந்தத் தேர்தலை அதற்கொரு வாய்ப்பாக அனைவரும் பயன்படுத்த வேண்டுமென்பதுடன் தமிழ் மக்கள் தமது உணர்வுகளுக்கு அப்பால் சலுகைகளுக்கு என்றுமே விலைபோகாதவர்கள் என்பதை இத்தேர்தலில் நிரூபிக்க வேண்டும்.

பொருத்தமானதொரு தருணத்தில் நீதியரசரின் தேர்வு தமிழ் மக்களுக்கு வழிகாட்டியாக அமையுமெனக் கருதுகிறேன். அனைத்து மக்களும் அனைத்து மதத்தினரும் சமூக அமைப்புக்களும் கல்விமான்களும் தங்களது பொறுப்பை உணர்ந்து இவரது வெற்றிக்கு பாடுபட வேண்டும்.

நாம் அடிமைகளோ அல்லது 2ஆம் தர பிரஜைகளோ அல்ல. நாம் ஒதுக்கப்பட்டவர்களாக வாழ வேண்டியவர்கள் அல்ல என்பதை நீதியரசரின் தேர்வின் மூலம் முழு உலகிற்கும் உணர்த்துவது வடபகுதி மக்களின் கடமையாகும். இவரது வெற்றிக்கு எல்லாம் வல்ல ஆண்டவர் துணைபுரிவாரெனவும் ஆயர் தெரிவித்துள்ளார்.

## பூந்தமல்லி விவிலிய பயிற்சி நெறியில் அருட்சகோதரர் மார்க்



வங்காலையைச் சேர்ந்த - பிரான்சிஸ்கன் சபையைச் சார்ந்த அருட்சகோதரர் பிரான்சிஸ் மார்க் இக்னேசியஸ் அவர்கள் விவிலிய கற்கைநெறியை மேற்கொள்வதற்காக இந்தியாவிற்குச் சென்றுள்ளார்.

சென்னையில் உள்ள பூந்தமல்லி புனித பவுல் விவிலிய நிலையத்தில் 2013 யூலை மாதம் தொடக்கம் 2014 மார்ச் மாதம் வரை இக்கற்கைநெறி நடைபெறும். இப்பயிற்சிநெறியில் இவ்வாண்டு 25 பேர் கலந்துகொள்கின்றனர்.

மடுத்திருப்பதியில் மக்கள் பல்லாயிரக்கணக்காக அகதிகளாக வாழ்ந்தபோது அவர்கள் மத்தியில் ஆயிரத்துக்கும் அதிகமான மன்னா பத்திரிகையை மாதாந்தம் விநியோகித்து மன்னா பத்திரிகைக்கு இவர் ஒத்துழைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பின் ஏற்பாட்டில் மன்னார் மறைசாட்சியர் விழா

மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த யூலை மாதம் 20ம் திகதி மன்னார் மறைசாட்சியர் விழா தோட்டவெளி வேதசாட்சிகள் இராக்கினி ஆலயத்தில் இடம்பெற்றது.

தோட்டவெளி பங்குத்தந்தை அருட்திரு. எவ். ஞானராஜ் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் ஓலைத்தொடுவாய், துள்ளுகுடியிருப்பு, கொன்னயன் குடியிருப்பு, கரிசல், நெடுங்கண்டல், காத்தான்குளம், தரவன்கோட்டை, தோட்டவெளி, அளவக்கை, கீளியன்குடியிருப்பு போன்ற இடங்களில் இருந்து இறைமக்கள் பங்கேற்றனர். அருட்தந்தை இ. செபமாலை அவர்கள் இந்நிகழ்வில் சிறப்புரையாற்றினார்.

## வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் கிறிஸ்தவ மாநாடு – 2013

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வருடாந்த கிறிஸ்தவ மாநாடு ஓகஸ்ட் மாதம் 31ம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை இடம்பெறவுள்ளது. "இறை நம்பிக்கையே வாழ்வின் ஒளி" எனும் தலைப்பில் இம்மாநாடு இடம்பெறுகின்றது.

## தலைமன்னாரில் புனித லோறன்சியார் வாசாப்பு



தலைமன்னார் கிராமத்தின் பாதுகாவலரான புனித லோறன்சியார் வாசாப்பு கடந்த ஓகஸ்ட் மாதம் 10ம் திகதி ஆலய வளாகத்தில் மேடையேற்றப்பட்டது.

புனித லோறன்சியார் திருவிழாவையொட்டி இடம்பெற்ற இச்சிறப்பு நிகழ்வு இரண்டு இரவுக் கூத்தாக - புதிதாக அமைக்கப்பட்ட கலை அரங்கில் இடம்பெற்றது. அருட்பணியாளர் செ. அன்புராசா அ.ம.தி அவர்கள் இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். தலைமன்னார் பங்குத்தந்தை டெஸ்மன் குலாஸ் அடிகளாரின் வழிகாட்டலில் இந்நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## பிடாரிகுளத்தில் சந்தொம்மையார் வாசாப்பு



ஓகஸ்ட் மாதம் 18ம் திகதி முருங்கன் பிடாரிகுளம் ஆலய முன்றலில் புனித சந்தொம்மையார் வாசாப்பு மேடையேற்றப்பட்டது. அளவக்கைப் பங்கின் துணைப்பங்குகளான பிடாரிகுளம் மற்றும் மாவிலங்கேணி மக்கள் இணைந்து இந்த வாசாப்பை மேடையேற்றினர். மன்னார் ஆயர் அவர்கள் இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். அளவக்கை பங்குத்தந்தை அருட்பணி. சுரேந்திரன் றெவல் அவர்களின் வழிகாட்டலில் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

## மடு ஆவணித் திருவிழா 2013



ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மடு ஆவணித் திருவிழாவின் முக்கிய இரு தினங்கள் 14ஆம் 15ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

14ஆம் திகதி வேஸ்பர் ஆராதனைகள் மாலை 6.15 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகியது. அன்றைய தினம் நற்கருணைப் பவனியும் இடம்பெற்றது.

15ஆம் திகதி திருவிழாத் திருப்பலி காலை 6.30 மணிக்கு இடம்பெற்றது. திருப்பலியைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச்சுருபப் பவனியும், திருச்சுருப ஆசீரும் இடம்பெற்றன.

இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி மேதகு ஜோசப் ஸ்பிற்ரறி ஆண்டகை, மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை, யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, கண்டி ஆயர் மேதகு வியான்னி பெனாண்டோ ஆண்டகை, கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் முன்னாள் பேராயர் மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை, அநுராதபுர ஆயர் மேதகு நோபேட் அன்றாடி ஆண்டகை, காலி ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை ஆகியோர் இத்திருவிழாவில் கலந்துகொண்டனர். போக்குவரத்து, உணவு, சுகாதார மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இத்திருவிழாக் காலம் பாடசாலை விடுமுறைக்காலமாதலால் பெருந்தொகையான மக்கள் மடுத்திருப்பதியில் ஒன்றுகூடியிருந்தனர். ஏறக்குறைய ஆறு இலட்சம் மக்கள் இவ்விழாவில் பங்கேற்றதாக மதிப்பிடப்பட்டது.

## சிரிய கத்தோலிக்க மதகுரு தலையை வெட்டி படுகொலை

வட சிரியாவில் கத்தோலிக்க மதகுரு ஒருவர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்துகொண்டிருந்த மக்கள் முன்னிலையில் போராளிகளால் தலையை வெட்டி படுகொலை செய்யப்படுவதை வெளிப்படுத்தும் வீடியோ காட்சியொன்று வெளியானதையடுத்து பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அருட்தந்தையான பிரான்கொயிஸ் முராட் என்ற மேற்படி மதகுரு போராளிகளால் கொல்லப்பட்டுள்ளதாக வத்திக்கான் உறுதிபடுத்தியுள்ளது. அருட்தந்தை முராட் (40 வயது) அவர், தங்கியிருந்த கஸனிய நகரிலுள்ள கன்னியாஸ்திரி மடத்தின்மீது கடந்த ஜூன் மாதம் போராளிகளால் நடத்தப்பட்ட தாக்குதலின்போது கொல்லப்பட்டுள்ளார்.

எதற்காக அவர் படுகொலை செய்யப்பட்டார் என்பது அறியப்படவில்லை. எனினும் ஜபட் அல் - நுஸ்ரா புரோன்ட் போராளி குழுவைச் சேர்ந்தவர்களே இத்தாக்குதலை நடத்தியதாக கூறப்படுகிறது. மதகுரு தலையை வெட்டி படுகொலை செய்யப்படுவதை வெளிப்படுத்தும் மேற்படி உறுதிப்படுத்தப்படாத வீடியோ காட்சிகள் கத்தோலிக்க இணையத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

அருட்தந்தை முராட் பாதுகாப்பு காரணங்களுக்காக மேற்படி கன்னியாஸ்திரி மடத்தில் தங்க ஆரம்பித்திருந்ததாக வத்திக்கான் தெரிவித்தது.

## தனிநாயகம் அடிகளார் பெயரில் வீதி திறப்பு

மன்னாரில் இடம்பெற்ற தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவின் ஒரு அம்சமாக தனிநாயகம் அடிகளாரின் பெயரில் வீதி ஒன்று திறந்துவைக்கப்பட்டது.

மன்னார் பனங்கட்டுக்கொட்டு பகுதியில் அமைந்துள்ள கடலேரி வீதி 'தனிநாயகம் அடிகளார் வீதி' என பெயர் மாற்றம் செய்யப்பட்டு திறந்துவைக்கப்பட்டது. மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் இவ்வீதிக்கான பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்துவைத்தார். மன்னார் தமிழ்ச்ச சங்கத்தின் தலைவர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

## மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர்களுக்கான கருத்தமர்வு

மன்னார் மறைக்கல்வி நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தமர்வு யூலை மாதம் 26,27ம் திகதிகளில் மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது.

அருட்தந்தையர்களான றெஜிஸ் இராஜநாயகம், விக்ரர் பிலேந்திரன், மைக்கல் சௌந்தரநாயகம், தயாபரன், ரவிராஜ், கிறிஸ்ரியன் வாஸ் ஆகியோர் இக்கருத்தமர்வில் விரிவுரைகளை நடாத்தினர். மறைக்கல்வி இயக்குனர் எக்ஸ். எவ். றெஜினோல்ட் அடிகளாரும், மறைக்கல்வி நிலையப் பணியாளர்களும் இந்நிகழ்வை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்கள்.

# வவுனியா இளைஞர் ஒன்றியத்தினரின் கண்டிக்கான சுற்றுலா



வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்தின் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினர் கடந்த 21.07.2013 அன்று கண்டி நோக்கி இரண்டு நாள் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டனர். இந்த மகிழ்ச்சிகரமான சுற்றுலாவினை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்புகளை வழங்கிய வவுனியாப் பங்குத்தந்தை அருட்பணி. பெப்பி சோசை, அருட்பணி. டெஸ்மன் அஞ்சலோ, அருட்தந்தை அருட்குமரன், அருட்சகோதரி ஜெயந்தி, கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் போசகர் திரு. அன்ரன் புனிதநாயகம் ஆகியோருக்கு கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினர் தமது நன்றியைத் தெரிவிக்கின்றனர்.


தகவல் : தலைவர், கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம், புனித அந்தோனியார் ஆலயம், வவுனியா.

### வேப்பங்குளம் பங்கில்
### முதியோர் சங்க மூத்த உறுப்பினர்களுக்கு
## சேவைநலன் பாராட்டுவிழா



வேப்பங்குளம் புனித சூசையப்பர் முதியோர் சங்கத்தில், பதவி வகித்து செயலாற்றி அதிலிருந்து விடைபெற்ற நால்வருக்கு, கடந்த 13.07.2013 சனிக்கிழமை காலை 09.30 மணியளவில் ஆலய மேய்ப்புப்பணி மண்டபத்தில் சேவைநலன் பாராட்டு விழா இடம்பெற்றது. இதற்கு வேப்பங்குளம் பங்குத்தந்தையும் கிளை இயக்குனருமான அருட்பணி. அ. றஜனிக்காந் அடிகளார் பிரதம விருந்தினராக வரவழைக்கப்பட்டார். தலைவர் திரு. நா. டேவிற் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

### பொற்கேணியில்
## கார்மேல் அன்னை திருவிழா



கார்மேல் நகர் என அழைக்கப்படும் பொற்கேணி கிராமத்தின் பாதுகாவலியான தூய கார்மேல் அன்னையின் திருவிழா கடந்த 16.07.2013 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

மூன்று நாள் ஆயத்த வழிபாடுகள் இடம்பெற்றன. முதல் நாள் வழிபாடு அருட்தந்தை றெறன்ஸ் அவர்களாலும், 2ம் நாள் வழிபாடு அருட்தந்தை லோறன்ஸ் அவர்களாலும், நற்கருணை வழிபாடு அருட்தந்தை வசந்தக்குமார் அவர்களாலும் திருவிழாத் திருப்பலி அருட்தந்தை இராஜநாயகம் அடிகளார் தலைமையில் நான்கு அருட்தந்தையர்கள் கொண்ட கூட்டுத் திருப்பலியாகவும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

தோட்டவெளி, வஞ்சியன்குளம், முருங்கன்பிட்டி, சவேரியார்புரம், கொக்குப்புடையான், முத்தரிப்புத்துறை போன்ற பல்வேறு இடங்களில் இருந்து மக்கள் வந்து அன்னையின் ஆசீரைப் பெற்றுச் சென்றனர். பங்குத்தந்தை அருட்திரு. ஒல்பன் இராயசிங்கம் அடிகளார் இக்கிராம மக்களை சிறப்பாக வழிநடத்தினார். தகவல் : திருமதி. நதியா.

### யாழ். சுண்டிக்குழி
### புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தின்
## 125வது ஆண்டு நிறைவு விழா



கடந்த 24.06.2013 அன்று பெருவிழாவின் திருப்பலியை நிறைவேற்ற வருகை தந்த ஆலயத்தின் முன்னாள் பங்குத்தந்தையர்களும் இந்நாள் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களும், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசப்பு ஆண்டகை அவர்களும் பங்கு மக்கள் சகிதம் அருட்பணிச்சபை செயலாளர் சொலமன் சூ. சிறில், பொருளாளர் க. யோ. தனசிங்கம், உறுப்பினர் யோசப் ராஜா ஆகியோரால் ஆலய வளாகத்திற்கு அழைத்து செல்லப்படுகின்றனர்.



யூபிலி விழாவைச் சிறப்பிக்கும் முகமாக 25.06.2013 மாலை ஆலய மைதானத்தில் இளையோர் ஒன்றியத்தினால் அரங்கேறிய 'சஞ்சுவாம்' என்னும் தென்மோடி நாட்டுக்கூத்து நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை அவர்கள் கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக அவர்களுடன் இணைந்து எடுத்துக்கொண்ட படம் இது. அருகில் ஆலய செயலாளர் சொலமன் சூ. சிறில், நாடக இயக்குனர் திரு. யோண்சன் இராஜகுமார் ஆகியோர் காணப்படுகின்றனர்.

## அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான ஒன்றுகூடல்

கடந்த யூன் மாதம் உயிலங்குளம், காத்தான்குளம் ஆகிய பங்குகளைச் சேர்ந்த 45 அன்பிய ஊக்குவிப்பாளர்கள் காத்தான்குளம் பங்கின் குழுவில் பகுதியில் ஒன்றுகூடினர். இந்நிகழ்வில் அன்பிய இயக்குனர் அருட்பணி. டக்ளஸ் அடிகளாரும் கலந்துகொண்டார். மதிய உணவு, அனுபவம் பகிர்வு போன்றவை நடைபெற்றன. மாலை 4.00 மணியளவில் இந்நிகழ்வு நிறைவுற்றது. இதனை காத்தான்குளப் பங்குத்தந்தை அருட்பணி. வசந்தக்குமார் அடிகளாரும், உயிலங்குளம் பங்குத்தந்தை அருட்பணி. செ. பிரான்சிஸ் மரி டி கோல் அடிகளாரும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

தகவல்: கி. அஜித்தா, ஊக்குவிப்பாளர், காத்தான்குளம்.

# நாட்டு நடப்புக்கள்

## தருவது நாங்கள் ........ தீர்மானிப்பது நீங்கள்........

### ஆண்டுக்கு 60 லட்சம் பேர் புகைத்தலால் உயிரிழப்பு

புகை பிடிக்கும் பழக்கத்தால் ஆண்டுக்கு 60 லட்சம் பேர் இறக்கின்றனர் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானோர் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளைச் சேர்ந்தவர்களே என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த நிலை நீடித்தால் 2030ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 80 லட்சமாக உயரும் என்றும் அந்த அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

### பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகம்

ஒவ்வொரு 90 நிமிடங்களுக்கு ஒரு முறை இலங்கை நாட்டில் எங்கோவொரு இடத்தில் பெண்ணொருவர் துஷ்பிரயோகத்திற்கு இலக்காவதாக பெண்களின் உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. இதேவேளை நாட்டில் இடம்பெறும் ஒவ்வொரு குற்றச்செயலுக்குப் பின்னாலும் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் காணப்படுவதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

### உலகில் நான்கில் ஒருவர் லஞ்சம் கொடுக்க நிர்ப்பந்தம்

உலகில் நான்கில் ஒருவர் கடந்த ஆண்டு லஞ்சம் கொடுக்க வேண்டிவந்துள்ளது என்று உலக அளவில் நடத்தப்பட்டுள்ள புதிய ஆய்வு ஒன்று காட்டுகிறது. ஜெர்மனியின் பெர்லின் நகரில் தலைமையகத்தைக் கொண்டுள்ள டிரான்ஸ்பரன்ஸி இண்டர் நேஸனல் இந்த ஆய்வை நடத்தியுள்ளது.

செல்வந்த நாடுகளில் ஒருவர் லஞ்சம் கொடுக்கவேண்டி வருகின்ற தருணங்களில் ஏழை நாடுகளில் ஒருவர் லஞ்சம் கொடுக்க வேண்டிய இரு மடங்கு அவசியம் ஏற்படுகிறது என இந்த ஆய்வு காட்டுகிறது.

### ஆறு மாத கால வீதி விபத்துக்களில் 900ற்கும் அதிகமானவர்கள் உயிரிழப்பு

இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதிக்குள் நாடு முழுவதிலும் இடம்பெற்ற மோசமான வீதி விபத்துக்களில் 900ற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் புள்ளி விபரங்களின்படி 2013 ஜனவரி முதல் ஜூன் வரையிலான ஆறு மாத காலப் பகுதிக்குள் நாடுமுழுவதிலும் இடம்பெற்ற 880 வீதி விபத்துக்களில் 944 பேர் பலியாகியுள்ளனர்.

இதேவேளை, 2,718 பேர் படுகாயங்களுக்கும், 5,933பேர் சிறுகாயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். இந்த விபத்துக்களில் அதிகமானவை மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளினால் ஏற்பட்டவைகளாகும். அத்துடன் பஸ் வண்டியினால் ஏற்பட்ட விபத்துக்கள் 10 வீதமாக பதிவாகியுள்ளன. அத்துடன் கடந்த ஆறு மாத காலத்திற்குள் மூன்று பாரிய ரயில் விபத்துக்கள் பதிவாகியுள்ளன. அதிக வேகம், போதையில் வாகனங்களை செலுத்துதல், வீதி ஒழுங்கு விதிமுறைகளை மீறல் போன்றவைகளே இந்த விபத்துக்களுக்கு காரணம் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கிறது.

### டென்னிஸ் வீராங்கனை கத்தோலிக்க இயக்கத்திலிருந்து நீக்கம்

கத்தோலிக்க மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர் போலந்து டென்னிஸ் வீராங்கனையான அக்னியெஸ்கா ரட்வன்ஸ்கா. உலகின் நான்காம்நிலை வீராங்கனையாக உள்ள இவர் சமீபத்தில் நடைபெற்ற விம்பிள்டன் போட்டியில் அரை இறுதியில் தோற்றுப்போனார். இவர் 'பொடி இஷ்யு' என்ற பத்திரிகை ஒன்றின் அட்டைப் படத்திற்காக நிர்வாணமாக போஸ் கொடுத்துள்ளார். டென்னிஸ் பந்துகள் மிதந்துகொண்டிருக்கும் ஒரு நீச்சல் குளத்தின் புல்வெளியிலுள்ள நாற்காலி ஒன்றில் அமர்ந்திருப்பது போன்ற காட்சி அந்தப் பத்திரிகையின் அட்டைப்படத்தில் வந்துள்ளது.

ஜீசஸ் குறித்து நான் வெட்கப்படுவதில்லை என்ற பிரசாரத்தினை நடத்தும் இளைஞர் சிலுவைப் போர் என்ற கத்தோலிக்க இயக்கப்பிரிவினர் இவரது இந்தத் தோற்றம் கண்டு அதிர்ந்தனர். பத்து இலட்சத்திற்கும் மேலான தொண்டர்களை கொண்ட இந்த இயக்கத்திலிருந்து ரட்வன்ஸ்கா விலக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இந்தப் பிரிவினால் நடத்தப்பட்ட தொலைக்காட்சி வர்த்தக விளம்பர நிகழ்ச்சி ஒன்றில் ரட்வனஸ்கா கையில் டென்னிஸ் பந்துகளுடன் தோன்றி ஜீசஸ் என்று கூறி தங்களது நம்பிக்கை குறித்து வெட்கப்படத் தேவையில்லை என்று மதப் பிரசாரம் செய்தார்.

ரட்வன்ஸ்கா தவிர, போர்ட்டோரிக்கோவின் மோட்டார் பந்தய வீரரான தாராகிலெகரும், ஒன்பது முறை கோல்ப் பந்தயத்தில் சாம்பியன் பெற்ற 77 வயது நிரம்பிய பேரி பிளேயரும் இந்த பத்திரிகையில் பேட்டி அளித்திருந்தனர்.

போப் இரண்டாவது ஜோன்போலின் பிறப்பிடமான போலந்து நாடு, தீவிர பக்திநெறியைப் பின்பற்றும் நாடாகும். இங்குள்ளவர்களில் 90 சதவிகிதத்தினர் ரோமன் கத்தோலிக்கப் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

### தமிழர்கள் தமிழ்நாட்டுடன் சேர்ந்து எம்மை அழிப்பதற்கு முயற்சிக்கின்றனர் என்ற

# சிங்கள மக்களின் மனப்பான்மை மாற வேண்டும்

### மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை

தமிழர்கள் என்றால் எங்களுக்கு எதிரிகள். தமிழ் நாட்டுடன் சேர்ந்து எம்மை அழிக்கப் பார்க்கிறார்கள் என்று நினைக்கும் சிங்கள மக்களின் மனப்பான்மை மாற வேண்டும்! எமக்கு உரிமைகள் வழங்க வேண்டும் என்ற கருத்தை அவர்கள் ஏற்க வைக்க வேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தெரிவித்தார். இன்றைய அரசியல் நெருக்கடி குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிங்கள மக்கள் இனவாதிகளாலும் இனவாத பத்திரிகை ஊடகங்களாலும் ஏமாற்றப்படுகிறார்கள். தமிழர்களுக்கு எதிரியாக்கப்படுகிறார்கள். தங்கள் அரசியல் அதிகாரங்களை தக்கவைக்கவும் வாக்கு, வங்கிகளை காப்பாற்றுவதற்காகவும் அரசியல் தலைவர்களாலும் அமைப்புகளாலும் இனவாதம் தூவி விடப்படுகின்றது. தூய சிந்தனையற்ற அந்த இனவாதிகளின் போக்கிற்கு சிங்கள மக்கள் பலியாகிவிடக்கூடாது.

குறித்த இனவாதிகளை வளர்த்து விடுவதற்காக சில பத்திரிகைகள் திட்டமிட்டே செயற்பட்டு வருகின்றன. இந்நிலை மாற்றப்பட வேண்டும். இனவாத உணர்வுகளை தூண்டிவிடுவதனால் எதுவுமே ஆகப்போவதில்லை.

இலங்கை அரசியலைப் பொறுத்தவரை தேசியத் தந்தையென்று யாரையுமே குறிப்பிட முடியாது. இருந்த ஒரு சில தலைவர்களும் இனவாதத்தை இந்த நாட்களிலிருந்து போக்க பாடுபடவில்லை என்றே கூற வேண்டும். வீரகேசரி போன்ற பத்திரிகைகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் காட்டும் வகையில் சிங்களத்திலும் செய்திகளை வெளியிட முன்வர வேண்டும். அப்பொழுதுதான் தமிழ் மக்களுக்குரிய பிரச்சினைகளையும் தேவைகளையும் சிங்கள மக்கள் உணர்ந்துகொள்வார்கள்.

இன்றைய பத்திரிகைகள் இனவாதத்தைத் தணிப்பதற்குப் பாடுபடுவதைவிட அதைத் தூண்டுவதற்கே உழைத்து வருகின்றன. அந்த வகையில் வீரகேசரி போன்ற பத்திரிகைகள் நடுநிலை தவறாத போக்கில் தமது சேவைகளை ஆற்றி வருகின்றன.

இன்னும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரக் கூடியவிதத்தில் செயற்பட்டுவரும் இந்த நிறுவனம் சிங்கள மக்கள் மத்தியில் செல்லக்கூடிய விதத்தில் சகோதர பத்திரிகையொன்றை நடத்த முன்வர வேண்டுமென சிவில் அமைப்புகளின் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம். தமிழ்மக்கள் இந்த நாட்டில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்தவர்கள். சிங்கள மக்கள் இந்த நாட்டுக்கு வரும்போதே தமிழ்மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை சிங்கள சகோதரர் ஏற்றுக்கொள்வதுடன் தமிழ் மக்கள் உரிமையைப் பெற அவர்கள் உதவவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

## பெரியபண்டிவிரிச்சான் ஆலயத்திருவிழா





பெரிய பண்டிவிரிச்சான் தூய மரிய கொறற்றி ஆலயத்திருவிழா கடந்த 06.07.2013 அன்று பங்குத்தந்தை அருட்பணி. ஆரோக்கியம் அடிகளார் தலைமையில் கொடியேற்றப்பட்டு ஆரம்பமாகியது. அன்றைய திருப்பலியை மறைமாவட்ட நிதிப்பொறுப்பாளர் அருட்பணி அன்ரன் அடிகளார் நிறைவேற்றி மறையுரை ஆற்றினார். நம்பிக்கை ஆண்டாம் இவ்வாண்டில் மறைமாவட்ட திட்டத்திற்கு ஏற்ப ஒவ்வொரு நாளும் விசுவாசத்தை பற்றிய தலைப்பிலான மறையுரையுடன் நவநாள் இடம்பெற்றது.

15.07.2013 அன்று காலை 7.00 மணிக்கு மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் தூய மரியகொறற்றியின் திருவிழாத்திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து தேர்ப்பவனி முதல் முறையாக ஆலயத்தைச் சுற்றி இடம்பெற்றது. இத்திருவிழாவை பங்குத்தந்தை அருட்பணி. ஆரோக்கியம் அடிகளார் சிறப்புற ஏற்பாடு செய்திருந்தார்.

தகவல் : பி. நிலோஜன் பெர்ணான்டோ

## தேவன்பிட்டி பங்கில் நற்கருணைப் பேரணி

தேவன்பிட்டி பங்கில் கடந்த 03.08.2013 சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் பங்குத்தந்தை றொக்சன் குரூஸ் அடிகளாரின் தலைமையில் நற்கருணைப்பவனி இடம்பெற்றது.

முதலில் புனித சூசையப்பர் ஆலயத்தில் அலங்கரிக்கப்பட்ட இடத்தில் நற்கருணை ஆசீர்வாதத்துடன் பவனி ஆரம்பமாகி, புதுக்காடு கிராமத்தில் அமைந்துள்ள தூய யோசவ்வாஸ் ஆலயத்தில் அருட்சகோதரி அகஸ்ரின் அவர்களினால் நற்கருணை அனுபவம் பகிரப்பட்டு நற்கருணை ஆசீர்வாதமும் இடம்பெற்றது. பின் புதுக்காடு கிராம வீதி வழியாக பவனியாகக் கொண்டுசெல்லப்பட்டு பொதுவான இடத்தில் இடம் அலங்காரம் செய்யப்பட்டு முழங்காவில் அன்பக அருட்தந்தை சுவின் அவர்களினால் திருப்பலி நிறைவேற்றப்பட்டு நற்கருணை ஆசீர்வாதமும் இடம்பெற்றது.

பின் பங்குத்தந்தை அவர்களால் நற்கருணை அனுபவம் பகிரப்பட்டது. இந்நற்கருணைப் பேரணியில் 1000க்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.

தகவல் : மறையாசிரியர், எ. லூர்த்துநாயகி,
புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.

## நானாட்டான் பிரதேச செயலகத்தில் மாணவர்களுக்கான பொது அறிவு வினாடி வினாப் போட்டி

நானாட்டான் பிரதேச செயலக பரப்பெல்லைக்குட்பட்ட நானாட்டான் கோட்டப் பிரிவு O/L, A/L மாணவர்களைக் கொண்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பொது அறிவு தொடர்பான வினாடி வினாப் போட்டி கடந்த 06.07.2013ம் திகதி சனிக்கிழமை செயலக மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

மாணவர்களை நல்ல குறிக்கோளுடன் ஒழுக்கமும், அறிவுத்திறனும் மிக்கவர்களாய் ஆக்கவேண்டிய பொறுப்பு பாடசாலைச் சமூகத்திற்கும் மேலாக பெற்றோர், நலன் விரும்பிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பிரதேச மட்ட நிறுவனங்கள், அமைப்புகளுக்கும் உண்டு என்ற உணர்வு இன்று ஏற்பட்டுவருகின்றது.

விரைந்து செல்லும் விஞ்ஞான தொழில்நுட்ப யுகத்தில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பொது விடயங்கள் தொடர்பான அறிவு மிகுந்த செல்வாக்குச் செலுத்துவதை மறுக்க முடியாது. மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி மற்றும் பல்வேறுபட்ட தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கும், வகிக்கின்ற பதவிகளில் உயர்வு பெறுதல் மற்றும் தடைதாண்டல் பரீட்சைகள், தேசிய ரீதியான பொதுப் பரீட்சைகளில் வெற்றி பெற்றுக்கொள்வதற்கும் பொது அறிவு தொடர்பான விடயங்கள் மிக மிக அவசியமாகத் தேவைப்படுகின்றது.

எனவேதான் நானாட்டான் பிரதேச செயலகம் தனது செயற்பரப்பெல்லைக்கு அப்பால் இவ்வாறான புதிய முயற்சிகளில் இறங்கியது. நானாட்டான் பிரதேச செயலாளர் திரு. க. அ. சந்திரஜயா அவர்களின் திட்மிடலில் அலுவலர்களின் ஒத்துழைப்புடன் World Vision, Sewa Lanka மற்றும் OfERR முதலிய நிறுவனங்களின் அனுசரனையுடன் மேற்படி போட்டியை நடாத்தியது. இப்போட்டியில் 1ம், 2ம், 3ம் இடங்களை முறையே

1. மன்/ புனித ஆனாள் ம.ம.வி, வங்காலை
2. மன்/ நானாட்டான் ம.வி
3. மன்/ இலகடிப்பிட்டி றோ.க.த.க.பாடசாலை

ஆகிய பாடசாலைகள் பெற்றுக்கொண்டன. போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் பெறுமதியான சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், வெற்றி பெற்ற பாடசாலைகளுக்கும், மாணவர்களுக்கும் பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன.



இந்நிகழ்வின் பிரதம விருந்தினராகவும் பிரதம மத்தியஸ்தராகவும் முருங்கன் டொண் பொஸ்கோ இல்ல அருட்தந்தை மெல்வின் அடிகளார் கலந்துகொண்டதுடன், பிரதேச செயலகம் மாணவர்களின் கல்வி செயற்பாட்டு பரப்பெல்லைக்குள் இவ்வாறான புதிய முயற்சியில் இறங்கி செயற்படுவது பாராட்டிற்குரியது என தனது ஆசியுரையில் தெரிவித்தார்கள்.

மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் அனுமதியுடன் இடம்பெற்ற இந்நிகழ்வு சகல பாடசாலை முதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் பூரண ஒத்துழைப்புடன் சிறப்பாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

*தகவல் : S. சூசைநாயகம் றெவல் (JP), நிர்வாக அலுவலர்.*

## வவுனியா புனித அந்தோனியார் ஆலய 125வது யூபிலி பெருவிழா







பல்லின, சமய, சமூக மக்கள் வாழும் ஒரு பிரதேசமாகவும் வடக்கின் கேந்திர நிலையமாகவும் விளங்கும் வவுனியா மாவட்டம் பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வவுனியாப் பங்கில் ஏழு துணை ஆலயங்களையும், 27 அன்பியங்களையும் கொண்டமைந்த தாய்க் கோவிலாக புனித அந்தோனியார் ஆலயம் இறம்பை நகர் மத்தியில் நடு நாயகமாக அமைந்துள்ளது.

இதன் அருகே அமைந்திருக்கும் தற்போதைய இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் என அழைக்கப்படும் பாடசாலை ஆரம்பத்தில் புனிதரின் நாமம் தாங்கி புனித அந்தோனியார் பாடசாலை என்றே அழைக்கப்பட்டது. ஒவ்வொரு செவ்வாய் தோறும் காலை முதல் மாலை வரை எவ்வித பாகுபாடுமின்றி புதுமைகள் பல புரிந்து வரும் புனிதராம் அந்தோனியாரை வணங்க மக்கள் பலர் வந்துசெல்கின்றனர்.

இவ்வாலயம் 07.05.1888இல் வண ஆயர் பொன்சீன் மெலிசன் ஆண்டகை அவர்களால் அத்திவாரக்கல் நடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. பங்கு மக்களின் விசுவாசத்தை ஆழப்படுத்தி, ஆன்மீக தாகத்தைத் தணித்து பல புதுமைகள் புரிந்துவரும் புனித அந்தோனியார் ஆலயம் 125 ஆண்டுகளைக் கடந்து இன்று வானுயர நிமிர்ந்து நிற்கின்றது. புனித அந்தோனியாரின் நினைவு நாளாகிய ஆனி மாதம் 13ம் திகதி வவுனியா மா நகரமே விழாக்கோலம் பூண்டது. வீதிகள் அலங்கரிக்கப்பட்டு எங்கு நோக்கினும் புனிதரின் திருப்படங்களும், மாலைகளும் வர்ண விளக்குகளும் ஆலயத்தையும் வீதிகளையும் அழகு செய்தன.

அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இரா. யோசப்பு ஆண்டகை அவர்களின் தலைமையில் அயற் பங்குகளின் பங்குத் தந்தையர்களும் ஒன்றிணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இவ்விழாவிற்கு இந்து, பௌத்தம், இஸ்லாம் மத குருமார்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஏனைய பிரமுகர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். என்றுமில்லாதவாறு மக்கள் வெள்ளம் ஆலயத்தில் மட்டுமன்றி ஆலய வளாகத்தினுள்ளும் நிரம்பி வழிந்தது.

திருப்பலி முடிவடைந்ததும் புனித அந்தோனியார் திருச்சுருபப் பவனி இடம்பெற்றது. இவ்வருடம் வவுனியா நகரின் பிரதான வீதிகள் மற்றும் கடை வீதிகள் ஊடாகவும் அனைத்து சமய மக்களும் புனிதரின் ஆசீரைப் பெறுவதற்காக பவனி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இறுதியில் ஆயர் அவர்களினால் திருச்சுருப ஆசீர் வழங்கப்பட்டது. கோடி அற்புதராம் புனித அந்தோனியாரை நாடி வந்த அனைத்து பக்தர்களுக்கும் புனிதரின் நல்லாசிகள் கிடைத்தது. அத்துடன் அன்றைய நாள் மதியம் அன்னதானமும் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

அன்று மாலை 5.00 மணிக்கு கலை நிகழ்வுகளும் ஆலயத்தின் 125வது ஆண்டு யூபிலி மலரும் வெளியிடப்பட்டது.

இறுதி நிகழ்வாக 125வது ஆண்டு விழாவையொட்டி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமாக நடைபெற்ற போட்டிகளின் பரிசில்கள் பிரதம விருந்தினரால் வழங்கப்பட்டது.

இவ்விழா ஒழுங்குமுறையாக நடைபெறுவதற்கு பங்கு மக்களை நெறிப்படுத்தி, பலவகையில் ஆலோசனைகள் வழங்கிய பங்குத்தந்தை அருட்பணி. எஸ். ஜே. பெப்பி சோசை அவர்களும் உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. எஸ். அருட்குமரன் அவர்களும் பாராட்டுதற்குரியவர்களே.

- ஆக்கம்: ஆர். கலிஸ்ரா (ஆசிரியை)

## விசுவாச ஆண்டு சிறப்புப் பொழிவு

# விசுவசிக்கும் உள்ளங்கள் விசுவாசத்தின் விளைநிலங்கள்

கி. அருளப்பு, தன்னார்வ இறைபணியாளர், சின்னக்கடை, மன்னார்.

கடவுள் எம் ஒவ்வொருவரையும் தம்முடைய சாயலாகவும் பாவனையாகவும் படைத்தாரென்று ஆதியாகமம் எமக்கு கூறுகின்றது. தொடக்க நூல் 1: 26 - 27ல் இதை நாம் பார்கின்றோம். இந்த நிலையை தலைகீழாக மாற்றி கடவுளை தன்னுடைய (மனித) சாயலாகவும், பாவனையாகவும் உருவாக்கும் சோதனை மனிதனுக்கு தொடர்ச்சியாக வருகிறது. அப்படிப்பட்ட ஓர் நிலையை சமகாலச் சூழ்நிலைகள் கோடிட்டுக் காட்டுகின்றன. அன்றும் இன்றும் இந்நிலைகளை நாம் பார்க்கின்றோம்.

“இஸ்ராயேல் மக்களே! ஆண்டவரின் வாக்கைக் கேளுங்கள். நாட்டில் குடியிருப்பவர்களோடு ஆண்டவருக்கு வழக்கொன்று உண்டு. நாட்டில் உண்மையும் இல்லை, இரக்கமும் இல்லை. கடவுளை அறியும் அறிவும் இல்லை. பொய்யாணை, பொய்யுரை, கொலை, களவு, விபச்சாரம் பெருகிவிட்டது. எல்லாக்கட்டுப்பாடுகளையும் தகர்த்தெறிகின்றனர். இரத்தப்பழிக்குமேல் இரத்தப்பழி குவிகிறது” என்று ஒசே: 4: 1- 2 கூறுகின்றது.

இவ்வுலகிலே பலவிதமான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் இந்த உலகை ஒரே மாதிரியாகப் பார்ப்பதில்லை. சிலர் தங்களுடைய உடல் வலிமையிலே நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் தங்கள் மனவலிமையிலே நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். வேறு சிலர் தங்களுடைய பொருளாதார வளங்கள், பணச்செல்வாக்கு இவைகளில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். கறுப்புக் கண்ணாடி போட்டவருக்கு உலகம் கருமையாகத் தெரியும். பச்சைக் கண்ணாடி போட்டவருக்கு உலகம் பசுமையாகத் தெரியும். இது அவரவர்கள் போடும் கண்ணாடியின் நிறத்தைப் பொறுத்தது.

ஆனால் ஆண்டவர் இயேசு இந்த விசுவாச ஆண்டிலே என் வார்த்தையிலே நம்பிக்கைகொள்ளுங்கள் என்கிறார். உங்கள் உள்ளத்தில் ஊன்றப்பட்ட வார்த்தையைப் பணிவோடு ஏற்றுக்கொள்ளுங்கள். அதுவே உங்களை மீட்கவல்லது. இறைவார்த்தையை கேட்பதோடு மட்டும் நின்று உங்களை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். அதன்படி நடப்பவராய் இருங்கள் என யாக்கோபு 1: 22- 23 கூறுகிறது.

ஆபிரிக்க மக்கள் அடிமையானதைப்பற்றி டான்சானியா நாட்டு முன்னாள் அதிபர் ஜூலியஸ் இப்படிக் கூறுகின்றார், “வெள்ளையர்கள் எங்கள் மண்ணில் கால்வைத்தபோது எங்கள் கையில் நிலம் இருந்தது. அவர்கள் கையில் பைபிள் இருந்தது. கண்களைமூடி செபிக்கச் சொன்னார்கள். நாங்கள் கண்களைமூடி செபம் செய்துவிட்டு கண்களை மீண்டும் திறந்தபோது எங்கள் கையில் பைபிள் இருந்தது. அவர்கள் கையில் எங்கள் நிலம் இருந்தது.”

விவிலியம் மனித வர்க்கத்தின் விடுதலைக்காக இசைக்கப்பட்ட மாபெரும் வரலாற்றுக்கீதம். காலப்போக்கில் இவ்வார்த்தைகளை சில மனிதர்கள் சுயநலக் கண்ணோட்டத்தோடு பார்க்கின்றார்கள். அடிமை செய்யப்பட்டோர் தங்கள் கைகளில் இருந்த விவிலியத்தைத் திறந்த போதுதான் தெரியவந்தது தெளிவு.

இறைவனே தான் படைத்த மனித இனத்தை அடிமையாகப் பாவிக்க விரும்பாதபோது இறைவார்த்தைகள் மனிதவர்கத்தை எக்காரணத்தைக் கொண்டும் அடிமைப்படுத்தாது என்பதே அதன் தெளிவு. எம் உள்ளம் திறக்கப்பட்டால்தான் கடவுளின் வார்த்தை நமக்குள்ளே நுழையும். கடவுள் இருக்கின்றவர். நாம் இருக்க வைக்கப்படுகின்றவர்கள் என்பதை விசுவசிக்கும் உள்ளங்கள் மறந்து விடக்கூடாது.

ஒருமுறை ஒரு கோழி தன் முட்டைகளை அடைகாத்து வந்தது. ஏதோ ஒரு விதத்தில் ஒரு கழுகு முட்டையும் அதோடு சேர்ந்துகொண்டது. உரிய காலத்தில் குஞ்சுகள் பொரித்து தாய்க் கோழியோடு வாழ்ந்து வந்தது. ஒரு நாள் ஆகாயத்தில் மிக உயரமாக சில கழுகுக்குஞ்சுகள் பறந்து வந்ததை இந்த கோழிக்குஞ்சோடு சேர்ந்த கழுகுக்குஞ்சு கண்டது. அது தாய்க் கோழியைப் பார்த்து அம்மா இவர்களைப்போல் நாமும் மேலே பறந்து செல்ல முடியாதா? என்று கேட்டது. அதற்குத் தாய் கோழிப்பறவை, “இனங்களில் மிக உயரமாகப் பறப்பவர்கள் அவர்களே. இவர்களைப் போல் நம்மால் பறக்க முடியாது. நாம் தரையிலே உள்ள குப்பைகளை, கூழங்களை கிண்டிக்கிளறி உண்டு வாழ்பவர்கள். இதுவே எமது இயல்பு” என்றது கோழி.

நம் செயல்கள் எங்கிருந்து பிறக்கின்றது! எது நம்மை செயல்படத் தூண்டுகின்றது. இது பற்றி விசுவசிக்கும் உள்ளங்களாகிய நாம் சற்று சிந்திப்போம்.

நற்கருணை விருந்துதான் கிறிஸ்தவ வாழ்வின் மையம். அங்கிருந்துதான் நம் செயல்கள் பிறக்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் கடவுளின் சாயலாகவும் பாவனையாகவும் படைக்கப்பட்டோம் என்பதே நம்மைத் தூண்டுகின்றது.

நம் இயல்பை நாம் உணராதபோது நாமும் கோழிக்குஞ்சோடு சேர்ந்த கழுகைப் போன்றவர்களே. அது தன் இயல்பை மறந்து தான் சேர்ந்து வாழ்ந்த இனத்தோடு தன்னை மாற்றிக்கொண்டது.

நாமும் உலகத்தாரோடு சேர்ந்து எம் இயல்பை மறந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாம் யாரென்று நம் இயல்பை உணராதவரை நம் செயல்கள் இயல்புச்செயல்கள் ஆவதில்லை. எனவேதான் இயேசு நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கின்றீர்கள் என்றார். உப்பு உவர்ப்பற்றுப் போனால் அது வெளியிலே கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும். வேறொன்றிற்கும் உதவாது. மத்தேயு 5:13 வசனம் இதை விபரிக்கின்றது. நாம் உப்பு என்றால் நம் இயல்புதான் உவர்ப்புத்தன்மையான சாரம்! நம் இயல்பை நாம் இழந்துவிட்டால் நாம் சாரமற்ற உப்புத்தான். நம் இயல்பை நாம் வாழாதுவிட்டால் நாம் வெறும் குப்பைதான். நம் இயல்பை வாழ்வதுதான் மனித வாழ்வின் நம்பிக்கை. அவர்கள்தான் விசுவாசத்தின் விளைநிலங்கள்.

நம் இயல்புக்கு உப்பை உவமையாக கூறிய இயேசு நீங்கள் உலகிற்கு ஒளி என்றார். ஒளி இவ்வுலகிற்கு வந்திருப்பதை அறிந்திருந்தும் தம் செயல்கள் தீயனவாய் இருந்ததால் மனிதர் ஒளியை விட இருளையே விரும்புகின்றனர் (யோ. 3:19). நான் யார்? இறைவன் யார்? என்பதை நாம் ஒவ்வொருவரும் சுய ஆய்வு செய்யவேண்டும். தம் வழியை செம்மைப்படுத்துவோர் கடவுள் அருளும் மீட்பைக் கண்டடைவர் (திருப்பாடல் 50: 23). எனவே விவிலியத்தை விரிப்போம். விளக்கத்தைக் காண்போம். விடியலை வருவிப்போம். விசுவசிக்கும் உள்ளங்கள் ஆவோம்.

# அன்பியப் பணியாளர்களுக்கு மறைக்கோட்ட ரீதியில் இரு நாள் பயிற்சி

நமது கிறிஸ்தவ விசுவாச வாழ்வு அன்பியங்களில் வாழப்பட முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாதமும் பங்குகளில் அன்பிய இணைப்பாளர்களுக்கு பயிற்சியும் ஊக்குவிப்பும் அளிக்கப்பட்டு வருகின்றன.

இவ்விசுவாச ஆண்டில் பங்குமட்ட அன்பியச் செயலணி ஒன்றை உருவாக்கும் நோக்கில் மறைக்கோட்ட மட்டத்தில் பயிற்சி வழங்கத் தீர்மானித்துள்ளோம். இப்பயிற்சியில் பங்கெடுப்போர் மறைக்கோட்ட மட்ட தொடர் பயிற்சிக்கு உள்வாங்கப்படுவார்கள். எனவே இம்முயற்சிக்கு பூரண ஒத்துழைப்பை வேண்டுகின்றோம்.

எனவே உங்கள் பங்கில் இருந்து ஒவ்வொரு மறைக்கோட்டத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஒன்றுகூடலுக்கு 5 அன்பிய பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம். மறைக்கோட்ட ரீதியிலான இரு நாள் பயிற்சிக்குரிய கால, நேர, இடங்களை இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளோம். காலதாமதம் செய்யாது எதிர்வரும் 12.08.2013ம் திகதிக்கு முன்னர் அன்பியத்தொடர்பகத்திற்கு பங்கெடுக்க உள்ளவர்களின் பெயர் விபரத்தை தெரிவிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

| இல | காலம் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 01. | 25.08.2013 ஞாயிறு - 26.08.2013 திங்கள் | பி.ப 4.00 - பி. ப 1.00 | அடம்பன் கார்மேல் மடம், மடு ம. கோ. |
| 02. | 28.08.2013 புதன் - 29.08.2013 வியாழன் | பி.ப 4.00 - பி. ப 1.00 | கிறிஸ்து அரசர் ஆலயம், முருங்கன் ம.கோ. |
| 03. | 01.09.2013 ஞாயிறு – 02.09.2013 திங்கள் | பி.ப 4.00 - பி. ப 1.00 | அன்பியத்தொடர்பகம், மன்னார் ம.கோ |
| 04. | 08.09.2013 ஞாயிறு – 09.09.2013 திங்கள் | பி.ப 4.00 - பி. ப 1.00 | புனித அந்தோனியார் ஆலயம் இறம்பைக்குளம் வவுனியா மறைக்கோட்டம். |

இயக்குனர், சூ. டக்ளஸ் மில்ரன் லோகு, அன்பிய விவிலிய ஆணைக்குழுக்கள் மன்னார் மறைமாவட்டம்.

## சிறப்புக் கட்டுரை

# இயேசுவின் செப வாழ்வு

அருட்சகோதரி மேரி றுவினா, தி.கு.க. மடம், மன்னார்.

இயேசுவின் வாழ்வில் முதன்மையானது செபம். இயேசு செபிக்கும் மனிதனாக நற்செய்தியில் காணப்படுகின்றார். யூத சமுதாயத்தின் வழக்கம் மூன்று வேளை செபிப்பதாகும். இயேசுவும் யூதனாக இருந்தபடியால் மூன்று வேளையும் செபித்தார். ஆனால் அவர் அதோடு நின்றுவிடவில்லை. இயேசு எந்த நேரங்களில், எந்த இடங்களில் எப்படி வேண்டுதல் செய்தார் என்பதை நற்செய்தி எமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுவதைத் தெரிந்துகொள்வோம்.

விடியற்காலை கருக்கலில் எழுந்து தனிமையான ஓர் இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கே அவர் இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார் (மாற். 1:35). அந்நாளில் அவர் வேண்டுவதற்காக ஒரு மலைக்குப் போனார். அங்கு கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட்டார் (லூக். 6:12). அவரோ ஆள் நடமாட்டம் இல்லாத இடங்களுக்குச் சென்று தனித்திருந்து இறைவனிடம் வேண்டிவந்தார் (லூக். 5:16). இயேசு மீண்டும் தனியாய் மலைக்குச் சென்றார் (யோ. 6:15). மக்கள் எல்லோரும் திருமுழுக்குப் பெறும் வேளையில் இயேசுவும் திருமுழுக்குப் பெற்று இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தபோது வானம் திறந்து தூய ஆவி புறா வடிவில் தோன்றி அவர்மீது இறங்கியது. அப்பொழுது, “என் அன்பார்ந்த மகன் நீயே. உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்” என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது. தந்தை மகனைப் பற்றிச் சான்று பகர்கின்றார் (லூக். 3:21-22). இயேசு அலகையினால் சோதிக்கப்படுவதற்காகப் பாலை நிலத்திற்கு தூய ஆவியால் அழைத்துச் செல்லப்பட்டார். அவர் நாற்பது நாள் இரவும் பகலும் நோன்பிருந்து இறைவனிடம் உரையாடி வேண்டுதல் செய்துகொண்டிருந்தார் (மத். 4:1-2). ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து வானத்தை அண்ணார்ந்து பார்த்து, அவற்றின்மீது ஆசிகூறி பிட்டு மக்களுக்குப் பரிமாறுவதற்காகச் சீடர்களிடம் கொடுத்தார். (லூக். 9:16) புதுமைகள் செய்யுமுன்பும் இயேசு செபிக்கிறார். இயேசு ஓர் இடத்தில் இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார். அது முடிந்ததும் அவருடைய சீடர்களுள் ஒருவர் அவரை நோக்கி, “ஆண்டவரே யோவான் தம் சீடருக்கு இறைவனிடம் வேண்டக் கற்றுக்கொடுத்ததுபோல் எங்களுக்கும் கற்றுக்கொடும் என்று கேட்கிறார்கள் (லூக்: 11:1).

இயேசு துன்புறுத்துவோருக்காகச் செபித்தார். “தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை என்று சொன்னார் (லூக். 23:34). இயேசு தனித்து இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தபோது சீடர் மட்டும் அவரோடு இருந்தனர். பேதுருவுக்காகச் செபிக்கின்றார். “ஆனால் நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன். நீ மனம் திரும்பியபின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து” என்றார் (லூக். 22:32). இயேசு நண்பர்களுக்காகச் செபிக்கின்றார். “தூய தந்தையே, நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்களித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்” (யோ:17:11). உலகுக்காக செபிக்கின்றார். “நீதியுள்ள தந்தையே, உலகு உம்மை அறியவில்லை, ஆனால் நான் உம்மை அறிந்துள்ளேன். நீர் என்னை அனுப்பினீர் என்று அவர்களும் அறிந்துகொண்டார்கள். நான் அவர்களோடு இணைந்திருக்கவும், நீர் என்மீது கொண்டிருந்த அன்பு அவர்கள்மீது இருக்கவும் உம்மைப்பற்றி அவர்களுக்கு அறிவித்தேன், இன்னும் அறிவிப்பேன்” (யோ. 17:25).

**இயேசுவின் செபத்தில் காணப்பட்ட அம்சங்கள் :**

1. நம்பிக்கை நிறைந்த செபம்

யேசு இறந்த லாசருடைய கல்லறையில் செபிக்கிறார். யேசு அண்ணார்ந்து பார்த்து, “தந்தையே நீர் என் வேண்டுதலுக்குச் செவிசாய்த்ததற்காக உமக்கு நன்றி கூறுகிறேன். நீர் எப்போதும் என் வேண்டுதலுக்குச் செவிசாய்க்கிறீர் என்பது எனக்குத் தெரியும். எனினும் நீரே என்னை அனுப்பினீரென்று சூழ்ந்து நிற்கும் இக்கூட்டம் நம்பும்பொருட்டே இப்படிச் சொன்னேன்” என்று கூறினார் (யோ. 11: 41- 42).

2. பணிவு நிறைந்த செபம்

பிறகு அவர் அவர்களைவிட்டுக் கல்லெறி தூரம் விலகிச்சென்று முழந்தாட்படியிட்டு இறைவனிடம் வேண்டினார். “தந்தையே உமக்கு விருப்பமானால் இத்துன்பக்கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும், ஆனாலும் என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்” என்று கூறினார் (லூக். 22:41-42).

3. ஆயுதமாகக் கொண்ட செபம் :

அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் தம்மைச் சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்த குரலெழுப்பி கண்ணீர் சிந்தி மன்றாடி வேண்டினார். அவர் கொண்டிருந்த இறைபற்றுக்கலந்த அச்சத்தை முன்னிட்டு, கடவுள் அவருக்குச் செவிசாய்த்தார் (எபி. 5:7).

யேசுவுடைய வாழ்விலே செபம் எத்தகையதாக அமைந்திருந்த தென்பதைப்பற்றிச் சிந்தித்த நாம், எமது வாழ்வில் செபம் எந்த இடத்தைப் பிடித்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்ப்போம்.

செபம் என்றால் இறைதந்தையிடம் எம் உள்ளங்களை எழுப்பி அன்புடனும் நம்பிக்கையுடனும் உரையாடுதல். எனவே எமது செபத்தில் நம்பிக்கையும், பணிவும் இருக்க வேண்டும். அத்துடன் உண்மையுடனும், அன்புடனும் செபிக்கவேண்டும். செபத்தில் நிலைத்திருக்க வேண்டும். இடைவிடாது. செபிக்கவேண்டும். சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள் என்று யேசு சொன்னார் (மத் 26:41). இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள், எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள் என்று புனித சின்னப்பர் தெசலோனிக்கருக்கு எழுதிய கடிதத்தில் கூறுகின்றார் (1தெச 5:17). யேசுவின் காலடியில் இருந்து அவருடைய வார்த்தையைக் கேட்ட மரியாளை யேசு பாராட்டினார். ஆயிரம் பணிகள் செய்வதைவிட அவருடைய காலடியில் அமர்ந்திருந்து அவருடைய வார்த்தையைக் கேட்பது மேல். செபம் இன்றி வாழ்வு இல்லை. செபத்திற்கு முதலிடம் கொடுப்போம்.

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# தமிழருக்கு தொடர்ந்தும் எரிச்சலூட்டுகிறது அரசு!
## ஆஸ்திரியத் தூதுவரிடம் யாழ் ஆயர் முறைப்பாடு

"போர் முடிந்த இன்றைய சூழலில் தமிழ் மக்களை எரிச்சலூட்டும் நடவடிக்கைகளை அரசும் சிங்கள மக்களும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். தமிழ் மக்களைத் தொடர்ந்தும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலையே இங்கு காணப்படுகின்றது."


இவ்வாறு யாழ் மாவட்டத்துக்கு போரின் பின்னர் முதல் முறையாக வருகை தந்த ஆஸ்திரியத் தூதுவர் ரைமுண்ட் மாஜிலிடம் யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை எடுத்துக் கூறினார்.

யாழ். மறைமாவட்டத்துக்கு கடந்த 17.07.2013 அன்று சென்ற இலங்கை மற்றும் இந்தியாவுக்கான ஆஸ்திரிய தூதுவர் அரியாலை நாவலடியிலுள்ள இந்திய வீட்டுத்திட்டம். யாழ். போதனா வைத்தியசாலை, யாழ். பொது நூலகம் ஆகியவற்றைச் சென்று பார்வையிட்டார், யாழ். மாவட்ட அரச அதிபரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அத்துடன் யாழ். ஆயர் இல்லத்தில் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையையும் சந்தித்து சமகால நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார். இதன்போதே யாழ். ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சந்திப்புக் குறித்து ஆயர் மேலும் தெரிவித்ததாவது, வடமாகாண சபைத் தேர்தல் குறித்து தூதுவர் என்னிடம் கேட்டார். உலகத்துக்கு நாங்கள் எங்கள் பிரதிநிகள் யார் என்று தெரியப்படுத்த வேண்டும், எங்கள் உரிமையை வெளிக்காட்ட வேண்டும். மாகாண சபை வேகமாகப் பூரணத் தன்மையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாக இருந்தால். அரசும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும் என அவரிடம் கூறினேன்.

சிங்களவர்கள் தொடர்ந்தும் தமிழர்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர். தமிழ் மக்களுக்கு எரிச்சலூட்டும் நடவடிக்கைகளிலேயே அவர்கள் தொடர்ந்தும் ஈடுபடுகின்றனர் என்பதைத் தூதுவரிடம் விளக்கினேன். இராணுவம் தமிழ் மக்களின் நிலங்களை அபகரிக்கின்றது. தமிழ் மக்கள் போரை விரும்பவில்லை. சிங்கள மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் தமிழ் மக்கள் அனுபவிக்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள் என தூதுவரிடம் எடுத்துரைத்தேன் என்றார்.



### யாழ். மணியந்தோட்டப் பகுதியில்
## திருச்சொருபம் உடைத்தழிப்பு

யாழ். மணியந்தோட்ட ஐந்தாம் ஒழுங்கைப் பகுதியில் பொது மக்களால் வழிபாட்டிற்காக வைக்கப்பட்டிருந்த திரு இருதய ஆண்டவரின் திருச்சொருபம் விஷமிகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மணியந்தோட்டப் பகுதியில் கத்தோலிக்க மக்களால் வழிபாட்டிற்கென அமைக்கப்பட்டிருந்த திருச்சொருபமே கடந்த 5.6.2013 அன்று இரவு சேதமாக்கப்பட்டுள்ளது. இவ்வழிபாட்டுச் சின்னம் உடைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அப்பகுதி மக்களால் பங்குத் தந்தையிடமும் கிராம சேவையாளரிடமும் முறையிடப்பட்டுள்ளது.

குறித்த திருச்சொருபத்தினை முழுமையாக உடைத்து சேதப்படுத்தியுள்ளதுடன் திருச்சொருபம் வைக்கப்பட்டிருந்த கண்ணாடிக் கூட்டினையும் அடித்து உடைத்துச் சேதமாக்கியுள்ளனர். இச்சம்பவம் கத்தோலிக்க மக்கள் மத்தியில் பெரும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பும் மணியந்தோட்டச் சந்தியில் வைக்கப்பட்டிருந்த அன்னை வேளாங்கண்ணி மாதாவினுடைய திருச்சொருபமும் உடைக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## '13'ஐ நீக்குவதற்கு அனுமதிக்க முடியாது
### மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் வலியுறுத்து

'13'ஆவது சீர்திருத்தத்தை நீக்குவது, அதில் மாற்றத்தை ஏற்படுத்துவது போன்றவற்றை ஒருபோதும் நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இவ்வாறு மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயரும் மட்டக்களப்பு சிவில் சமூகத்தின் போசகருமான மேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை தெரிவித்தார்.

மட்டக்களப்பு சிவில் சமூகத்தின் கூட்டம் மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் உள்ள சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

'13'ஐ நீக்குவதற்கோ அல்லது அதில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கோ நாம் ஒருபோதும் விரும்பவில்லை. 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்ந்திருக்க வேண்டும். இதை எமது ஆயர் பேரவையும் அண்மையில் தெரிவித்துள்ளது என்று அவர் தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு சிவில் சமூகத்தின் தலைவர் எஸ். மாமங்கராஜா தெரிவித்ததாவது, '13'இல் மாற்றத்தை ஏற்படுத்துவதை மட்டக்களப்பு சிவில் அமைப்பு கண்டிக்கின்றது. '13'ஐ அதன் ஆரம்பத்தில் எல்லோரும் எதிர்த்தாலும் தற்போது சிறுபான்மை மக்களுக்குள்ள ஒரே ஒரு கவசம் இந்த '13' தான் என்பதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். இதனால் சிறுபான்மை மக்களுக்குள்ள இந்த ஒரே ஒரு அதிகாரத்தையும் மாற்றுவதற்கு அல்லது அதில் திருத்தம் கொண்டுவருவதற்கு நாம் இடமளிக்க முடியாது என்றார்.

## 75வது அகவையில் யாழ் ஆயர் ஆயர் தினம் ஜீலை 3இல் கொண்டாடப்பட்டது

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் 3 சிறப்பு நிகழ்வுகளின் நினைவையொட்டி ஆயர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. 3.7.2013 அன்று ஆயரின் பெயர் கொண்ட புனிதர் விழாவும், ஆயரின் அபிஷேகத் தினமும், பிறந்த தினமும் ஒருங்கே கொண்டாடப்பட்டது.

அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் பாடசாலை மாணவர்கள், அருட்தந்தையர்கள், பொதுநிலையினருடன் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இது யாழ் ஆயரின் 75ஆவது பிறந்த தினம் என்பது குறிப்பிடத்தக்கது. 75 வயதை நிறைவு செய்யும் இன்றைய யாழ் ஆயரும் முன்னாள் மன்னார் ஆயருமான தோமஸ் செளந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கு மன்னார் மறைமாவட்ட இறைமக்கள் சார்பாக வாழ்த்துக்களையும் இறையாசீரையும் மன்னா தெரிவித்து மகிழ்கின்றது.

## ஞானசார தேரர் காலால் உதைத்தார்!
### நீதிமன்றத்தில் கிறிஸ்தவ போதகர் சாட்சியம்

இலங்கையின் கத்தோலிக்க வழிபாட்டிடம் ஒன்றின்மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் பொதுபல சேனா அமைப்பின் தலைவர் வண. ஞானசார தேரர் உட்பட 13 பேர்மீது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டது.

2008 ஜூன் மாதம் 7ஆம் திகதி கொழும்பு மாவட்டத்திலுள்ள தலாஹேனவில் கல்வாரி வழிபாட்டிடத்தில் தாக்குதல் நடத்தி தங்கச் சங்கிலி ஒன்றையும் கைத்தொலைபேசி ஒன்றையும் கொள்ளையடித்ததாகக் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டது.

ஞானசார தேரர் உள்ளிட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றச்சாட்டுகளை மறுத்திருந்தனர். விசாரணையின்போது கல்வாரி வழிபாட்டிடத்தின் போதகர் சாட்சியமளிக்கையில் வழிபாடுகள் நிறுத்தப்பட வேண்டுமென்று தன்னை மிரட்டிவந்த ஞானசார தேரர் தலைமையிலான கும்பல், வழிபாட்டிடத்தைத் தாக்கியதாகக் கூறினார். அச்சமயம் ஞானசார தேரர் தன்னைக் காலால் உதைத்துத் தாக்கியதாகக் குற்றம் சாட்டினார்.

அடுத்த கட்ட விசாரணை ஜூலை 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. விசாரணைக்குப்பின் கருத்துத் தெரிவித்த ஞானசார தேரர், பலவந்தமான கிறிஸ்தவ மதமாற்றங்களுக்கு எதிரான தனது போராட்டம் தொடருமென்றார்.

## புத்தகயா குண்டுத் தாக்குதலுக்கு கத்தோலிக்க ஆயர் பேரவை கண்டனம்

பெளத்தர்களின் வணக்க ஸ்தலமான புத்தகயாவில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலையிட்டு இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைகிறது என்று கத்தோலிக்க ஆயர் பேரவை விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கெளதம புத்தர் ஞானம் பெற்ற இடமாக பெளத்தர்களால் கருதப்படும் நகரிலே இந்த அசம்பாவிதம் நடைபெற்றுள்ளது. புகழ்பெற்ற வணக்க ஸ்தலத்திலே நடைபெற்ற இந்த வன்முறையை இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை கண்டிப்பதோடு இத்தகைய புனித ஸ்தலத்தின் பாதுகாப்பை அதிகாரத்திலிருப்பவர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம். எமது பெளத்த சகோதரர்களின் இந்தத் துன்ப அனுபவத்தில் நாமும் பங்குகொள்கிறோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*சுதேச குருக்கள் துறவியர் தினம் 2013*

## மண்ணின் மக்களே! விசுவாச விதையை விதைக்க முன்வாருங்கள்
### தேசிய இயக்குனரின் செய்தி

இறைதந்தை அவர் சாயலாகவும் அவர் உருவிலும் மனிதனைப் படைத்து, அவர் படைத்த உலகை ஆளும் பொறுப்பை மனிதனுக்களித்தார் என்பதை நாம் அறிவோம். எனினும் பாவத்தால் இறை – மனித உறவு முறிவடைந்தாலும் மனிதனை பாவத்திலிருந்து மீட்டு, நிலைவாழ்வை அறிமுகப்படுத்தி, இறைத்தந்தையின் அன்பை வெளிப்படுத்த, இவ்வுலகிற்கு வந்த இறைமகனான மீட்பராம் இயேசுவுக்கு வழங்கப்பட்ட பொறுப்பு அது என்பதையும் நாம் அறிவோம். தமக்கு வழங்கப்பட்ட அப்பொறுப்பை அவர் சரியாகச் செய்தார். தொடர்ந்தும் தமது விளைநிலத்தில் அறுவடையை மிகுதியாக்க தனது சீடர்களைக் கொண்டு கட்டியெழுப்பிய திருச்சபைக்கு அப்பொறுப்பை வழங்கினார்.

கிறிஸ்துவின் அழைப்பு,

- "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" (மத் 29:19)
- "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற் 16:15)

இவ்விறைவார்த்தைகளினூடாக அது தெளிவாகின்றது. கிறிஸ்துவின் சீடர்களும் அப்போஸ்தலர்களும் அவர்களுக்கு வழங்கப்பட்ட அப்பணியை – அதாவது கிறிஸ்துவின் விளைநிலத்தில் அறுவடையை மிகுதியாக்கும் பணியை ஆர்வத்துடன் நிறைவேற்றினர். அவர்கள் அன்று தாம் அறிந்திருந்த உலகிற்கு இயேசுவின் நற்செய்தியை எடுத்துச் சென்றனர். எனினும் அது அவ்வளவு இலகுவான காரியமல்ல. அதைப்பற்றி கிறிஸ்து தன் சீடர்களுக்கு முன்னறிவித்தார்.

"புறப்பட்டுப் போங்கள். ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவதுபோல உங்களை நான் அனுப்புகிறேன். உலகெங்கும் பறைசாற்ற பரவிச்சென்ற பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் பதினொரு அப்போஸ்தலர்களும் மறைசாட்சிகளாக தம் வாழ்வை அர்ப்பணித்ததன் வாயிலாய் அவ்விடயத்திலுள்ள பயங்கரத் தன்மை எமக்குத் தெளிவாக விளங்குகின்றது. உன்னத குரு கிறிஸ்துவும் மனித வர்க்கத்தை மீட்டுக்கொண்டது தம் வாழ்வை சிலுவையில் அர்ப்பணித்ததன் மூலமாகும். இப்பாரதூர பணியின் பொருட்டு கிறிஸ்து தம் சீடர்களுக்கு வாக்களித்தது ஒன்றே ஒன்று. அதாவது, கிறிஸ்துவின் வார்த்தைகளை போதிக்கும் வரையில் "உங்கள் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்பது பற்றியே மகிழுங்கள்" என்றார் (லூக் 10:30)

ஆதிக்கிறிஸ்தவர்கள் தமக்களிக்கப்பட்ட பணியை சரிவர நிறைவேற்றினாலும் கி.பி 2000ம் ஆண்டில், திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் "மீட்பரின் மறைதூதுப்பணி" எனும் "ரெடெம்டோரிஸ் மிஸ்ஸியோ" என்னும் சுற்றுமடலின் ஆரம்பத்திலேயே குறிப்பிடுவது, திருச்சபைக்கு வழங்கப்பட்டுள்ள மீட்பராம் இயேசுவின் மறைதூதுப்பணி முழுமையாய் நிறைவடையவில்லை. கிறிஸ்து பிறப்பின் பின் 2000ம் ஆண்டுகள் மலரும் இவ்யுகத்தில் மக்களினத்தை அண்ணளவாகப் பார்க்கும் போது, மறைத்தூதுப் பணியின் ஆரம்பம் மட்டுமே நிகழ்ந்துள்ளது. என்பது வெளிப்படுகின்றது" எனக் குறிப்பிட்டுள்ளார். அது உண்மைதான். உலக சனத்தொகையில் வெறும் 17% மட்டுமே கத்தோலிக்கர்கள். முழு ஆசிய சனத்தொகையிலும் நூற்றுக்கு 11% மட்டுமே கத்தோலிக்கர்கள். எமது இலங்கைச் சனத்தொகையிலும் நூற்றுக்கு 6.5% அல்லது 7% மட்டுமே கிறிஸ்துவை அறிந்த, அவரை பின்பற்றுபவர்கள் உள்ளனர். அப்படியாயின் திருத்தந்தை கூறியது முற்றிலும் உண்மையே என்பதுடன், இது தொடர்பாக எமக்குள்ள பொறுப்பும் மிக ஆழமானது என்பதும் தெளிவாகின்றது.

சுதேச குருக்கள், துறவியர் தினத்தை நினைவுகூரும் இந்நாளில் எமது இலங்கை தேசத்தை நோக்கி எமது மனங்களைத் திருப்புவோம். இங்கு முதலில் நாம் கிறிஸ்து கூறியதை நினைவூட்டிக்கொள்வோம். "அறுவடை மிகுதி, வேலையாள்களோ குறைவு, ஆகையால் தேவையான வேலையாள்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள் என்றார்." (மத் 9:37) உண்மையில் இலங்கை தேசத்தில் அறுவடையை மிகுதியாக்குதல் அத்தியாவசிய ஒன்றாகும். முதலில் வாசனைத் திரவியங்களை தேடிவந்த கிறிஸ்தவ வணிகர்களின் வருகையோடு கிறிஸ்துவின் வார்த்தைகள் இம்மண்ணில் வேரூன்றின. இரண்டாவதாக போர்த்துக்கேயரின் வருகையுடன் இங்கு வந்த மறைத்தூது குருக்களுடன், இலங்கையில் கிறிஸ்துவின் அறுவடை ஆரம்பமானது. ஒல்லாந்தரின் ஆக்கிரமிப்பு காலத்தில் இந்தியாவிலிருந்து வருகைதந்த முத்திப்பேறுபெற்ற யோசேவாஸ் அடிகளார் எமது மூதாதையரின் விசுவாசத்தை அழியவிடாமல் பாதுகாத்தார். இப்போது மத சுதந்திரத்தை அனுபவிக்கும் எமக்கு கிறிஸ்துவின் அறுவடையை மிகுதியாக்க செய்யவேண்டியவை அதிகம் உள்ளது. நாம் அனைவரும் ஒன்றாய் கைகோர்த்துக்கொள்வோம். ஆண்டவர் எமக்குத் தந்துள்ள குருக்கள், துறவிகளைத் திடப்படுத்துவோம். அவர்களை ஏற்று பலப்படுத்தும்படி இறைவனிடம் மன்றாடுவோம். கிறிஸ்துவிடமிருந்து பெறும் அழைப்பிற்கிணங்க குருத்துவ/ துறவற உருவாக்கத்திற்கு/ பயிற்சிக்கு தேவைப்படும் பண உதவிகளையும் வழங்குவோம். அதுபோல நாம் அனைவரும் ஒன்றாய் சொல்வோம். "மண்ணின் மக்களே, விசுவாச விதையை விதைக்க முன்வாருங்கள்" இறையாசீரும் மரியன்னையின் பாதுகாவலும் உரித்தாகுக!

*அருட்பணி. ரெஜினோல்ட் சபரமாது,*
*பாப்பிறை மறைபரப்புச் சபைகள், தேசிய இயக்குனர்.*

# ஒரு நாடு ஒரு தேசம்

# ONE COUNTRY ONE NATION

அருட்பணி இ. அகஸ்ரின், முருங்கன் மறைக்கோட்ட முதல்வர்

## முன்னுரை

இலங்கையில் சிங்களம் தமிழ் முஸ்லிம் என மூன்று இனங்கள் உண்டு என வரலாறும் உலகும் அறியும். காலனித்துவத்திற்கு முற்பட்ட காலத்தில் இலங்கையில் மூன்று இராசதானிகள் (கண்டி, கோட்டை, யாழ்ப்பாணம்) இருந்தன. அவற்றில் ஒன்று தமிழருடையதே.

தமிழ் மொழி பழமையான மொழிகளில் ஒன்று. உலக செம்மொழிகளில் ஒன்று. இம்மொழி பேசும் தமிழர் இலங்கையில் ஓர் தேசிய இனமாக உள்ளனர். இவர்களுக்கென பிரதேசம், மக்கள் தலைவர்கள், வளம், இறைமை, தேசியம், சுதந்திரம், கௌரவம், சுயநிர்ணய உரிமை, கலை, கலாச்சாரம், மொழி, என பலவும் நிறைவாகவே உள்ளன.

இவ்வாறான இனத்துவ அடையாளங்களை அழித்து சிங்களம் வடக்கு, கிழக்கு முதல் முழு இலங்கையிலும் பரவவும், ஆட்சி செலுத்தவும் வேண்டும் என இலங்கை அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கின்றது. இது, இன்று நேற்று ஆரம்பமானதல்ல. சுதந்திரத்திற்கு முன் ஓர் சிந்தனையாக, சுதந்திரத்திற்குப்பின் ஒரு திட்டமிட்ட ஆமை வேகச் செயலாகி, போரின்போது கிடைத்த வாய்ப்புகளை நன்றாகப் பயன்படுத்தியும், போரின்பின் குதிரை வேகத்தில் திட்டமிட்ட செயலாகவும் நடைபெறுகின்றது. இன்று இது 'ONE COUNTRY ONE NATION' 'ஒரு நாடு ஒரு தேசம்', 'ONE COUNTRY ONE VOICE' 'ஒரு நாடு ஒரு குரல்', எனும் கோசத்தோடு அரசின் ஒவ்வொரு துறையின் உதவியுடன் தமிழ் இன அழிப்பு அகலக்கால் பதித்துச் செல்கிறது.

அமைச்சர் பசில் ராஜபக்ஸ புலிகளை அழித்தமையானது தமிழரின் அரசியல் தீர்வின் ஒரு பகுதி என வர்ணித்திருப்பது, அதன் மறுபகுதி இன அழிப்பு என நாம் கருத முடியும். இவ்வாண்டு சுதந்திர தின உரையில் ஜனாதிபதி "சகல இனங்களுக்கும் சம உரிமை" எனப் பேசினார். ஆனால் வெலிகட சிறையில் கொல்லப்பட்ட போராளிகளுக்காக திருகோணமலை பிறட்றிக் கோட்டை கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள ஞாபகார்த்த வெளியரங்கிற்கும், அதில் உள்ள தமிழ் எழுத்துக்களுக்கும் அவரது உரைக்கு சில மணி நேரங்களுக்கு முன் தார் பூசி அவசங்கை செய்யப்பட்டன. இதுதான் சம உரிமையா?

இன்று தமிழ் பிரதேசங்களில் இலங்கை சிங்கள பௌத்த பேரினவாத அரசு குரிவிச்சைபோல் குந்தியிருந்து தமிழரின் அனைத்து உரிமைகளையும், நிலத்தையும், வளத்தையும், மக்களையும் உறிஞ்சி இன அழிப்புச் செய்கின்றது. இதன் பல அம்சங்களில் முக்கியமானவற்றை இக்கட்டுரையில் பார்ப்போம்.

## நில அபகரிப்பும் சிங்களக் குடியேற்றமும்

தமிழரின் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் திட்டமிட்ட சிங்கள நில அபகரிப்பில் மூழ்கியுள்ளன. ஓர் இனத்தின் நிலத்தை வேறோர் இனம் அபகரித்தால் இனச் செறிவும், அடையாளமும், இருப்பும் அழிக்கப்பட்டுவிடும்.

எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வருடம் யாழ் நகரில் பங்கெடுத்த கூட்டத்தில் பலாலி விமான நிலையம் மட்டுமல்ல, அரசு கொழும்பிலும் காணிகளை அபகரிக்கின்றது எனக்கூறி, தெற்கில் ஒருசில தனியாருக்கு ஏற்பட்ட பாதிப்புடன், தமிழ் நில அபகரிப்பை சமப்படுத்தி ஒப்பிட்டிருப்பது, தமிழரின் இன அழிப்பிற்கான மறைமுக ஆதரவோ என எண்ணத் தோன்றுகின்றது.

2012 வைகாசியில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ B.B.C க்கு வழங்கிய செவ்வியின்போது ஒரு கேள்வியில், 'வடக்கு தமிழர்களை அதிகமாகக் கொண்ட பகுதி எனக் கூறமுடியுமா? எனக் கேட்டதற்கு, அவர் ஏன் அப்படிக் கருத வேண்டும்? ஆரம்பத்தில் அம்பாந்தோட்டையில் தமிழர் இல்லை தற்போது உள்ளனர் என்றார். இதன் அர்த்தம் என்ன? இலங்கைச் சட்டப்படி இலங்கைப் பிரஜைகள் எவரும், எங்கும் நிலத்தைப் பெறவும், குடியேறவும் உரிமையுண்டு. தமிழர் சிங்களப் பகுதிகளில் சொந்தமாக காணிகளுடன் உள்ளனர். ஆனால் இது சிங்களவரின் இருப்புக்கோ, நிலத்திற்கோ குந்தகமானது அல்ல. ஒரு தமிழராக அங்கு குடியிருக்கிறாரே தவிர ஓர் இனமாக அல்லது 50 அல்லது 100 தமிழ் குடும்பங்களாக குடியிருக்கவுமில்லை, குடியேற்றப்படவுமில்லை. ஆனால், தமிழர் பிரதேசங்களில் நடப்பது அரசின் திட்டமிட்ட நில அபகரிப்பாகும் (Land grabbing by the state).

மன்னார் மடு வீதியில் பல வருடங்களுக்கு முன் சிங்களவர் ஒரு சிலர் கடை வைத்திருந்தனர். இதை ஆதாரமாக வைத்து மடு வீதிக்குக் கிழக்கால் 2 கி. மீ. மேற்கால் 4 கி.மீ. தூரம் வரை சிங்களக் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளன.

யாழ். நல்லூர் பிரதேசத்திலும், நாவற்குழியிலும், முல்லைத்தீவு மாவட்டத்திலும் காணிகள் அபகரிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதேவேளை நாவற்குழி அருகில் தமிழ் குடியேற்றங்கள் தடுக்கப்பட்டுள்ளன. வலிகாமம் வடக்கில் கிராவெல மாட்டுவண்டிச் சவாரி நடைபெறும் இடத்தில் 10 ஏக்கர் நிலத்தை இராணுவம் மக்கள் விருப்பத்தை மீறி அபகரித்துள்ளது. வலிகாமம் வடக்கின் 2500 ஹெக்டேயர் காணி இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 6 கிராம சேவகர் பிரிவுகளிலும், பெருமளவு சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டள்ளன. மாத்தளனில் சிங்கள மீனவர்களின் வருகை குடியேற்றத்தின் முன்னடையாளமாகவே கருதப்படுகின்றது. மேலும் மணலாறு, கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருங்காட்டுக்கேணி ஆகிய இடங்களில் தமிழ் விவசாயிகள் தங்கள் உறுதிக் காணிகளிலிருந்து இடப்பெயர்வு காலங்களில் வெளியேறினர்.

தற்போது இக்காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்களை சிங்கள மக்களுக்கு வழங்குவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் தெரிவித்தார். இன்னும் சில இடங்களில் கிராமங்களே இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளன. பலாலியிலும் அதனை அண்டிய கிராமங்கள் அனைத்தும் பலாலி விமான நிலையத்திற்கும், இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயத்திற்கும் என எடுக்கப்பட்டுள்ளன. சம்பூர் இந்திய அனல் மின் நிலையத்திற்கும், முள்ளிக்குளம் கடற்படைக் கிராமத்திற்குமென கிராமங்களே காவு கொள்ளப்பட்டுள்ளன. சில இடங்களில் காணிகள் திருப்பிக் கொடா வண்ணம் நஸ்டஈடும் கொடுக்கப்படுகின்றன. இவ்வாறு தமிழர் நிலங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு குத்தகைக்குக் கொடுத்தும், இராணுவத்தின் குடும்பங்கள், தொழில் ரீதியாக தமிழ் பகுதிகளில் குடியேறும் சிங்களவர்களுக்குக் கொடுத்தும் காணி அபகரிப்பு டிஜிரல் வேகத்தில் நடைபெறுகின்றது.

நமது நாட்டின் காணிச்சட்டத்தின்படி காணிகளுக்குப் பொறுப்பாக பிரதேச செயலாளரே காணப்படுகின்றார். ஆனால் இன்று வடமாகாணக் காணிகளுக்கு முன்னாள் யாழ் இராணுவத் தளபதியும், தற்போதைய வடமாகாண ஆளுனருமாகிய திரு G. A. சந்திரசிறியே பொறுப்பாக உள்ளார். இவர் சென்ற ஆண்டு ஐப்பசி மாதம் யாழ் நகரில் இடம்பெற்ற ஓர் கூட்டத்தில் தேசிய பாதுகாப்பு, இராணுவம் என்பவற்றிற்கு முதலிடம் வழங்கப்பட்டு காணிகள் சுவிகரிக்கப்படும் என்றார். இவர் இவ்வாறு கூற, வடக்கில் 15 ஆயிரம் சிங்கள மக்களை குடியேற்றவுள்ளதாக அரசாங்கம் சென்ற மாசி மாதத்தில் அறிவித்திருந்தது.

## தமிழரின் தொகையைக் குறைத்தல்

மலையக தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது முதல் தமிழரின் தொகைக் குறைப்பு வேட்டை காலங்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்றவாறு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இனக்கலவரங்கள், சிறையில் கொலைகள், கைதுகள், போரில் கொல்லப்படல், காணாமல் ஆக்குதல், போர்காலத்தில் தாக்குதலின் பின் பழிவாங்குதல் (Retaliation) என நேரடியாகவே தமிழரை கொலை செய்து இலட்சக்கணக்கில் தமிழர் தொகையை இலங்கை அரசு வெற்றிகரமாகக் குறைத்துள்ளது.

யுத்தத்தின்பின் சத்தமற்ற தமிழர் சனத்தொகைக் குறைப்பு நடைபெற்று வருகின்றது. அச்சுறுத்தல், பயம், பாதுகாப்பற்ற நிலை என தமிழருக்கான நெருக்கடி காரணமாக இன்று இந்தியாவிற்கும் வேறு பல நாடுகளுக்கும் புலம்பெயர்ந்துள்ளனர். ஐ. நா பட்டியலின்படி 54 நாடுகளில் இலட்சக்கணக்கான வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் அகதிகளாக வாழ்கின்றனர்.

தொடர் சந்தேகங்கள், தொடர் விசாரணைகள், பயமுறுத்தல்கள், படையினர், புலனாய்வாளர்களின் தொல்லைகள் காரணமாக தமிழ் மக்கள், புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் தொடர்ந்தும் வெளியேறிய வண்ணமாகவேயுள்ளனர். மேற்படி காரணங்களால் ஏற்கனவே வெளிநாடுகளுக்குச் சென்றோர் திரும்பி வர அஞ்சுகின்றனர். பலர் தம் சொத்துக்களை விற்று, உயிரைக் கையில் பிடித்து, ஆபத்தான அவுஸ்ரேலியா பயணத்தை மேற்கொள்கின்றனர். இதில் சிலர் வெளிநாட்டில் கைதாக, பலரின் உயிர் நடுக்கடலில் சங்கமிக்க, வேறு சிலர் அந்த நாடு சென்றடைகின்றனர். இதுவும் அரசாங்கத்தின் ஏற்பாடு என்றே கூறப்படுகின்றது.

இதைவிடவும் இறுதிப்போரில் கைதான, சரணடைந்த பொதுமக்களும், போராளிகளும் மறைக்கப்பட்டுள்ளமை, தொடர் கைதுகள், மீண்டும் சிறை, காணாமல் போதல், சிறையில் கொலை, (06.07.2012 இல் நிமல ரூபன் சிறையில் கொலை. ஆனால் மாரடைப்பால் இறந்ததாக அரசாங்கம் அறிவித்தது) புனர்வாழ்வு பெற்றோர் அடிப்படை வசதியின்றி அனுபவிக்கும் கஸ்ரங்கள் எனத் தமிழருக்கு நெருக்கடிகளைக் கொடுப்பதன் மூலம் தமிழ் இளைஞர்களின் செறிவைக் குறைத்து, தமிழினத்தை பலவீனமாக்குவதும் இன அழிப்பின் ஓர் அங்கமாகும்.

இதைவிடவும் போரில் அங்கவீனம், அன்புக்குரியவர்களின் இழப்பு எனபவற்றினால் ஏற்பட்டுள்ள உளவியல் தாக்கங்களும், நோய்களும், குடும்பத்தில் உழைப்பாளரை இழந்தமை, பெண்களைத் தலைமையாய்க் கொண்ட குடும்பங்கள், அநாதைப் பிள்ளைகள், அடிப்படை வசதியின்மை, போசாக்கின்மை, வாழ்வாதார வசதியின்மை, தொற்று நோய்கள், வறுமை, இடப்பெயர்வு, மீள் குடியேற்றம் என அலைந்து திரிந்து நோய்வாய்ப்பட்டமை என அனைத்து நிலைகளிலும் தமிழரை பலவீனமாக்கியிருக்கின்றது.

## தமிழர் பொருளாதாரத்தை முடக்குதல்

வடக்கும், கிழக்கும் கடல், நில வளங்களைக் கொண்ட வளமான பகுதியாகும். தமிழர் நல் வளங்களோடும், வசதிகளோடும், சொத்து சுகங்களோடு நிறைவாகவும், மகிழ்வாகவும், 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற முன்னோரின் வாக்கின்படி சுறுசுறுப்பாய் வேலைகள் செய்து, பொருளாதாரத்தில் முன்னேற்றம் கொண்டிருந்த இனமாகும். அத்துடன் புத்திஜீவிகளும், அறிஞர்களும் அரசு, அரசுசார்பற்ற துறைகளில் உயர் நிலை பதவிகள் வகிக்கும் கல்விமான்களும் இருந்துள்ளனர்.

மற்றும் வியாபாரம், வீட்டுத்தோட்டம், வயல்கள், குளங்கள், தொழிற்சாலைகள் என அதன் வளங்கள் விண்ணோக்கின. ஆனால்! போரின்போதும், அதைவிடச் சிறப்பாக போரின் பின்னரும், தமிழர் பொருளாதாரம் திட்டமிட்ட ரீதியில் தரமிழக்கப்படுவதுடன் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கின்றமை வெளிப்படை.

தமிழரின் விவசாய நிலங்கள் பல இன்று இராணுவத்தினரிடமுள்ளன. மிதிவெடி விதைப்புக்கள், பாதுகாப்பு வலயங்கள், சிங்களக் குடியேற்றங்கள், அகற்றப்படாத காவலரண்கள், மண் தடுப்பு மேடுகள் என பயிர் செய்ய முடியாத பிரச்சினையைச் சந்திக்கின்றனர். இவ்வாறு சிலர் தம் நிலத்தை இழந்து குத்தகைக்காகப் பயிர் செய்ய, குத்தகைக்கு விவசாயம் செய்தவர்கள் மண்வெட்டிக்கு ஓய்வு கொடுத்து கை கட்டி நிற்கின்றார்கள். ஆனால், இவர்களின் நிலங்களில் இராணுவம் பயிர் செய்கின்றது. தமிழர்களின் விவசாய நிலங்கள் பல உல்லாச விடுதிகளாக மாறியுள்ளன. மயிலிட்டி இராணுவ முகாமில் யோகற் தொழிற்சாலை இயங்குகின்றது.

நம்மவர் பல கஸ்டத்தின் மத்தியிலும் தோட்டம் செய்தாலும் இராணுவம் குறைந்த விலையில் மரக்கறி விற்பனை செய்கிறது. தம்புள்ள மரக்கறி வந்து குவிகின்றன. வட கிழக்கிலிருந்து மரக்கறியும், நெல்லும் ஏற்றுமதி செய்யும் வளமும், பலமும் இருந்தபோதும், நம்மூரிலேயே நம்மவருக்கு சந்தைவாய்ப்பு பறிபோயுள்ளதுடன், எமது உற்பத்திப் பொருட்களுக்கு நியாய விலையுமின்றி விலை குறைப்பால் நஸ்டமும் ஏற்பட்டுள்ளன.

முன்னர் வடகிழக்கில் இயங்கிவந்த சீமெந்துத் தொழிற்சாலை இரசாயணத் தொழிற்சாலை, மீன் பதனிடம் தொழிற்சாலை, உப்புக் கூட்டுத்தாபனம், மற்றும் தனியார் தொழிற்சாலைகள் போரின் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை.

மீன், நெல் போன்றன குறைந்த விலையில் உடனேயே நமது பிரதேசத்திற்கு வெளியே எடுத்துச்செல்லப்பட்டு, பின்னர் அவற்றில் சில மீண்டும் நுகர்வுப்பொருளாக கூடிய விலையில் எமக்கு அனுப்பப்படுகின்றன. இதனால் எமது உற்பத்திப்பெறுமதி உறிஞ்சப்பட்டு நுகர்வோராக மாற்றப்படுகின்றோம்.

அரிசி, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், மிளகாய், வாழைப் பழம், ஆடைகள் போன்றன வடக்குக் கிழக்கிலேயே உற்பத்தி செய்ய முடியும். ஆனால் இறக்குமதி செய்யப்பட்டு வடக்குக் கிழக்கிற்கு அனுப்பப்படுகின்றன. வேண்டுமென எமது உற்பத்திக்கு முன்னுரிமை வழங்காது, எமது உற்பத்தி தவிர்க்கப்பட்டு, எமது பொருளாதாரத்தைப் போட்டுடைத்து, எம்மை ஏழைகளாக்கி, அகதிகளாக்கி, தம்மீது தங்கியிருக்கும் பொருளாதாரக் கலாச்சாரத்தை நன்றாகவே முன்னெடுக்கின்றார்கள்.

போரின் போதும், அதன் பின்பும் பல பலன்தரும் மரங்களான தென்னை, பனை, மா, பலா, தேசி போன்றன அழிக்கப்பட்டுள்ளன. பல குளங்கள், கிணறுகள் விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியாத நிலையில் சேதமடைந்துள்ளன. இத்தனை சவால்கள் மத்தியிலும் தமிழ் பிரதேசங்களில் காட்டு யானைகளும், குரங்குகளும் மீதி பயிர் அழிப்பு வேலையை செவ்வனே செய்கின்றன.

விவசாயத்தைப் போன்றே பல மீன்பிடித்துறைகள் படை முகாம்களாகவும், சிங்களக் குடியேற்றங்களாகவும் இருப்பதால் மீன்பிடி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. தமிழரின் பல பகுதிகளில் சிங்கள மீனவர்கள் அரச பாதுகாப்புடன் மீன்பிடித்தொழில் செய்கின்றனர். தடைசெய்யப்பட்ட மீன்பிடி அனுமதிகள் தாம் சார்ந்தோருக்கு வழங்கப்படுவதால் சிறப்பாக டைனமைட் பாவித்தல், சிலிண்டரைப் பாவித்து அட்டை பிடிக்கும் முறை, கடலில் வெளிச்சம் போட்டு சுருக்குவலைத் தொழில், இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய வருகை, இவற்றைத் தாண்டி எம்மவர் மீன்பிடிப்பது என்றால் முயல் கொம்பு முயற்சியாகும். இதனால் பலர் தொழிலுக்குச் செல்வதைக் குறைத்துள்ளனர்.

அதுமட்டுமன்றி எமது பகுதி கடல்வளம் சிதைக்கப்படுகிறது. எதிர்கால மீன் உற்பத்தி பாதிப்படைகின்றது. போர்க்காலங்களிலும், இடம்பெயர்வு காலங்களிலும் மீன்பிடி உபகரணங்கள் வடக்குக் கிழக்கில் சேதமாக்கப்பட்டும், சூறையாடப்பட்டுமுள்ளது. 2006ம் ஆண்டு மன்னார் பேசாலையில் கடற்படையினரால் 50ற்கும் மேற்பட்ட பிளாஸ்ரிக் வள்ளங்கள் உட்பட பல வலைகள், வாடிகள், இயந்திரங்கள் என்பன எரிக்கப்பட்டன.

முள்ளிக்குளத்தில் 2007ம் ஆண்டு 'மூன்று நாட்களில் மீண்டும் அழைப்போம் ஒன்றும் எடுக்கவேண்டாம்' எனக்கூறி வெறும் கையுடன் அம்மக்கள் அனுப்பப்பட்டனர். மீன்பிடி உபகரணங்கள் உட்பட அனைத்தையும் இழந்த மக்கள் இதுவரை அங்கு செல்லவுமில்லை, நஸ்டஈட்டைப் பெறவுமில்லை. இவ்வாறே பல மீன்பிடிக் கிராமங்களினதும், மீனவர்களினதும் அவல நிலை தொடர்கின்றன.

வடகிழக்கில் சிறு, பெரு வியாபாரங்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. தமிழர் பிரதேசங்களில் பெரும்பான்மை இனத்தவரும், இராணுவத்தினரும் வியாபாரங்களில் ஈடுபடுகின்றனர். சாப்பாட்டுக்கடைகள், வாகனத் திருத்த நிலையங்கள் போன்றவற்றுடன் ஏழைகளின் சிறு வியாபாரமாகிய கச்சான் கடையைக்கூட விட்டுவைக்கவில்லை.

தென்னிலங்கை வர்த்தகர்கள் கிராமம் தோறும், வீடுகள் தோறும் சென்று கடன் அடிப்படையிலும், குறைந்த விலையிலும் வீட்டு வாசல் முன் அலைச்சல் இன்றி பொருட்கள் கொடுப்பதால் நம்மவர் வியாபாரம் உறங்கு நிலையை அடைந்துள்ளது. இதனால் கடன்களைக் கட்டமுடியாமலும், வாகனங்களுக்கான லீசிங் கட்டமுடியாமலும் திண்டாடுகின்றனர், பல வியாபாரிகள் வியாபாரத்தைக் கைவிட்டதுடன், வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளனர். வங்கிகளும் வடக்குக் கிழக்கில் கடன் கொடுப்பதில் கடும் போக்குடன், நெருக்கடி கொடுக்கின்றன. இதனால் வியாபார வர்த்தக நடவடிக்கைகள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றன. வடகிழக்கின் பல தனியார் பேருந்து வாகனங்கள் தென்னிலங்கையைச் சார்ந்தவை எனப் பலர் அறிவர். இதைவிடவும் லஞ்சம் வழங்கல், சந்தோசம் செய்தல், கப்பம் கட்டல் என உழைப்பதையும் தாரைவார்க்கும் பொருளாதாரமே எமக்கு மிஞ்சியுள்ளன.

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்)

# ஒரு நாடு ஒரு தேசம்

# ONE COUNTRY ONE NATION

8ஆம் பக்கத் தொடர்ச்சி

### வளச் சுரண்டல்

ஒரு நாட்டினதும் இனத்தினதும் இயற்கை வளம் அதன் பொருளாதார ஆணிவேர் ஆகும். அதனைச் சிக்கனமாக பயன்படுத்துவதும், பாதுகாப்பதும் மட்டுமல்ல, பிறர் சுரண்டிச் செல்லாது காப்பதும் முக்கியமாகும். இந்நிலையில் வடகிழக்கின் வளங்கள் தாறுமாறாகத் திட்டமிடப்பட்ட முறையில் சுரண்டப்படுகின்றன.

யாழ் வலிகாமம் பகுதியில் இருந்து தெற்கிற்கு சுண்ணாம்புக்கல் பெருமளவில் அகழ்ந்து செல்லப்படுகின்றது. இதனால் வளம் தெற்கிற்கு தள்ளப்படுவது மட்டுமல்ல, எதிர்காலத்தில் குடாநாட்டில் நன்னீர் இல்லாமல் போகும் அபாயமுண்டு என எதிர்வு கூறப்படுகின்றது.

தமிழ் பிரதேசங்களில் இருந்து கட்டு மணல், பூச்சுமணல், கிறவல், பாலை, முதிரை மரங்கள் என தெற்கிற்கு அள்ளிச் செல்லப்படுகின்றன. உள்ளூருக்குள்ளும் வீதி, ஏனைய வேலைகளுக்கு மண் மிகக் குறைந்த விலையில் அகழப்படுகின்றது, காடுகளும் அழிக்கப்படுகின்றன.

போரில் கைவிடப்பட்ட கட்டாக்காலி மாடுகள் தமிழருக்கு முழுமையாக வழங்கப்படாமல் சட்டவிரோதமாக இறைச்சிக்காக வெட்டப்படுவதாகவும், வெளிமாவட்டங்களுக்கு கடத்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது. 'தமிழரின் ஒரு துரும்பையும் விடமாட்டோம்' என்பதுபோல் போரில் கைவிடப்பட்ட, அழிந்துபோன வாகனங்களின் இரும்பையும்கூட தென்னிலங்கை வர்த்தகர்கள் விட்டுவைக்கவில்லை என்றால் இதிலிருந்து வளச் சுரண்டலின் வகைகளை இலகுவில் அறியக்கூடியதாக உள்ளது.

### சிங்களமயமாக்கல்

நான் ஒருமுறை வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அரச பேருந்தில் பயணம் செய்தேன். யாழ் நகர் சென்றடையும்வரை பேருந்தின் சத்தத்தைவிட சிங்களப்பாட்டு காதைத் துளைத்துக்கொண்டிருந்தது. யாழ் நகர் சென்றடையும்வரை நடத்துனர் ஒரு தமிழ் சொல்கூடப் பேசவில்லை. நம்மவரும் அரைகுறை சிங்களத்தில் அசடுவழிந்துகொண்டிருந்தனர். உணவிற்காக அவர்கள் நிறுத்திய கடையும் ஓர் சிங்களக்கடைதான். தமிழ் இனம் சிங்களமயமாகிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

மன்னாரிலிருந்து பேருந்துகளில் கொழும்பு சென்றிருக்கிறேன். மதவாச்சி கழிந்ததும் தமிழ் பாட்டு நிறுத்தப்பட்டு சிங்களப்பாட்டு மாற்றப்படுகிறது. நடத்துனர் சிங்களம் பேச ஆரம்பித்துவிடுவார். செட்டிகுளத்தில் ஒரு சிங்களச் சகோதரர் ஏறினாலும் அவருடன் சிங்களத்தில்தான் கதைப்பார். உணவிற்காக நிறுத்தப்படும் கடையும் சிங்களக்கடைதான். இதுதான் ஓர் இனத்தை, அவர்களின் உணர்வை, இருப்பை, மதிக்கும் செயல்! அவ்வினம் வாழவேண்டும் என வாழ்த்தும் செயல்!

இன்று வடக்குக் கிழக்கு தமிழ் மணம் சிங்கள மயமாக்கப்படுகின்றது. "சிங்களம் மட்டும் சட்டம்" வாயால் வெளிவருவதற்கு முன்னர் இருந்தே சிங்கள அரசாட்சிப் பீடம் சிங்களமயமாக்கலை வரிந்து கட்டிக்கொண்டிருக்கின்றது. வடக்குக் கிழக்கு எங்கும் சிங்களம் சிரிக்க வேண்டும், சிங்களம் ஒலிக்க வேண்டும், நாடு சிங்கள தேசமாக மாற வேண்டும் எனக் கனவு காண்கிறது பேரினவாதம்.

வடக்கு கிழக்கில் இராணுவ முகாமிற்கோ, காவல்துறைக்கோ சென்றால் சிங்களத்தில்தான் உரையாடுகின்றார்கள். மக்கள் சிங்களம் தெரிந்தவர்களைக் கூட்டிச்சென்றே தமது காரியங்களை ஆற்றவேண்டியுள்ளது. போர்க்கால, தற்கால சோதனைச்சாவடிகளிலும் சிங்களத்தில்தான் வினவுகின்றார்கள். அரசு தரப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார "இலங்கையில் பொலிசார் தேசிய மும்மொழிக் கொள்கையை மீறியுள்ளனர்" எனக் குற்றம்சாட்டியுள்ளார்.

இவ்வருட மாசி மாதத்தில் இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் இங்கு வந்து மும்மொழி அமுலாக்கல் திட்டத்தை ஆரம்பித்துவைத்தார். இருப்பினும் வடக்குக் கிழக்கில் பணிபுரியும் பல சிங்கள அதிகாரிகளுக்குத் தமிழ் தெரியாது. தமிழில் பேசி காரியம் நடத்த முடியாத அரச, அரசசார்பற்ற அதிகாரிகள் அரசாங்க அதிபர் பதவி தொடக்கம் வாயில் காவலாளி வரை அனைத்துத் திணைக்களங்களிலும் பரவலாக்கப்பட்டுள்ளனர். ஆனால், சிங்களப்பகுதிகளில் பணிபுரியும் தமிழ் அதிகாரிகள், ஊழியர்கள் அனைவரும் சிங்களம் நன்றாகப் பேசுபவர்களாகவே உள்ளனர். மும்மொழிக் கொள்கை முன்மொழிவு தமிழருக்கு முக்கியத்துவம் கொடுப்பதல்ல. மாறாக சிங்களத்தை மேலும் விரிவுபடுத்தவே.

தமிழர் பங்குபற்றும் அரச ஊழியர்களுக்கான பயிற்சிகள் கூட்டங்கள் தெற்கில் சிங்களத்தில் மட்டும் நடைபெறுகின்றன. தனியாருக்கும் அரச அலுவலர்களுக்கும் கடிதங்கள், சுற்றறிக்கைகள் தனிச் சிங்களத்திலேயே அனுப்பப்படுகின்றன. வடக்குக் கிழக்கு வீதிவழிகாட்டிகள் சில தனிச்சிங்களத்தில் எழுதப்பட்டுள்ளன. பாவனையாளர்களின் அனுமதியின்றி தொலைபேசிகளுக்கான அழைப்பு ஒலியாக சிங்களப்பாடல்களை புகுத்துதல் போன்றனவும் இல்லாமல் இல்லை.

தமிழ் பகுதிகளுக்கு வரும் தென்பகுதியினரில் சிலர் தமது வர்த்தக நடவடிக்கைகளின்போது அல்லது விபத்து போன்றவை நடக்கும் பட்சத்தில் சிங்களப் படையினரின் உதவியுடன் சண்டித்தனம் காட்டுவது என்பனவும் நடைபெறுகின்றன.

யாழ் பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்கள் தொகை படிப்படியாக ஒவ்வொரு வருடமும் அதிகரித்துச் செல்கின்றது. யாழ் போதனா வைத்தியசாலையில் இராணுவத்தினர் இரத்ததானம் வழங்குவதையிட்டு யாழ் இராணுவத்தளபதி "யாழ்ப்பாணத்தில் ஓடுவது சிங்களக் குருதிதான்" எனப் பெருமிதம் அடைந்தது, வடகிழக்கு சிங்களமயமாக வேண்டும் எனும் அவர்களின் எண்ணத்தின் வெளிப்பாடே!

சிலாபம், புத்தளம் போன்ற தமிழர் வாழ்ந்த இடங்கள் இன்று திட்டமிட்ட ரீதியாக சிங்களமயமாக்கப்பட்டுள்ளன. நூற்றுக்கு மேற்பட்ட தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. சிலாபம் நகரசபைக்குட்பட்ட எகோடவல்ல றே.க.த.க பாடசாலை 1957ம் ஆண்டு முதல் இயங்கி, 1987ம் ஆண்டு மூடப்பட்டது. ஆராட்சிக்கட்ட பிரதேச செயலகப் பிரிவில் 1955ம் ஆண்டுமுதல் இயங்கிய றோ.க.த.க.பாடசாலை 2001ம் ஆண்டு மூடப்பட்டது. இவ்வாறு வேறு பாடசாலைகளில் இயங்கிவந்த தமிழ்ப் பிரிவுகளும் மூடப்பட்டுள்ளன. இவையெல்லாம் சொல்வதென்ன?

இலங்கையில் பலமிக்க அரசியல் கட்சிகளில் ஒன்று ஐக்கிய தேசியக்கட்சியாகும். இது தனது 6வது கட்சி மதிப்பீட்டில் (1956) சிங்களம் மாத்திரமே நாட்டின் ஆட்சி மொழியாக வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

ஆட்சி அதிகார ஆசையில் கிறிஸ்தவராக இருந்து பௌத்தராக மாறிய S.W.R.D பண்டாரநாயக்கா தலைமையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி 1956ம் ஆண்டு 24 மணித்தியாலத்தில் சிங்களத்தை அரச கரும மொழியாக்குவோம் எனும் கோசத்துடன் சிங்களமயமாக்கல் அதிகாரபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது எனலாம். எனவேதான் சமசமாஜக்கட்சியைச் சார்ந்த கொல்வின் R. D சில்வா அவர்கள் "ஒரு மொழி இரு நாடு, இரு மொழி ஒரு நாடு" என எதிர்வு கூறியிருந்தார்.

இவ்வாறு தமிழரைத் தனிமைப்படுத்தி, இரண்டாம்தரப் பிரஜையாக்கி, உரிமையைப்பறித்து, அநாதையாக்கி சிங்கள மயமாக்கலை "வரலாறாகப்" படைக்கும் சாமர்த்தியம் இமயமலை நிலையை அடைந்துகொண்டிருக்கின்றது.

### பௌத்தமயமாக்கல்

அன்பையும், அகிம்சையையும், நீதியையும், மனித வாழ்க்கை நிலையாமையையும் போதித்தவர் கௌதம புத்தபெருமான். அவர் இன்று உயிருடன் இருந்தால் இலங்கைக்குச் சார்பாக இருந்திருக்கமாட்டார். ஐ.நா வரை சென்று இலங்கைக்கு எதிராக குரல் கொடுக்கும் முதன்மையாளராகவே திகழ்ந்திருப்பார். இவ்வாறான ஓர் உத்தமரை - தமிழரின் உரிமைகளையும், உணர்வையும், இதய நினைவுகளையும் உரித்தெடுக்கின்ற தமிழரின் இரத்தத்தால் தோய்ந்த இடங்களிலெல்லாம் ஆட்சியாளரும், படையினரும் வில்லங்கமாக சிலையாக இருத்தியிருக்கின்றார்கள். ஏதோ புத்தமதம் இலங்கையின் வடகிழக்கில் இருந்துதான் உலகின் ஏனைய பகுதிகளுக்கெல்லாம் பரவியது போன்ற பிரமிப்பில், வீதியில் மைல் கல் வைப்பது போன்று புத்தர் சிலையால் பௌத்தமயமாக்கலின் புதிய வரலாறு படைத்து புத்தரை அவசங்கை செய்கின்றார்கள்.

மீள்குடியேறும் மக்கள் பலர் அடிப்படை வசதியின்றி மரங்களுக்கடியில், சாவின் வேதனையில் துவளும்போது, பெரும் எடுப்புகளிலும், செலவுகளிலும், புத்தரை மாளிகைத் தோற்ற அரங்குகளில் வைத்து அழகு பார்க்கின்றார்கள். திருகோணமலையில் போர்க்காலத்தில் திடீரென முளைத்த புத்தர் சிலையை இவ்வருட சுதந்திர தின உரையில் ஜனாதிபதி சுட்டிக்காட்டி, அதைச் சுற்றியுள்ள முட்கம்பி அகற்றப்பட்டு சுதந்திரமாக்கப்பட்டுள்ளது எனப் பெருமிதம் கொண்டார் என்றால் பௌத்தமயமாக்கல் தெளிவாக்கப்படுகிறது.

மன்னார், வவுனியா பிரதான வீதியின் முருங்கன் நகருக்கு அருகில் பழமை வாய்ந்த ஓர் இந்து ஆலயம் உண்டு. அது சில காலம் படையினரின் காவலரணாக இருந்தது. அக்காலப்பகுதியில் அங்கு ஓர் புத்தர் சிலை வைக்கப்பட்டது. யுத்தத்தின்பின் அங்கு ஒரு விகாரை கட்டி பெரிய அளவில் புத்தர் சிலையையும் இருத்தி ஒரு புத்தபிக்குவும் அங்கு இருக்கிறார். அப்புது விகாரைக்கு 'புராதன மகா விகாரை' எனப் பெயரும் இட்டுள்ளனர். ஒருபானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பதுபோல் வடக்குக் கிழக்கின் பல பொது அரச, தனியார், காணிகளில் இது பரவலாக அரங்கேறுகின்றது.

### கலாச்சாரச் சீரழிவு

~~ஒரு இனத்தின் அடையாளங்களை தவறுதலாக இன்னுமோர் இனம் அழித்தாலும் அது தவறுதான்.~~ ஆனால் வேண்டுமென்றே திட்டமிட்டு ஓர் இனத்தின் சிறப்பையும், பண்பையும், கட்டுக்கோப்பையும், பாரம்பரிய வாழ்க்கை முறையையும் அழித்து, அந்த இனத்தின் கலாச்சாரத்தை அழிப்பது என்பது இன அழிப்பின் வெளிப்பாடு.

இன்று வடகிழக்கில் தமிழரின் கலாச்சாரத்தைச் சீரழித்து, மாற்றுக்கலாச்சாரம் திணிக்கப்படுகிறது. தமிழரின் கலாச்சாரத்தில் பாடல்கள், பாரம்பரிய நாட்டுக்கூத்துகள், பரதநாட்டியம், கதகளி, வாசாப்புகள், நாடகங்கள், கலையும் கலாச்சாரமும் நிறைந்த மேடை நிகழ்வுகளும், தமிழருக்கு உரித்தான பேச்சு நடைகள், பேச்சு முறைகள், சிந்தனைத் தெளிவுகள், ஆடை அணிகள், அலங்காரமுறைகள், உணவு வகைகள், விழுமியங்கள், பண்புகள், தொழில்முறைகள் என்பன பெரும் செல்வக்குவியலாக உள்ளன. இவற்றையெல்லாம் சீரழிக்கும் வகையில் தமிழர் கலாச்சாரத்திற்கு ஒவ்வாத வகையில் பல களியாட்ட நிகழ்வுகளை, இன்னிசை நிகழ்வுகளாக நடாத்திவருகின்றார்கள்.

முள்ளியவளை வித்தியானந்தா பாடசாலை ஒரு பேர்போன கல்விச்சாலை. அதன் வளவில் ஒரு நிகழ்வின் வேளையில் பாடசாலை வளவிலேயே இரா்ணுவத்தினர் குறைந்த விலையில் மதுபானம் விற்பனை செய்துள்ளனர். கிளிநொச்சியில் நடைபெற்ற கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியின் பின்னர் பங்குபற்றிய ஒவ்வொரு வீரருக்கும் ஓர் உணவுப்பார்சலும், மதுபானமும் வழங்கப்பட்டன. வங்காலையில் கடற்படையினர் நடாத்திய விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய வீரா்களுக்கு மதுபானம் வழங்கப்பட்டமை போன்றன குறிப்பிடத்தக்கன.

ஒரு மனிதன் தாமாக கலாச்சாரச் சீர்கேட்டில் விழுவது வேறு. திட்டமிட்ட ரீதியில் ஓர் இனத்தின் கலாச்சாரத்தை அழிப்பது ஓர் திட்டமிட்ட இன அழிப்பாகும்.

### இராணுவத் தலையீடு

ஒருவருடைய வாழ்வில் அவர் விருப்பமின்றி வேறொருவர் தலையிடுவது அவரின் கௌரவத்தையும், உரிமையையும், சுதந்திரத்தையும் மீறி இடைஞ்சல் ஏற்படுத்தும் செயலாகும். இந்நிலையில், இலங்கை இராணுவத்தால் நொந்துபோன தமிழ் இனம் அவர்களின் பிரசனத்தையும், தலையீட்டையும் தமிழர் பலர் விரும்பவில்லை. ஆனால் வடகிழக்கு எங்கு திரும்பினாலும் இராணுவமும், அவர்களின் கண்காணிப்பும், தலையீடும் உள்ளதுடன், இராணுவ மைய நிர்வாகத்தில் தமிழரை ஒவ்வொரு கணமும் தமது கட்டுப்பாட்டிலும், பதட்டநிலையிலும், பயமுறுத்தலிலும் வைத்திருப்பது அவர்களின் இலக்காகும். இவ்வாறு ஓர் இனத்தை சுதந்திரமாக நடமாட விடாது இராணுவச் சீருடையால் சுற்றி வளைத்திருப்பது ஜனநாயக முறையல்ல.

இன்று இலங்கையில் 22 இராணுவப் பிரிகேட்டுக்கள் உள்ளன. இதில் 19 வடகிழக்கில்தான் உள்ளன. அத்துடன் விமானப்படை, கடற்படை, விசேட அதிரடிப்படை, ஊர்காவற்படை, பொலிஸ் என்பன தமிழரை சுற்றி வளைத்து எதிரிகள்போல நடத்துகின்றது. சிவில் நிர்வாகத்திலும் தமிழரின் நாளாந்த வாழ்வும், இராணுவத்தின் தலையீடும் வரையறை தாண்டியுள்ளது. கிராம அலுவலர்போல் வீடு வீடாக சென்று, வீட்டில் உள்ளோருக்கு தொல்லை கொடுக்கின்றார்கள். மீள்குடியேறும் மக்களுக்கும், வடகிழக்கு மீதி மக்களுக்கும் இராணுவமா அல்லது அதிகாரிகளா பொறுப்பு எனத் தெரியாத அளவிற்கு நடந்துகொள்கின்றனர்.

தமிழரின் வீட்டிற்குள், கோவிலுக்குள், பாடசாலைக்குள், ஊருக்குள், பத்திரிகைக்குள் மூக்கை நீட்டி மோப்பம் பிடிக்கிறார்கள். சில நிகழ்வுகளுக்கு இராணுவ அனுமதி தேவை. வீட்டுக் கொண்டாட்டங்கள், ஆலய விழாக்கள், சமூகக் கொண்டாட்டங்கள், விளையாட்டு விழா என்பவற்றில் விருந்தினராக அழைக்கவும் வேண்டும். அழைக்காவிட்டாலும் அழையாவிருந்தினராக வந்துவிடுவார்கள்.

தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்க இராணுவத்தினரே புத்தகங்களுடன் ஆசிரியர்களாக புகுந்த அண்மைக்கால வரலாறும் உண்டு. சிரமதானம் செய்யவும், ஒரு சில வீடுகள், கட்டடங்கள், கோவில்கள் கட்டிக்கொடுக்க ஆசைப்படுகிறார்கள். ஒரு இராணுவம் தம் மக்களுக்கு தேவையான நேரத்தில், அத்தியாவசியத் தேவைகளில் (Essential services) உதவிசெய்வது வழமை. இது அவர்கள் கடமையும்கூட. ஆனால் ஒரு சாத்வீக, ஆயுதப்போராட்டத்தை அடக்கி, பெரும்தொகை மக்களைக் கொன்றும், யுத்தத்தின் பின்னரும் இனக்கலப்பையும், இன அழிப்பையும் மேற்கொள்ளும் அரசாங்கத்தின் முதன்மைக் கையாளாக, அடாவடித்தனம் புரியும் இராணுவம் மேற்கூறிய உதவிகளை செய்வது உதவுவதற்காகவல்ல இராணுவமயமாக்கலுக்கே. போரில் வீடுகள், கட்டிடங்கள், ஆலயங்கள் சேதமாக்கப்பட்டிருக்கலாம். இதற்கு அரசாங்கத்திடம் நஸ்டஈடு கோரவேண்டுமே தவிர இராணுவ உதவியை அல்ல.

உலக கத்தோலிக்க திருச்சபையில் ஒவ்வொரு மறைமாவட்டமும், பங்குகளும் ஆண்டுத்திட்டம் தயாரிப்பது வழமை. அதையும் தமக்குத் தரவேண்டுமென்று இராணுவம் கேட்டு இந்த ஆண்டும் தொல்லை கொடுக்கிறது என்றால், எமது பங்குச்சபைக் கூட்டங்களில் தாமும் ஒருவராக நுழைந்து பங்கெடுக்கிறது என்றால் இதற்குத்தான் பெயர் முழுமையான இராணுவத் தலையீடு. இவ்வளவு இராணுவத்தலையீடு, கட்டுப்பாடு, பயமுறுத்தல் இருந்தும் தனக்குப் பயமின்றி தமிழன் தொடர்ந்து செயற்படுகிறானே என்ற கோபத்திலும், இயலாத் தன்மையிலும் ஒன்றுகூடல்களைக் குழப்பி, கழிவு எண்ணெய்களை சிலர்மீது ஊற்றி பயங்கரவாதச் செயற்பாடுகளை வெளிப்படுத்துகிறார்கள்.

யாழ் வலி வடக்கு மக்கள் தம் குடியிருப்புகளை மீளத்தருமாறு கோரி 15.02.2013 அன்று தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு முன்பாக நடாத்திய உண்ணாவிரதப் போராட்டத்தை சீருடை அணியாத நால்வர் குழப்பினர். தப்பியோடியோர் இராணுவப் பாதுகாப்பைப் பெற்றனர். பிடிபட்டோர் காவல் துறையில் ஒப்படைக்கப்பட்டனர். காவல்துறையினரோ அவ்வாறு எவரும் தம்மிடம் தரப்படவில்லை எனக் கூறிவிட்டனர். ஓர் இராணுவம் ஒரு நாட்டிற்கு பாதுகாப்பிற்குத்தான். ஆனால் தமிழருக்கு எதிரான இன அழிப்பிற்கு மட்டும் இராணுவம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறு தமிழ் இன அழிப்பின் நேரடி, மறைமுக முகவராக இராணுவச் செயற்பாடுகள் உள்ளன என்பதை இக்கட்டுரையின் அனைத்து உப அங்கங்களும் கோடிட்டுக்காட்டுகின்றன.


(தொடர்ச்சி அடுத்த மாத இதழில்)



# அதிர்வுகள்.....!

## அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

### சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 22.




'மரத்தை அதன் கனியால் அறியலாம்'!

ஒரு பெண் எழுத்தாளர் தான் எழுதிய நூல் ஒன்றிற்கு அணிந்துரை எழுதும்படி அறிஞர் பேனாட்சோவிடம் அவளுடைய நூலை அனுப்பியிருந்தாள். நூலின் இரு பக்கங்களை மட்டும் வாசித்துவிட்டு, "வாசித்துப் பார்த்தேன். பிரயோசனம் இல்லை!" என்ற குறிப்புடன் அந்நூலைத் திருப்பி அனுப்பியிருந்தார் பேனாட்சோ. புரட்டிக்கூடப் பார்க்காத பக்கங்களைச் சுட்டிக்காட்டி அப்பெண் கோபத்தோடு, "ஓர் அறிஞராக இருக்கின்றீர்! நூல் முழுவதையும் வாசிக்காமல், நீர் எப்படி இத்தகைய முடிவை எடுக்க முடியும்?" எனக் காட்டமாக எழுதியிருந்தாள். பேனாட்சோ அதற்கும் பதில் அனுப்பியிருந்தார்: "அம்மணியே, ஓர் 'ஓம்லட்' (Omelette - முட்டை, வெங்காயம், பச்சமிளகாய், உப்பு போன்றவைகளைத் கலந்து கலக்கிப் பொரிக்கப்படும் ஒரு உணவு வகை) கூடாத – கெட்டுப்போன முட்டையில் செய்யப்பட்டிருக்கின்றது என்றால், அதை முழுவதும் தின்றுபார்க்கத் தேவையில்லை!" என அப்பெண்மணியினுடைய கேள்விக்கான பதிலாகவும் நூல்பற்றிய தன் அபிப்பிராயமாகவும் மீண்டும் தெரிவித்திருந்தார்.

அரச அதிகாரிகள், சமூகத் தலைவர்கள், கழக நிறுவுனர்கள், சமய முதல்வர்கள் போன்றவர்களின் செயற்பாடுகள் முழுவதையும் ஆய்ந்து, ஆராய்ந்து, சீர்தூக்கிப் பார்த்துத்தான் அவர்கள் பற்றிய அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றில்லை. அவர்களின் 'கனிகளைக் கொண்டு' (மத்தேயு 12/33) அவர்கள் யாரெனக் கண்டுகொள்ளலாம். அதேபோலதான் நிறுவனங்கள், அமைப்புக்கள், கழகங்கள், ஒன்றியங்கள், மன்றங்கள், அரசியல் கட்சிகள், ஏன் அரசாங்கங்களைக்கூட இவ்வகைப்படுத்தலுக்குள் வைத்துப்பார்க்கலாம்.

பொய்யும், புரட்டும், அடாவடித்தனமும், ஆணவச்செருக்கும், அட்டகாசங்களும் அத்துமீறிப் போகும்போது ஓர் அமைப்பினுடைய, ஓர் அரசியல் கட்சியினுடைய, ஓர் அரசினுடைய கனிகள், அதாவது அதன் செயற்பாடுகள் - அபிவிருத்தித் திட்டங்கள், நல்ல கனிகளாக ஒருபோதும் இருக்காது. சிலவேளைகளில் பார்வைக்கு நல்லவையாகத் தோன்றலாம். வெம்பிப் பழுத்த அல்லது 'போமலின்' (Formalin) பாவித்துப் பழுத்த அல்லது புகையடித்துப் பழுத்த கனிகள்கூட நல்ல கனிகள் போன்றுதானே காட்சியளிக்கின்றன!

**2013, வடமாகாணசபைத் தேர்தல் களம்!**

பிறக்கவிருக்கும் புரட்டாதித்திங்கள் வடமாகாணத் தமிழ் மக்களுக்கு மிக முக்கியமான ஒரு மாதம். நடைபெறவிருக்கும் வடமாகாணத் தேர்தலில் 36 மாகாண சபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு தொளாயிரத்தியாறு (906) பேர் போட்டியிடுகின்றார்கள். இவர்கள் பதின்நான்கு (14) கட்சிகளைச் சேர்ந்தோரும், இருபத்தொன்பது (29) சுயேட்சைக் குழுக்களைச் சார்ந்தோரும் அடங்குவர் என ஊடகங்களின் ஊடாக அறியக்கூடியதாக இருக்கின்றது. இத்தகவல், ஒன்றை மட்டும் மிகத் தெளிவாகச் சுட்டிநிற்கின்றது; தமிழ் மக்களின் வாக்குகளை நன்கு திட்டமிட்ட வகையில் சிதறடிக்கச்செய்து தமிழ்தேசியப் பிரதிநிதித்துவத்தை இயன்றவரை குறைப்பதும் - இல்லாதொழிப்பதும் இவ்வியூகத்தின் தெளிவான இலக்கு என்பது மேற்சொன்ன தகவல்களில் இருந்து தமிழ் மக்களுக்குக் கிடைக்கப்பெறுகின்ற செய்திகளில் ஒன்று!

**தமிழ்த்தேசிய கூட்டமைப்பை வீழ்த்துவது (TNA) தமிழர் அபிலாசைகளை (Tamil Cause) தோற்கடிப்பதற்குச் சமமானது**

இத்தேர்தலில், தமிழர் தரப்பான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை வீழ்த்துவதற்காக, எத்தனை கட்சிகளையும் சுயேட்சைக் குழுக்களையும் களத்தில் இறக்கமுடியுமோ, அத்தனை கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் வடமாகாணத் தேர்தலில் 'முதலீடு செய்யப்பட்டு' இறக்கப்பட்டுள்ளன. வீட்டுத்திட்டங்கள், விதவைகளுக்கான சுயதொழில் வாய்ப்புக்கள், இளையோருக்கான வேலைவாய்ப்புக்கள் என வாரி வழங்கிக்கொண்டும் இருக்கின்றார்கள்.

இவ்விடத்தில் சில விடயங்களைச் சிந்தையில் கொள்வது நல்லது; (1) போர் முடிந்து நான்கு ஆண்டுகள் கழிந்த நிலையில் எப்போதும் இல்லாத அக்கறை இவர்களுக்கு இப்போது திடீரென எப்படி வந்தது? என்று தமிழ் மக்களாகிய நாம் சிந்திக்க வேண்டும். (2) வீடுகளை அழித்து, நம் வடகிழக்குத் தாய்மாரின் சுமார் தொண்ணூறாயிரம் (90,000) பேர் விதவைகள் ஆவதற்குக் காரணமானவர்கள் அவர்கள்! இப்போது, வீடுகளைக்கட்டி, விதவைகளுக்கான சுயதொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றார்களாம்! கிளியைக் கொன்று அதற்குத் தங்கக்கூடு அமைக்கும் கதைதான் அவர்களின் செயற்பாடுகள்.

(3) வேலைவாய்ப்புக்கள் அவர்களின் தந்தையர்களின் வீட்டுச் சொத்துக்கள் அல்ல. வேலைவாய்ப்புக்களைப் பெற நாம் உரிமை உடையவர்கள், தகமை உடையவர்கள். அவ்வாறாகவா, வேலைவாய்ப்புக்களை வழங்குகின்றார்கள்? பிச்சை போடுவதைப்போல போடுகின்றார்கள். பிச்சை போடுகின்றபோதுகூட மரியாதையோடும் தர்மத்தோடும்தான் கொடுப்பார்கள்!

(4) இத்தேர்தல் காலங்களில் இலட்சக்கணக்கான பணத்தை விளம்பரத்திற்கும், வாகனத் தொடரணிகளுக்கும், களியாட்டங்களுக்கும் அள்ளி இறைக்கின்றார்கள்.

இவையெல்லாம் யாருடைய பணம்? ஏழை மக்களின் வருவாயில் - நாட்டு மக்களின் வரிப்பணத்தில் நடந்துகொண்டிருக்கின்றன. மக்களை ஏமாற்றி, வாக்குகளைக் கவர்ந்து, அவர்கள்மேல் சவாரிசெய்யப் பழகிக்கொண்டார்கள். அப்பழக்கத்தில்தான் 'வடமாகாண சபைத் தேர்தல் சவாரி' செய்ய வந்திறங்கி, தேர்தல் படையணிகளையும் பட்டாளத்தினரையும் இறக்கி விட்டிருக்கின்றார்கள். தமிழ்த்தேசிய கூட்டமைப்பை வீழ்த்துவது தமிழர் அபிலாசைகளை – தமிழர் வாழ்வுரிமையை தோற்கடிப்பதற்குச் சமமானது என்பதைத் தமிழ் மக்கள் நினைவில் நிறுத்தவேண்டும்.

**தமிழரின் கையில் இப்போதிருப்பது வாக்குரிமை ஒன்றே!**

அன்பர்களே! நண்பர்களே!! சகோதரத் தமிழ் உறவுகளே!!! கொடுக்கின்ற அனைத்தையும் யார் கொடுத்தாலும் வாங்குங்கள். ஏன் தெரியுமா? அவை நமக்குரியவை. ஒருவகையில், நம்மிடமிருந்து பறித்தவைகளில் சிலவற்றைத் திரும்பத் தருகின்றார்கள். வரியாக, கப்பமாக, வெளிநாட்டு உதவியாக நமக்கு வந்துசேரவேண்டியவைகளைத்தான் அவர்கள் கபடமாக - தந்திரமாகத் தந்துகொண்டிருக்கின்றார்கள். எனவே, மீண்டும் அழுத்திச் சொல்கின்றேன், கொடுப்பதையெல்லாம் யார் கொடுத்தாலும் பெற்றுக்கொள்ளுங்கள். அதில், எந்தத் தவறும் கிடையாது. ஆனால், 'பெற்றுக்கொண்டோமே, நன்றிக்கடன் செலுத்தவேண்டுமே' என்று மட்டும் உணர்வுபூர்வமாகச் செயற்படாதீர்கள்; காரணம், எங்கள் அங்கீகாரத்தோடு எங்களை அடிமைப்படுத்தவே எமது வாக்குகளைக் கேட்டு வருகின்றார்கள். எல்லாவற்றையும் இழந்துபோயிருக்கும் எமக்கு, இப்போது இருப்பது எம் வாக்குரிமை ஒன்றே ஒன்றுதான்! இவ்வாக்குரிமையை, தமிழர் எம் அபிலாசைகளைப் பெறுவதற்கான ஆயுதமாகப் பயன்படுத்துங்கள்.

**தமிழ் மக்கள் நலன் சார்ந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு**

உலக நாடுகளின் முன் - சர்வதேசத்தின் முன் நாம் யார் என்றும், தமிழர்களாகிய நாம் எதிர்பார்ப்பவை எவை என்றும், எம் மக்களின் ஒருமித்த அபிலாசை என்ன என்றும் எம் வாக்குரிமையைப் பயன்படுத்தித் தெளிவாகத் தெருவிக்கவேண்டிய அவசரத்தேவை இருக்கின்றது. எனவேதான், தமிழ் மக்கள் தீர்க்கதரிசனத்தோடு செயற்படவேண்டிய தருணம் ஒன்று, மீண்டும் நம் வீடுதேடி வந்துள்ளது. சுருங்கக்கூறின், இருக்கின்ற அரசியல் கட்சிகளுக்குள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒன்றே இன்று ஒட்டுமொத்த தமிழ் மக்கள் நலன் சார்ந்த தமிழ்த்தேசியக் குரலாக ஒலித்துக்கொண்டிருக்கின்றது என்பதை தமிழ் மக்கள் இம்மாகாணத் தேர்தலில் வெளிப்படுத்தவேண்டும் என சமூகத் தலைவர்களும் புத்திஜீவிகளும் எதிர்பார்த்து நிற்கின்றனர். எனவே, ஒவ்வொருவரும் வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியத்திற்கு வாக்களித்து தமிழர் அபிலாசைகளை வெளிப்படுத்த முன்வருவது நம் அறக்கடனாகும்.

**முள்ளிவாய்க்கால் முடிவல்ல**

வேலணையைச் சேர்ந்த தேனாள் சுரேஸ் 'முள்ளிவாய்க்கால்' என்ற தலைப்பில் தினக்குரல் பத்திரிகையில் 05.05.2013அன்று ஒரு விடயத்தை எழுதியிருக்கின்றார். அது, கதையா? கவிதையா? காவியமா? அல்லது நம் மக்களின் வரலாற்றின் ஒரு பகுதியா? எதுவோ தெரியவில்லை. அது எதுவென நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்: "1 கிலோ அரிசி 2,600 ரூபா, 100 கிறாம் சீனி 1,100 ரூபா, 100 கிறாம் செத்தல் 2,800 ரூபா, 02 பனடொல் 500 ரூபா, 400 கிறாம் அங்கர் பால்மா 4,000 ரூபா, ஓ எல்லாமே நல்லவிலை போனது. அங்கே சும்மா போனது எம் உயிர்கள் மட்டும்தான்!" என்றெழுதியிருந்தார். ஆயிரமாயிரம் எம் உறவுகளை 2009இல் கொன்றொழித்ததன் பின்னும் மனிதாபிமானப் போர் ('Humanitarian Operation') என்றும், 'பூச்சியச் சேதம்' ('Zero Casualty') என்றும், இன்றும் படுபொய்யைச் சொல்லிக்கொண்டு எம்மிடமே வந்து வாக்குக் கேட்பதற்கு இவர்களுக்கு என்ன அருகதை இருக்கின்றது? 'முள்ளிவாய்க்காலோடு தமிழர் அபிலாசைகளும் முடிந்தது' என்றுதான் நினைக்கின்றார்கள். அவ்வாறு, முள்ளிவாய்க்காலோடு தமிழினத்தின் கதை முற்றுப்பெற முடியாது என்பதை இறை நீதியும் உலக வரலாறும் நமக்கு கற்றுத்தரும் பாடமாகும்.

**சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பாமல் இன்றும் பல்லாயிரம் மக்கள்**

இதுவரை அழித்தவைபோக, இன்னுமின்னும் ஆயிரமாயிரம் ஏக்கர் வளமான விளைச்சல் நிலங்கள் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. யாழ். வலிகாமம் வடக்கில் இருபத்திநான்கு (24) கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய ஆறாயிரத்து முன்னூற்று எண்பத்தியொரு (6381) ஏக்கர் மக்களின் நிலம், யாழ். வடமராச்சி கிழக்கு மருதங்கேணியில் எழுநூறு (700) ஏக்கர் தனிநபர்களுக்குரிய காணி, யாழ். மண்டைதீவு செம்மண்தோட்ட அறுநூறு (600) ஏக்கர் மக்களின் வாழ்விடம், கொக்கிளாயில் மூவாயிரம் (3000) ஏக்கர் தனியார் காணிகள், போன்றவை போல, நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மக்களிடமிருந்து பறிக்கப்படுகின்றன. இன்னும், பாரம்பரியமான கிராமங்களான மன்னாரின் கடல்வளமும் வயல்வளமும் கொண்ட முள்ளிக்குளம்; முல்லைத்தீவில் கேப்பாப்புலவு, கொக்குளாய்; திருகோணமலையில் சம்பூர் கிழக்கு, சம்பூர் மேற்கு, சம்புக்கழி கடற்கரைச்சேனை போன்ற கிராமங்களும்; யாழ்ப்பாணத்தில் பலாலி, வளலாய், அந்தோனியார்புரம், வள்ளுவர்புரம், வசாவிளான், ஊறணி, ஒட்டகப்புலம், தோலகட்டி, மயிலிட்டி, தையிட்டி, முலவை, இடைக்காடு, காங்கேசன்துறை போன்ற பல பாரம்பரிய - செல்வம் கொழிக்கும் கிராமங்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## புனித பத்தாம் பத்திநாதர்

பாப்பு (கி.பி. 1835 - 1914)



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

# புனிதர்களின் பாதையில்

திருத்தந்தையர்களின் வரலாற்றைச் சித்தரிக்கும் புகழ்பெற்ற பாரன்வான் பாஸ்டர் என்ற வரலாற்று ஆசிரியர் 10ஆம் பத்திநாதர் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார். "மக்களை ஈர்க்கும் தன்மை இவரிடம் மிகுந்திருந்தது. மிக எளிமையான தோற்றம். மிகவும் அன்பானவர். இன்னும் கொஞ்சம் கூடுதலாகச் சொல்ல வேண்டுமா? யார் யாரெல்லாம் இவரைப் பார்த்துப் பேசும் வரம் பெற்றார்களோ, அவர்கள் அனைவரும் ஒரு புனிதர் முன் நிற்கிறோம் என்பதை உணரத் தவறவில்லை."

தாம் இறந்து 40 ஆண்டுகள் கழியுமுன்னரே நம் பீடங்களில் வைத்து நாம் வணங்கும் நிலையில் ஒரு புனிதராகத் தகுதி பெற்றவர் பாப்பரசர் 10ஆம் பத்திநாதர். இவர் 1835ஆம் ஆண்டு இத்தாலி நாட்டில் ரீயேஸ் நகரத்தில் கடுமையான உழைப்பாளிகளான பெற்றோரிடமிருந்து தோன்றியவர்.

இளமையிலிருந்தே இவரிடம் மிக மேலான முறையில் அறிவுக்கூர்மையும் ஞானக் காரியங்களில் ஆர்வமும் காணப்பட்டன. குருமடத்தில் முதல் ஆண்டிலேயே மிகப்பெரிய புகழ்ச்சிக்குரிய பட்டத்தைப் பெற்றார். 1858 ஆம் ஆண்டில் குருப்பட்டம் பெற்றார். குருப்பட்டத்திற்குப் பின் அவர் பணி செய்த முதற்பங்கில் எப்பொழுதும் பங்கு மக்களுக்கு உதவியாக இருந்தார். நோயாளிகளைப் பேணினார். மிகவும் ஆற்றல் வாய்ந்த திருமறை உரையாற்றி வந்தார். பலமணி நேரம் பாவசங்கீர்த்தனம் கேட்டார். இவ்வாறாகக் குருத்துவத் தொழிலில் தமது முழுக்கவனத்தையும் செலுத்தினார். பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டபொழுது "எல்லா மனிதர்களுக்கும் எல்லாம்" என்ற குறிக்கோளோடு திருப்பணியைத் தொடர்ந்தார். "சிறு பிள்ளைகளுக்கு மறை விசுவாசத்தைக் கற்றுக்கொடுப்பதன் மூலமே இறை வார்த்தையாகிய வித்துக்கு நல்ல நிலம் தயார் செய்யப்படுகிறது" என்பார்.

குருப்பட்டம் பெற்று 26 ஆண்டுகளுக்குப் பின் ஆயராக நியமனம் பெற்றார். ஆயரான பின் அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளை இறைவன் ஆசீர்வதித்தார். 13ஆம் சிங்கராயர் அவரைக் கர்தினாலாக உயர்த்தினார். மூன்றே நாட்களுக்குப் பின் அவரை வெனிஸ் நகரின் பிதாப்பிதாவாக உயர்த்தினார். இவர் உழவு செய்யும் குடும்பத்திலிருந்து தோன்றியதால் பாருலகெல்லாம் இருக்கும் தொழிலாளரின் நலனில் மிகவும் அக்கறை கொண்டார்.

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

# மன்னாரில் இடம்பெற்ற தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழா

# முதலாம் நாள் நிகழ்வுகள்

## தொடக்க விழா

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மன்னார் தமிழ்ச் சங்கம் மன்னாரில் ஏற்பாடு செய்திருந்த மூன்று நாள் விழாவின் முதல் நாள் நிகழ்வுகள் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி வெள்ளிக் கிழமை (02.08.2013) மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது. தொடக்க விழா, இலக்கிய அரங்கு, கலை அரங்கு என மூன்று அரங்குகளாக முதல் நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன.

'பேராசிரியர் சு. வித்தியானந்தன்' அரங்கில் மன்னார் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் காலை 9.00 மணிக்கு தொடக்க விழா நிகழ்வுகள் ஆரம்பமாகியது. மன்னார் மாவட்ட செயலகத்தின் முன்பாக ஊர்வலத்துடன் இவ்விழா ஆரம்பமாகியது. ஊர்வலம் ஆரம்பமாவதற்கு முன்னர் மன்னார் பனங்கட்டுக்கொட்டு கிராமத்தின் முக்கிய வீதியாகிய கடலோரி வீதி 'தனிநாயகம் அடிகளார் வீதி' என பெயர் மாற்றம் செய்யப்பட்டு திறந்துவைக்கப்பட்டது. அதன் பின்னர் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள தனிநாயகம் அடிகளாரின் உருவச் சிலை மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களினால் திறந்துவைக்கப்பட்டது.

தொடக்க விழாவில் முதன்மை விருந்தினராக மன்னார் அரசாங்க அதிபர் சார்பில் உதவி மாவட்டச் செயலாளர் திரு. பரமதாசன் அவர்கள் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக மன்னார் நகர பிதா திரு. எஸ். ஞானப்பிரகாசம் அவர்களும், வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ச. மோகநாதன் அவர்களும் கலந்துகொண்டனர். கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம் யாழ் அமதிகள் முதல்வர் இல்லப் பொறுப்பாளர் அருட்திரு. ஜெறோம் லெம்பேட் அவர்கள் கலந்துகொண்டார்.

சர்வமதத் தலைவர்களின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இவ்விழாவில் இறைவணக்கம், மங்கள இசை ஆகியவற்றைத் தொடர்ந்து மன்னார் வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் (தமிழ்) திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். இவ்விழாவின் முக்கிய நிகழ்வாக முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் குழந்தைக் கலைஞர்கள் வழங்கிய 'யார் குழந்தை' என்ற நாட்டுக்கூத்து நாடகம் இடம்பெற்றது. 'தமிழாழி' என்ற பெயரில் நூற்றாண்டு விழா மலரும் வெளியிடப்பட்டது. பாடசாலை மாணவ மாணவர்களின் நடன நாட்டிய நிகழ்வுகளும் இடம்பெற்றன. மன்னார் தமிழ்ச் சங்க நிர்வாகச் செயலாளர் மன்னார் அமுதன் நன்றியுரை வழங்கினார்.





























## இலக்கிய அரங்கு I

மாலை 2.00 மணிக்கு ஆரம்பமாகிய இலக்கிய அரங்கு 'வித்துவான் ரகுமான் அரங்கு' என பெயரிடப்பட்டிருந்தது. மன்னார் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு எம். சிவானந்தன் தலைமையில் இடம்பெற்ற இவ்வரங்கில் முதன்மை விருந்தினராக மன்னார் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எம். ஏ. ஜே. துரம் அவர்கள் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் வைத்தியர் எம். கதிர்காமநாதன் அவர்களும், கௌரவ விருந்தினர்களாக பேசாலையைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் கலாபூசணம் எஸ். அந்தோனி மிராண்டா அவர்களும், முருங்கனைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் கலாபூசணம் குழந்தை செபமாலை அவர்களும் கலந்துகொண்டனர்.

விருந்தினர் கௌரவம், மங்கள விளக்கேற்றல், தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியவற்றைத் தொடர்ந்து வரவேற்புரையை திருக்கேதீச்சரம் சிவனருள் இல்லப் பணிப்பாளர் திரு. வே. பொ. மாணிக்கவாசகர் நிகழ்த்தினார். இந்த அமர்வின் சிறப்பு நிகழ்வாக "தனிநாயகமானார்" என்ற தலைப்பில் கவியரங்கம் இடம்பெற்றது. கலாபூசணம் மன்னார் அமுது (அ. அந்தோனிமுத்து) அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இக்கவியரங்கில் மன்னார் மாவட்ட பாடசாலை மாணவர்கள் பங்கேற்றனர். அதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட சைவக்கலை இலக்கிய மன்றத்தினால் 'சுழலும் சொற்போர்' நிகழ்வு இடம்பெற்றது. இதற்கு நடுவராக சிவஸ்ரீ மஹா தர்ம குமார குருக்கள் கடமையாற்றினார். தொடர்ந்து நடன நாட்டிய நிகழ்வுகள் இடம்பெற்றன. நன்றியுரையை ஆசிரியர் திரு. அமல்ராஜ் றெவல் வழங்கினார்.











# மன்னாரில் இடம்பெற்ற தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழா

# முதலாம் நாள் நிகழ்வுகள்

## கலையரங்கு

மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகிய கலையரங்கு 'கவிஞர் நாவண்ணன் அரங்கு' என பெயரிடப்பட்டிருந்தது. மன்னார் தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவர் ஜனாப் மக்கள் காதர் அவர்கள் இவ்வரங்கிற்கு தலைமை தாங்கினார்.

இவ்வரங்கிற்கு சிறப்பு விருந்தினராக அருட்திரு. சேவியர் குரூஸ் அடிகளாரும், கௌரவ விருந்தினர்களாக வங்காலையைச் சேர்ந்த கலைஞர் எல். சி. லெம்பேட் அவர்களும் தாழ்வுபாட்டைச் சேர்ந்த கலைஞர் த. பர்னாந்து அவர்களும், பேசாலையைச் சேர்ந்த நாவலாசிரியர் எஸ். ஏ. உதயன் அவர்களும் கலந்துகொண்டனர்.

விருந்தினர் கௌரவம், மக்கள விளக்கேற்றல், தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியவற்றைத் தொடர்ந்து வரவேற்புரையை மன்னார் பிரதேச சபைத் தலைவர் திரு. எஸ். மாட்டீன் டயஸ் அவர்கள் வழங்கினார். இவ்வரங்கின் சிறப்பு நிகழ்வுகளாக மன்னார் இளம் கலைஞர் மன்றம் வழங்கிய கர்நாடக இசைக்கச்சேரி இடம்பெற்றது. அத்துடன் நானாட்டான், ஆவணம் கிராமத்தைச் சேர்ந்த புனித கார்மேல் அன்னை கலாமன்றத்தினால் 'தாவீதின் வெற்றி' என்ற நாட்டுக்கூத்து நாடகம் இடம்பெற்றது. தொடர்ந்து பாடசாலை மாணவியர்களின் பல்வேறு நடன நாட்டிய நிகழ்வுகள் இடம்பெற்றன. நன்றியுரையை மன்னார் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த திரு. சதீஸ் வழங்கினார்.

மன்னாரில் இடம்பெற்ற தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மன்னார் நகரின் நுழைவாயிலில் மிகப்பெரும் பதாதை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. நகரமெங்கும் பல வர்ணக் கொடிகள் கட்டப்பட்டு மன்னார் நகரம் விழாக்கோலம் பூண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


















## புனிதர்களின் பாதையில் ..........

10ஆம் பக்கத் தொடர்ச்சி

இவர் காட்டிய ஆர்வத்தின் காரணமாக, நாத்திகக் கட்சியில் இருந்த தொழிலாளர் பலர் தங்களை அந்தக் கட்சியினின்று விடுவித்துக்கொண்டனர். 13ஆம் சிங்கராயர் இறந்தபின் இவர் பாப்பரசராகத் தெரிந்துகொள்ளப்பட்டார்.

இவர் தமது எளிய குடும்ப நிலையை எப்போதும் மறந்தவரல்லர், "ஏழையாகப் பிறந்தேன், ஏழையாக வாழ்ந்தேன், ஏழையாகவே இறப்பேன்" என்று அடிக்கடி கூறுவார். பாப்பரசர்களுக்குரிய உடைகளை உடுத்தும்போது, உடன் இருப்பவர்களை நோக்கி, "எப்படி என்னை அலங்கரித்து இருக்கிறார்கள், பாருங்கள்! இவற்றை ஏற்றுக்கொள்வது என்பது ஒரு பெரிய தவமுயற்சியாக இருக்கிறது." என்பார். ஆயருக்குரிய தமது விருதுவாக்காகிய, "கிறிஸ்துவின் வழியாக எல்லாவற்றையும் புதுப்பித்தல்" என்பதையே பாப்புவின் விருது வாக்காகவும் கொண்டார். திருவழிபாடு, சிறப்பாகத் திருப்பலி, குருக்களின் கட்டளைச் செபம், திருச்சபைச் சட்டங்களைப் புதுப்பிப்பது, கத்தோலிக்கச் சமுதாயத்தொண்டு ஆகிய இவைகளே இவரது கவனத்தைப் பெரிதும் ஈர்த்தன. இன்றைக்கு இவர் "திவ்விய நற்கருணைப் பாப்பரசர்" என்றே புகழப்படுகின்றார். அருள் வாழ்வு நிலையில் இருக்கும் அனைவரும் சுத்த கருத்துடன் நாள்தோறும் திவ்ய நன்மை வாங்கலாம் என்று உத்தரவளித்தவர் இவரே. கி.பி 1914ஆம் ஆண்டு முதல் உலகப்போர் மூண்டதினால் ஏற்பட்ட அதிர்ச்சியில் இவர் தமது 79ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார். இறுதிவரை அயராது உழைத்தார். நாற்பது ஆண்டுகளுக்குப்பின் 12ஆம் பத்திநாதர் பாப்பரசரால் இவருக்குப் புனிதர் பட்டம் அருளப்பட்டது.

**சிந்தனைக்கு :** திவ்விய நற்கருணை பாப்பரசர் நமக்குக் காட்டிய வழியைப் பின்பற்றி அடிக்கடி திருப்பந்தியில் பங்குகொள்ள ஆர்வமுடன் இருப்போம்.

## இளையோரே உங்களில் ....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

தொடர்ந்து அவர் கூறியதாவது, இலத்தீன் அமெரிக்காவில் இரண்டாவது தடவையாக இளையோர் தினம் கொண்டாடப்படுகிறது. வெகு தூரத்திலுள்ள நாடுகளில் இருந்து இங்கு அநேகர் ஒன்றுகூடியுள்ளீர்கள். உங்கள் அனைவரையும் உலக மீட்பர் கிறிஸ்து அணைத்து ஆசீர் வழங்குகிறார். அன்று திபேரியா ஏரியருகே தன் சீடர்களை சந்தித்த இயேசு, அவர்கள் மனிதர்களைப் பிடிப்பவர்களாக மாறும்படி அழைத்தார். அதே இயேசு இங்கு கூடியிருக்கும் உங்களையும் பார்த்து அவ்வாறே அழைக்கிறார். "என்னைப் பின்செல்லுங்கள்" அவரது அழைப்பை ஏற்க தயாராக இருக்கிறீர்களா? உங்கள் குடும்பமும் நீங்கள் வாழும், சமுதாயமும், உங்களிடம் நம்பிக்கை எனும் கொடையை வழங்கியுள்ளது. அதை உறுதிப்படுத்தவே இங்கு நான் உங்கள்முன் நிற்கின்றேன்.

இங்கு கூடியுள்ள அனைவரையும் நான் வாழ்த்துகிறேன். உலகில் உள்ள அனைத்து இளையோரையும், குறிப்பாக இங்கு வரமுடியாமல், வானொலி, தொலைக்காட்சி, வழியாக தொடர்புகொண்டிருக்கும் அனைத்து இளையோரையும் நான் வாழ்த்துகின்றேன். உலகின் அனைத்து இளையோர்மீதும், நான் எப்போதும் நம்பிக்கை வைத்துள்ளேன். இப்பூமியெங்கும் புது வசந்தம் பரவ இளையோர் வழியாக கிறிஸ்து ஏற்பாடு செய்கிறார். "செல்லுங்கள், பணிபுரிய! அஞ்ச வேண்டாம்! நற்செய்தியை எடுத்துச்செல்வது கடவுள் சக்தியை எடுத்துச் செல்வதாகும். கடவுள் எனும் சக்தியைக் கொண்டு தீமையையும், வன்முறையையும் அடித்து வீழ்த்த முடியும். தன்னலம், சகிப்பு அற்ற தன்மை, காழ்ப்புணர்வு ஆகியவற்றின் தடைகளை தவிடுபொடியாக்க முடியும். எனக்காகவும் நீங்கள் செபிக்க மறக்க வேண்டாம்.

திருத்தந்தைக்கு உங்கள் அனைவரின் செபமும் தேவைப்படுகிறது. விரைவில் மீண்டும் சந்திப்போம். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக என்று கூறி இளையோரை வாழ்த்தினார்.

## அருட்திரு விக்டர் இம்மனுவேல் குரூஸ் அடிகளாரின் நீங்காத நினைவுகள்

எம்.ஆர். பிறின்ஸ் டயஸ், ஆசிரிய ஆலோசகர்
வலயக்கல்விப் பணிமனை, மன்னார்.

"தேவ அழைத்தலின் விளைநிலம்" என அழைக்கப்படுகின்ற வங்காலையின் இரண்டாவது குருமணியாக விளங்கி 2007ம் ஆண்டு தமது குருத்துவ வாழ்வில் பொன் விழாவினையும் கொண்டாடிய அருட்தந்தை கலாநிதி விக்டர் இம்மனுவேல் அடிகள் தமது 83வது வயதில் கொழும்பிலுள்ள அமல மரித்தியாகிகள் சபை இல்லத்தில் ஆடி மாதம் 4ம் திகதி இறைபதம் அடைந்தார். அவருடைய பூதவுடல் கொழும்பு, வங்காலை ஆலயம், மன்னார் ஆயர் இல்லம் ஆகிய இடங்களில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 8ம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நிகழ்ந்த இரங்கல் திருப்பலியின் பின்னர் மன்னார் குருக்கள், துறவிகளுக்கான சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஆயர்கள், குருக்கள், துறவிகள் என பலர் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அமரர் விக்டர் இம்மனுவேல் குரூஸ் அடிகள் வணபிதா சேவியர் குரூஸ் அடிகளின் மூத்த சகோதரர் ஆவார். வணபிதா சேவியர் குரூஸ் அடிகள் பல ஆண்டுகளாக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வராகப் பணியாற்றியதுடன், மடுமாதா சிறிய குருமட இயக்குனராகவும், மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச்சங்கத் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

இவர்களின் பெற்றோர் பி. அந்தோனியப்பு குரூஸ், க. சிசிலியா டயஸ் ஆகியோர் ஆவர். கத்தோலிக்க விசுவாசத்தில் உதாரணமிக்க நல்லதோர் குடும்பத்தில் நான்கு பிள்ளைகளில் முதல் இரு பிள்ளைகளையும் துறவற வாழ்வுக்கு இவர்களின் பெற்றோர் அர்ப்பணித்தனர். அடிகளாரின் குடும்பம் ஓர் இசைக் குடும்பம். அவர்கள் எல்லோருமே நன்றாகப் பாடக்கூடியவர்கள். மக்கள் மத்தியில் "போஸ்ட் மாஸ்டர்" குடும்பம் என பிரசித்தி பெற்றிருந்தனர். தந்தையவர் தொழிலின் நிமித்தம் நானாட்டானுக்கு சென்றதால் இவர்கள் இடம்பெயர்ந்து அங்கேயே வசிக்கத் தொடங்கினர். வங்காலை, நானாட்டான் போன்ற பங்குகளில் பாடகர் குழாமிற்கு தலைமை தாங்கி பாடகர்களை பழக்கி, இசைக்கருவிகளை மீட்டு வழிபாடுகளை சிறப்பிப்பவராக இவர்களின் தந்தை விளங்கியிருந்தார்.

மறைந்த அடிகளார் விக்டர் குரூஸ் தமது ஆரம்பக் கல்வியை வங்காலை மகாவித்தியாலயத்தில் கற்றார். பின்பு புனித மாட்டீனார் சிறிய குருமடத்தில் இணைந்துகொண்டார். இடைநிலைக் கல்வியை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் கற்றார். களுத்துறை நவசன்னியாச மடத்தில் துறவற பயிற்சி பெற்று 1951ம் ஆண்டு முதலாவது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி நுகேகொடையிலுள்ள அமல மரித்தியாகிகள் குருமடத்திற்கு அனுப்பப்பட்டார். பின்பு அம்பிட்டிய தேசிய குருமடத்தில் மெய்யியல், இறையியல் படிப்பை முடித்து அதே குருமடத்தில் 1957ம் ஆண்டு ஆயர் கிளாபோ ஆண்டகையினால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவரின் திறமைகளை இனங்கண்ட இவருடைய மேலதிகாரிகள் உயர் படிப்புக்காக இவரை றோமாபுரிக்கு அனுப்பிவைத்தனர்.

றோமாபுரி கிறகோரியன் பல்கலைக்கழகத்தில் தத்துவத்துறையில் கலாநிதி (PH.D) பட்டமும் பெற்றுக்கொண்டார். லான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் இந்து கலாச்சார சைவ சித்தாந்தத்தில் முதுமாணிப்பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். கண்டி, அம்பிட்டிய தேசிய குருமடத்தில் பல வருடங்களாகப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அங்கு மெய்யியல் துறையின் இயக்குனராகவும் அமலமரித்தியாகிகள் சபையின் குருமட மாணவர்களுக்கு தலைவராகவும் நியமிக்கப்பட்டார். பல மறைமாவட்டங்களின் ஆயர்கள், துறவற மாகாணத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், குருக்கள், துறவிகள் போன்ற பல்வேறு தரப்பினரும் இவரிடம் கற்றவர்கள் ஆவர். அடிகளாரின் பணி இலங்கையிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் இக்குருக்கள் வாயிலாகப் பரவியது எனலாம்.

1987 தொடக்கம் 2007ம் ஆண்டுவரை தென்னாபிரிக்க நாட்டின் மறைபோதகப் பணிக்காக அழைத்தல் பெற்ற விக்டர் குரூஸ் அடிகளார், ஆயர் ஏர்வீன் ஆண்டகையுடன் பணியாற்றினார். 1988இல் கிம்பர்லி மறைமாவட்டத்திலுள்ள MAFINK புனித அந்தோனியார் பங்கில் பணியாற்ற அழைக்கப்பட்டார்.

மிகவும் எளிமையான வாழ்வு வாழ்ந்த இவர் எல்லோருடனும் மிகவும் அன்பாக பழகும் சுபாவமுள்ளவராகவும், நகைச்சுவையுடன் மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் இயல்புடையவராகவும் விளங்கியிருந்தார். விக்டர் சுவாமி ஒருமுறை பேசினால் போதும் உடனடியாகவே மற்றவர்களின் மனதில் இடம்பிடித்திடுவார். அவர் வாழ்வினை சுமையாக ஒரு போதும் எண்ணியதில்லை. தானும் மற்றவர்களும் மகிழ்ச்சியாக இருப்பதையே அவர் விரும்பினார். "எப்போதும் மகிழ்ச்சியாக இருங்கள் என்ன நடத்தாலும் இறைவனுக்கு நன்றி கூறுங்கள்" என்பதை வேதவாக்காகக் கொண்டிருந்தார். இவர் திருப்பலியிலும் வழிபாடுகளிலும் மக்களைக் கவரக்கூடிய வகையில் அழகான குரல் வளம் உடையவராக இருந்தார். சிறுவர்கள் இவரைப்போல திருப்பலி வைத்து அவரின் குரலில் பேசுவதை அறிந்திருக்கின்றேன். இவர் சிறந்த இசைக்கலைஞராகவும், விளையாட்டு வீரனாகவும் விளங்கியிருந்தார். லத்தீன், ஆங்கில மொழிப் புலமை உடையவராகவும் திகழ்ந்தார். விடுமுறைக் காலங்களில் தமது உறவினர் வீடுகளுக்குச் சென்று சிறுவர்களுடன் நேசமாகப் பழகக் கூடியவர். நானாட்டான் கிராமத்தில் அமைந்துள்ள தமது பெற்றோரின் கல்லறைகளுக்குச் சென்று செபிப்பதை இவர் தவறவிடுவதில்லை.

2007ம் ஆண்டு தென்னாபிரிக்க நாட்டிலும், வங்காலை, நானாட்டான், மன்னாரிலும் தமது குருத்துவ வாழ்வின் பொன் விழாவினை சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தார். இவருடைய நினைவாக பொன்விழா மலரினையும் வங்காலை பங்கு மக்கள் வெளியீடு செய்திருந்தனர். கடந்த நான்கு வருடங்களாக வயோதிபத்தின் காரணமாக சிறிது தளர்வுற்று துன்புற்றிருந்தார். விக்டர் சுவாமி இனி நம்மத்தியில் இல்லை. அவரின் குருத்துவ வாழ்விற்காகவும் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் கத்தோலிக்க விசுவாசத்தை ஆழப்படுத்த அவர் ஆற்றிய அரிய சேவைகளுக்காகவும் இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

# க. பொ. த. சாதாரண மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி - 2013 கத்தோலிக்க திருமறை

தொகுப்பு :- திருமதி. ஞானமலர் மரியதாசன், மன்/ அல் - அஸ்ஹர் ம.வி

### பகுதி 2 வினாக்கள்

01. (அ) நல்ல ஆயன் யார்?
(ஆ) ஆட்டுப்பட்டிக்குள் வாயில் வழியாக நுழையாமல் வேறுவழியாக ஏறிக்குதிப்பவன் யார்?
(இ) நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காக என்ன செய்வான்?

02. (அ) தமஸ்குவில் சவுலிடம் அனுப்பப்பட்ட ஆண்டவரின் சீடர் யார்?
(ஆ) சவுல் பார்வையற்று தமஸ்குவில் எங்கு தங்கியிருந்தார்?
(இ) இவர் யார் யாருக்கு இயேசுவின் பெயரை அறிவிக்கும் கருவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்?

03.(அ) கிறிஸ்து அளிக்கும் உணவு எது?
(ஆ) இயேசுவின் தசையை உண்டு அவர் இரத்தத்தைக் குடிக்காதவனிடம் என்ன இராது?
(இ) இயேசுவின் தசையை உண்டு அவர் இரத்தத்தைக் குடிப்பவன் யாரில் நிலைத்திருக்கின்றான்?

04. (அ) எப்போது இறைவன் நமது செபத்திற்கு செவிசாய்க்கிறார் என்று யோவான் தனது திருமுகத்தில் குறிப்பிடுகிறார்?
(ஆ) திருமுழுக்கின்போது புனிதர்களின் பெயர் சூட்டப்படுவதேன்?
(இ) பொதுச் செபம் பற்றி மத்தேயு நற்செய்தியில் கூறப்படுவது என்ன?

05. (அ) இஸ்ராயேல் மக்கள் இறைவனுக்குப்பலி ஒப்புக்கொடுத்தல் வழியாக எதனைத் தெரிவித்தனர்?
(ஆ) மோசே காலத்தில் ஆரோனும் அவனது புதல்வர்களும் எவ்வாறு பலி ஒப்புக்கொடுத்தனர்?
(இ) இறைவன் எம்மிடம் எதிர்பார்க்கும் பலி எது?

06.(அ) சீடர்களின் பாதங்களைக் கழுவிய செயலால் இயேசு எதனைக் காட்டியுள்ளார்?
(ஆ) திருவிவிலியம் முழுவதும் எதனைப் பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன?
(இ) இறைவனின் விடுதலைச் செயற்பாடு இன்று எதன் மூலம் முன்னெடுக்கப்படுகின்றது?

07.(அ) கிறிஸ்தவ வாழ்வில் ஏற்படும் போராட்டத்தை வெற்றி கொள்வதற்கு என்ன செய்யவேண்டும் என எபேசியர் 6:14-17ல் கூறப்படுகிறது?
(ஆ) கத்தோலிக்க திருச்சபையின் மறைப்படிப்பினைக்கு இணங்க எட்டாவது கட்டளையால் எமக்குக் கூறப்படுவது என்ன?

08.(அ) எமது வாழ்வு ஒளியுள்ளதாயிருக்க அவசியமானது என்ன?
(ஆ) செபம் பற்றி பெரிய குறிப்பிடத்தில் கூறப்படுவது என்ன?
(இ) கிறிஸ்துவுக்குள் இருக்கும் தமது சகோதர சகோதரிகளை செபத்தில் ஈடுபடுத்துவது யாருடைய முக்கிய கடமையாகும்?

### பகுதி 2 விடைகள்

01.(அ) இயேசுக்கிறிஸ்து
(ஆ) திருடன் கொள்ளைக்காரன் (யோவான்10:1)
(இ) தன் உயிரைக் கொடுப்பான் (யோவான் 10:11)

02. (அ) அனனியா
(ஆ) நேர் தெருவில் யூதாவில் வீட்டில் (தி.ப 9:11)
(இ) புறவினத்தாருக்கும், அரசர்க்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் (தி.ப 9:15)

03. (அ) உலகம் உய்வதற்காகப் பலியாகும் இயேசுவின் தசை (யோவான் 6:51)
(ஆ) உயிர் இராது (யோவான் 6:53)
(இ) இயேசுவில் நிலைத்திருக்கிறான் (யோவான் 6:56)

04.(அ) இறைவனின் திருவுளத்திற்கு ஏற்றதாக இருக்கும்போது (யோவான் 5:14)
(ஆ) ஒரு கிறிஸ்தவன் அப்புனிதரின் முன்மாதிரிகையான புண்ணிய வாழ்வை அறிந்து பின்பற்ற.
(இ) இரண்டு மூன்றுபேர் என் பெயரால் எங்கே கூடியிருப்பார்களோ, அங்கே அவர்கள் நடுவே நான் இருக்கிறேன். (மத்தேயு 18:20)

05.(அ) இறைவனுக்கு தங்கள் அன்பையும், நன்றியையும் தெரிவித்தனர்.
(ஆ) காளைகளைப் பாவப்பரிகாரப் பலியாகவும் செம்மறிக்கிடாய்களை நறுமணம் வீசும் எரிபலியாகவும் ஒப்புக்கொடுத்தனர்.
(இ) இறைவன் எம்மிடம் எதிர்பார்ப்பது நொருங்கிய குற்றமுணர்ந்த தூய உள்ளத்தை.

06.(அ) எமது தன்னலம், அகங்காரம், அதிகாரம் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழியை.
(ஆ) விடுதலை பற்றிய கருத்துக்கள்
(இ) திருச்சபை வழியாக.

07.(அ)
மீட்பை – தலைச்சீராவாக அணிந்துகொள்ளுதல்
கடவுளின் வார்த்தையை – போர்வாளாக எடுத்துக்கொள்ளுதல்.
உண்மையை - இடைக்கச்சையாகக் கட்டிக்கொள்ளுதல்.
நீதியை – மார்புக் கவசமாக அணிந்துகொள்ளுதல்
நம்பிக்கையை – கேடயமாகப் பிடித்துக்கொள்ளுதல்
அமைதியின் நற்செய்தியை – மிதியடிகளாகப் போட்டுக் கொள்ளுதல்
(ஆ) – உண்மையானவரும் உண்மையுமான இறைவனுக்கு அவருடைய பிள்ளைகள் சாட்சிபகர வேண்டும்.
- இறைவன் உண்மையுள்ளவராகையால் அவருடைய மக்களும் உண்மையுள்ளவர்களாய் இருப்பதற்கு அழைக்கப்படுகிறார்கள். இவ்வழைப்புக்கு ஏற்ப அவர்கள் வாழ வேண்டும்.
- நாமும் ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவராக வாழ வேண்டும்.

08.(அ) இடைவிடாது செபம் செய்தல்.
(ஆ) இறைவனை இடைவிடாது ஆராதித்தல், நன்றி கூறுதல், புகழ்தல், எமது தேவைகளைக் கேட்டல், இறைவன்பால் உள்ளத்தை எழுப்புதல்.
(இ) குருக்களதும், துறவிகளதும் முக்கிய கடமையாகும்.

## குருத்துவ வாழ்வில் வெள்ளி விழாக் காணும் ...

1ஆம் பக்கத் தொடர்ச்சி

தற்போது பேசாலையில் பங்குத்தந்தையாகப் பணியாற்றும் அருட்பணி. அவிதப்பர் அடிகளார் உதவிப் பங்குத்தந்தையாக வவுனியா, பேசாலை ஆகிய பங்குகளிலும், பங்குத்தந்தையாக ஓமந்தை, ஆட்காட்டிவெளி, இலுப்பைக்குளம், வங்காலை, தலைமன்னார் ஆகிய பங்குகளிலும் பணியாற்றியுள்ளார். இதைவிட சுவிஸ் நாட்டின் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் இயக்குனராகவும், மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார்.

தற்போது வஞ்சியன்குளத்தில் பங்குத்தந்தையாக இருக்கும் அருட்பணியாளர் ஞானாதிக்கம் அடிகளார் உதவிப் பங்குத்தந்தையாக பேசாலையிலும், பின்னர் பங்குத்தந்தையாக முருங்கன், அடம்பன், தாழ்வுபாடு ஆகிய பங்குகளில் பங்குப் பணி ஆற்றியுள்ளார்.

தற்போது மன் / சூரியகட்டைக்காடு றோ.க.த. பாடசாலையில் கல்விப் பணியாற்றும் இவர், புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை, மன்/ முருங்கன் மகாவித்தியாலயம், வவுனியா பராசக்தி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மன்/ அடம்பன் மத்திய மகா வித்தியாலயம், மன்/ புனித வளனார் றோ.க.த. பாடசாலை ஆகியவற்றில் ஆசிரியராகக் கல்விப் பணிபுரிந்துள்ளார்.

## தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆய்வரங்குகள் தவிர்ந்த ஏனைய அரங்குகளில் ஏராளமான கலை நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. இவ்விழாவையொட்டி 17 பக்கங்களைக்கொண்ட மிகப் பெரும் அழைப்பிதழ் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது. தொடக்க விழாவின்போது ‘தமிழாழி’ என்ற பெயரில் நூற்றாண்டு விழா மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

தனிநாயகம் அடிகளாரின் வாழ்வையும் பணிகளையும் மையப்படுத்திய இரண்டு நாள் ஆய்வரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், பேராதானைப் பல்கலைக்கழகம் போன்ற இடங்களில் இருந்து தமிழ் அறிஞர்கள், கல்விமான்கள் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

நிறைவு விழாவின் ஆரம்பத்தில் மன்னார் பாலத்தில் இருந்து நகர மண்டபம் வரையிலான பண்பாட்டுப் பேரணி இடம்பெற்றது. இதில் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் கலைப் படைப்புக்கள் இடம்பெற்றன. நிறைவு விழாவின்போது தமிழுக்கும் சமூகத்திற்கும் பணியாற்றிய சான்றோர்கள் பலர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இவர்களின் விபரங்கள் அடுத்த மன்னா இதழில் வெளிவரும்.

## பொது பல சேனாவின் கருத்து:
# ஆன்மீகத் தலைவர்களை கொச்சைப்படுத்தும் செயல் மீனவ ஒத்துழைப்பு பேரவை கண்டனம்

பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகைக்கு எதிராக பழி சுமத்தியமைக்கு மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்புப் பேரவை கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்பு பேரவையின் இணைப்பாளர் அ. சுனேஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாட்டில் போர் நிறைவடைந்ததை அடுத்து பாதிக்கப்பட்ட அனைத்து மக்களினதும் மீள் குடியேற்றம், அடிப்படை வசதிகள் ஆகியவற்றை மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதனை நோக்கமாக கொண்டு செயற்பட்டுவரும் ஆயரின் பணி மக்கள் மத்தியில் போற்றப்படக்கூடிய விடயம். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிமை பெற்றுக்கொடுக்கும் தூய பணியில் முன்னின்று செயற்பட்டு வரும் ஆயரை அர்சியல் கட்சிகளோடு இணைத்து அவர் அடுத்த பிரபாகரன் என்று பொது பல சேனா அமைப்பு கூறியுள்ளது. இந்த அமைப்பு இவ்வாறான கருத்துக்களை வெளியிடும்போது சிந்தித்து செயற்பட வேண்டும்.

எனவே இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த இந்த அமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

# உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி- 120

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

இந்த மறையறிவுப் போட்டி தொடங்கி இம்மாதத்தோடு பத்து வருடங்கள் நிறைவுபெறுகின்றன. பத்து வருடங்களில் - 120 மாதங்களில் 1,200 வினாக்கள் உங்கள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. பத்து வருடங்கள் இந்தப்போட்டியில் பங்குகொண்டிருக்கின்றோம் என்பதில் உங்களுக்கு நிறைவு இருக்கிறதோ இல்லையோ, இந்தப் பத்து வருடங்கள் இந்தப் போட்டியை எழுத முடிந்ததில், உங்களுக்குத் தரமுடிந்ததில் என்னில் ஒரு நிறைவைக் காண்கின்றேன். கடவுளுக்கு நன்றி கூறுகின்றேன்.

மன்னாவின் ஆசிரியர் அருட்பணி. தமிழ் நேசன் அவர்களுக்கும் என் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னோடு தொடர்புகொள்ளும் வேளைகளில் எல்லாம் என்னை உற்சாகப்படுத்தி எழுதவைத்தது அவர்தான். மன்னா போன்ற ஒரு பத்திரிகையில் எழுதுவதே ஒரு பாக்கியம். பத்து வருடங்கள் தொடர்ச்சியாக எழுதுவது என்பதில் இரட்டிப்புச் சந்தோஷம்.

இனி நமது மறையறிவுப்போட்டிக்கு வருவோம். எசாயாவைப் பற்றிய சில குறிப்புக்கள். எசாயா ஆமோட்சின் மகன் என்பது எசாயா புத்தகம் முதலாம் அதிகாரம் முதலாம் வசனத்திலே சொல்லப்படுகின்றது. எசாயா என்பதன் பொருள் ‘யாவேயே மீட்பு’ - ‘கடவுளே மீட்பு’ என்பதாகும்.

இவர் கி.மு 742ம் ஆண்டில் இறைவாக்கினராக அழைக்கப்பட்டார். இந்த ஆண்டில்தான் யூதா நாட்டின் அரசராக இருந்த உசிபா என்பவர் இறந்தார்.

அந்நாட்டில் ஒவ்வொரு சிறு நிலப்பரப்புக்கும் ஒவ்வொரு அரசர்கள் இருந்தனர். இவ்வாறு பல அரசுகள் இருந்தன. வலிமைமிகு அரசன் ஒருவன் நல்ல படைபலத்தோடு இருந்தால் அண்டை நாட்டோடு மோதுவதும் வெற்றிகொள்ளும்போது அந்நாட்டைச் சூறையாடுவதும் நாசம் செய்வதும் தோற்றுப்போய்விட்ட நாட்டு மக்களைப் பிணைத்து அடிமைகளாக இழுத்து வருவதும் அவர்களை வைத்து வேலை வாங்குவதும்தான் மரபு. அதுதான் அவர்கள் வாழ்க்கை முறை. இந்நாட்களைப்போல் அந்நாட்களில் பொது நியமங்கள் ஏதும் இருக்கவில்லை.

எசாயா இறைவாக்குரைஞனாக இறைவனால் தெரிந்துகொள்ளப்பட்ட நாட்களில் யூதா (நாடு) சிலைவழிபாட்டிலும் பாவ வாழ்விலும் ஊறி மிருக ஜீவியம் நடாத்திக்கொண்டிருந்தது. வேறு வார்த்தைகளில் சொல்வதனால் தனக்கென்றிருந்த யாவேயை (கடவுளை) மறுத்து, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழ்ந்தது.

இந்நாட்களில்தான் இறைவன் எசாயாவைத் தேர்ந்தெடுத்தார். அவர், தான் அசுத்த நாவுள்ளவன் என்று தெளிந்திருந்தார். இறைவன் நெருப்புத் தணலால் அவரைத் தூய்மையாக்கியபின் இறைவாக்குரைஞராக்குகின்றார்.

**இனி எமது வினாக்களுக்குள் செல்வோம். அவை 11ம் அதிகாரத்திலிருந்து 17ம் அதிகாரம் வரை உள்ள பகுதிகளிலிருந்து எடுக்கப்படுகின்றன.**

01. ஆண்டவருக்கு புகழ்ப்பா அமைத்துப் பாடுங்கள். ஏன்? சீயோனில் குடியிருப்போரே ஆர்ப்பரித்து அக்களியுங்கள். ஏன்?
02. இதோ ஆண்டவரின் நாள் வரும்போது என்ன நிகழும்?
03. ஆதலால் வானத்தை நடுங்கச் செய்வேன். மண்ணுலகம் தன் இருப்பிடத்திலிருந்து ஆட்டங்கொடுக்கும். படைகளின் ஆண்டவரது கோபத்தால் அவரது கடும் சினத்தின் நாளில் இது நடக்கும். எசாயாவின் இந்த வாக்கை மத்தேயு நற்செய்தியாளர் தனது நற்செய்தியில் கூறுகின்றார். அவர் கூறுவது என்ன?
04. இதோ ஆண்டவரின் நாள் வரும்போது ஆண்டவர் இஸ்ராயலேருக்கு எதிராக எந்த மக்களைக் கிளர்ந்தெழச் செய்வார்?
05. படைகளின் ஆண்டவர் ஆணையிட்டுக் கூறுவது என்ன?
06. ஆண்டவர் இஸ்ராயலேருக்கு மேல் சுமத்திய துயரையும் இடரையும் அகற்றி அமைதி வாழ்வைத் தரும் நாளில் யாருக்கு எதிராக ஏளனப்பாடலை எடுத்துக் கூறும்படி எசாயா கூறுகின்றார்?
07. பபிலோன் நாட்டை ஆண்டவர் என்ன செய்யப்போவதாக எசாயா இறைவாக்குரைக்கின்றார்?
08. தலைகள் மழிக்கப்பட்டு, தாடிகள் சிரைக்கப்பட்டு, சணலாடைகள் உடுத்தி வீட்டு மாடிகளிலும் பொது இடங்களிலும் உள்ள மக்கள் எதற்காகக் கதறி அழுகின்றார்கள்?
09. தமஸ்கு நகரைப்பற்றி உரைக்கப்படும் திருவாக்கு என்ன?
10. எமோரியர் என்பவர்களின் நகரங்கள் இஸ்ராயேல் மக்கள் வந்தபோது பாழடைந்ததுபோல் இஸ்ராயலேரின் வலிமைமிகு நகர்களும் கைவிடப்பட்டு பாழ் வெளியாகிவிடும் என இஸ்ராயேல் மக்களுக்கு எச்சரிக்கை விடப்படுவது ஏன்?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 118 இற்கான கேள்விகளுக்கு 21 பேர் விடையளித்திருந்தனர்.**

### இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி

அ. நிவேதிக்கா, புதுக்கமம், உயிலங்குளம்.

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. யோ. மிரியம் டர்ஷிக்கா, நானாட்டான்.
2. செ.ஜெசில்டா, 16ம் வீட்டுச்சந்தி, பெரியபண்டிவிரிச்சான், மடு.
3. வி. ஆன் செளமியா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
4. ஜீ. ஜீவறொமா, பரிகாரிகண்டல், முருங்கன்.
5. கெ. சோபியா, எமில்நகர், மன்னார்.
6. கி. ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
7. கு. குவேனி, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
8. செ. சுரேக்கா, இத்திக்கண்டல், அடம்பன்.
9. அ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.
10. இ. நிக்சலா, உயிர்த்தராசன்குளம், முருங்கன்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.133

## 2 சாமுவேல் அதிகாரம் 1 முதல் 14 முடிய

உங்கள் விடைகளை செப்ரம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 16 | | | | 06 | | | ★ |
| | ★ | 09 | | 24 | 13 | 26 | | 22 | |
| 12 | | | 05 | | ★ | | | | ★ |
| | ★ | ★ | | | | ★ | 19 | 02 | |
| 20 | | | 27 | | | | | | 32 |
| ★ | 11 | | | 03 | 18 | 33 | 07 | ★ | 29 |
| 17 | | 25 | | ★ | 14 | | | 34 | |
| | | 04 | | 31 | | | | | 10 |
| 23 | | ★ | 15 | | | ★ | ★ | | |
| | | 08 | | ★ | 30 | | 28 | 21 | ★ |

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. அப்னேரும் அவனுடைய ___ செய்து .................. வழியாக யோர்தானைக் கடந்தனர்.
6. உன் மகனின் ஒரு .................... கூடத் தரையில் விழாது" என்று அவர் பதிலளித்தார்.
8. இப்போது அதை ........................ நாட்டுங்கள்.
11. அப்சலோம் தாவீதின் ___ ஒரு ......................... கழுதைமீது ___ கொண்டிருந்தான்.
12. என் தலைவராம் ___ ஏன் .............. யாக இருக்க வேண்டும்?
14. .................. கொண்ட முகிலைக் கூடாரமாக்கிக் கொண்டார்.
15. இஸ்ராயேலின் .................. எனக்குக் கூறினார்.
16. ஒருவன் பெயர் .........................
17. ....................... யூதா மக்களை அழைக்கச் சென்றான்.
23. மண்ணினின்று ............... முளைக்கச் ___ விளங்குகின்றான்.
25. பிறகு அரசர் சிமயியை நோக்கி நீ ............ மாட்டாய் ___ சொன்னார்.
26. இதோ! உம் பணியாளன் ..........................
31. அததேசரின் அனைத்துப் ___மன்னன் ........... கேள்வியுற்றான்.

8. உன் மூதாதை சவுலின் ................ அனைத்தையும் ___ செய்வேன்.
10. ஆண்டவராம் ............... உம்மோடு இருப்பார் என்று கூறினாள்.
24. தரையின்மீது விழும் ............... போல் அவர்மீது நாமும் விழுவோம்.
28. உமது பெயர் என்றும் ..................... பெறுவதாக!
32. 'நீயே என் மக்கள் இஸ்ரயேலின் ......................... இருப்பாய்.'

### மேலிருந்து கீழ்

1. என் முன்பாக உனது குடும்பமும் உனது .................... என்றும் உறுதியாயிருக்கும்.
5. அப்போது நீயும் இங்கே ........................... என்றார்.
6. கார் ................ அவரது காலடியில் இருந்தது.
7. அவள் எனக்கு ...................... தரட்டும்.
15. தாவீதும் அவரோடு இருந்த ___ கொண்டுவர ..................... யூதாவுக்குச் சென்றனர்.
17. ஆண்டவர் அவன்மீது ..................... கொண்டிருந்தார்.
24. தாவீதின் காலத்தில் ___ தொடர்ந்து ................. ஏற்பட்டது.
27. சவுலின் மகள் மீக்காலுக்குச் சாகும்வரை குழந்தைப் ......................... கிட்டவில்லை.
29. .................. போன்ற இரு மோவாபிய வீரரைக் கொன்றவன்.
32. தாவீதும் தம் வீட்டாருக்கு ........................ வழங்க வந்தார்.
33. ....................... அன்று மிகக் கடுமையாக உருவெடுத்தது.
34. நான் ............. விரும்புகிறேன் என்று ___மறுமொழி கூறினார்.

### கீழிருந்து மேல்

2. மெபிபோசேத்துக்கு ................ என்ற ஓர் இளம் மகன் இருந்தான்.
4. .......................... காட்மான் போல் வேகமாக ஓடக்கூடியவன்.
9. சவுலின் வீட்டைச் சார்ந்த ................ என்ற ஓர் பணியாளன் இருந்தான்.
11. இது நடந்தபின் மீண்டும் பெலிஸ்தியரோடு ..................... என்னுமிடத்தில் போர் மூண்டது.
13. ஆண்டவர் தமக்குக் ___ பெலிஸ்தியரைக் ...................... முதல் கைசேர் வரை தாக்கினார்.
15. அப்சலோம் அதிகாலையில் எழுந்து நகரவாயிலின் ................. அருகே நிற்பான்.
18. ................ எருசலேமுக்குத் திரும்பி அரசரிடம் சென்றார்.
19. நீ ..................... ஒரு மனிதனைத் தவிர அனைவரையும் அழைத்து வருவேன்.
20. நான் ஒரு ...................... பெண்
21. இஸ்ராயேலின் பேச்சைவிட .................... வினரின் பேச்சு கடுமையாக இருந்தது.
22. .................... தாவீதிடம் வந்து அவரிடம் பேசி வெளிப்படுத்தியது.
24. ஒரு வேளை தாவீதைப் ...........................
30. அவன் கேராவின் மகனான ......................
32. அந்த ....................... இன்னும் அருகில் வந்து கொண்டிருந்தான்.

### வலமிருந்து இடம்

3. ..................... தேர்களுக்குத் ___ நரம்பறுக்கச் செய்தார்.
4. ..................... மதிலுக்கு அருகில் இருந்தது.
5. உம் ...................... முதல் இன்றுவரை ___ என்று கூறினார்.

## அதிர்வுகள் .........

10ஆம் பக்கத் தொடர்ச்சி

மேலும், இன்னுமொரு நாட்டிற்குள் செல்வதுபோலவும், அன்னியர்களை நடத்துவது போலவும் இராணுவச் சோதனைச் சாவடிகள் ஓமந்தை, ஆனையிறகு போன்ற இடங்களில் இன்றும் நடத்தப்படுகின்றன. வடகிழக்கில் பட்டிதொட்டியெங்கும் இராணுவப் படைமுகாம்களும் இராணுவச் சாவடிகளும் நிறைந்துள்ளன. இராணுவ ஆக்கிரமிப்பில் தொடர்ந்தும் நாம் வாழ நிர்ப்பந்திக்கப்படுவது இனிமேலும் நியாயமாகுமா? மேற்சொன்னவற்றில் ஒன்றே போதும், எம் வாக்குகளை எவ்வாறு பயன்படுத்தப் போகின்றோம் என்று தீர்மானிப்பதற்கு.

**சர்வதேசத்திற்கு தமிழ்த் தேசியத்தை உறுதிப்படுத்த வேண்டும்**

'போர்க்குற்ற விசாரணைகள் நடத்தப்படவேண்டும்' என மீண்டும் சர்வதேச அரங்கில் பேசப்படுகின்றது. இவ்வாண்டு கார்த்திகைத் திங்கள் கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில், 'இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து கேள்விகள் எழுப்பப்பட இருக்கின்றன' என்று நம்பப்படுகின்றது. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையகத்தின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையில் போர் நடந்த இடங்களைப் பார்வையிட இருக்கின்றார். இவ்வாறான சூழலில், வடமாகாண சபைத் தேர்தலில் குறிப்பிடத்தக்க வாக்குகளைப் பெற்று தமிழ் மக்கள் தங்களை அங்கீகரித்துள்ளார்கள் என சர்வதேசத்திற்கு காட்டுவதற்காக என்றாலும் வாக்குகளைச் சேர்த்தாக வேண்டும் என கங்கணம்கட்டி நிற்கின்றது ஒரு பெரும் படை! இந்நிலையில், நம் மக்களும் தங்களுக்கான தகுந்த தருணத்தைப் பயன்படுத்தி இவர்களை அடியோடு நிராகரித்து சர்வதேசத்திற்கு தமிழ்த்தேசியத்தை உறுதிப்படுத்த முன்வருவார்கள் என உறுதியாக நம்பலாம்.

**தமிழ்த்தேசிய அபிலாசைகளுக்கு தவறாது வாக்களிப்போம்**

முடிவாக, ஒவ்வொரு தடவையும் ஏதாவது சொல்லி, எதையாவது செய்து, என்னத்தையாவது தந்து, தமிழ் மக்கள் எம் அபிலாசைகளை இல்லாதொழிக்கத் தணியாத தாகம் கொண்டு அலைந்து திரிகின்றார்கள். ஏமாறுவதும் ஏமாற்றப்படுவதும் நம் தொடர் வரலாறாகிவிடக்கூடாது. தமிழர் அபிலாசைகளை வென்றெடுக்க தமிழ்த்தேசிய மக்களாக இணைவோம். தமிழ்த் தேசிய அபிலாசைகளுக்கு இத்தேர்தல் நாளில் சென்று தவறாது வாக்களிப்போம். (நம்ம நாடு சரியா இருக்கவேணுமிண்டா; இன்றைய சூழல்ல, நம்ம வீடு சரியா இருக்கணும். விளங்குதா!... (அதிர்வுகள் தொ...ட.....ரு.......ம்) உங்கள் கருத்துகளைப் பதிவுசெய்ய : **anpuomi@yahoo.com**)!

## அருட்பணி. ஜேம்ஸ் அன்ரன்தாஸ் மொறாயஸ்

01ஆம் பக்கத் தொடர்ச்சி

அருட்பணியாளர் ஜேம்ஸ் அன்ரன்தாஸ் மொறாய்ஸ் (அனிஸ்ரன் மொறாய்ஸ்) அவர்கள் வங்காலைப் பங்கைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி. டெனிஸ் ஜேம்ஸ் மொறாய்ஸ், திரேசம்மா லெம்பேட் தம்பதிகளின் புதல்வனாக 11.01.1978இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியையும் உயர்தரக் கல்வியையும் மன்/ புனித ஆனாள் ம.ம.வி. பாடசாலையில் நிறைவுசெய்தார்.

இவர் தனது அழைத்தல் வாழ்க்கையின் முதல் படியாக களனி டாம்ஸ் சிகில நவ சன்னியாச சிறிய குருமடத்தில் பாதம் பதித்தார். பின்னர் சென்னை லொயோலா கல்லூரியில் தனது மெய்யியல் கல்வியை நிறைவுசெய்தார். தொடர்ந்து இலண்டன் கீத்ரோப் கல்லூரியில் இறையியல் கல்வியையும் நிறைவுசெய்தார்.

அருட்பணி. ஜேம்ஸ் அன்ரன்தாஸ் மொறாய்ஸ் கடந்த ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி காலை 10.00 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

02.09.2013 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் லண்டன் புனித/ பற்றிக் ஆலயத்திலும், மன்னார் புனித/ செபஸ்தியார் பேராலயத்திலும் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார். இவர் தனது முதல் திருப்பலியை ஓகஸ்ட் 18ஆம் திகதி காலை 06.00 மணிக்கு வங்காலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுத்தார்.

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவை காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்களும் இது விடயத்தில் அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். *- மன்னா நிர்வாகம்*

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 131ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

முதலாம் பரிசு:
ச. ஜெயானந்தி,
பாலைப்பெருமாள்கட்டு ஆலயம், குருவில்.

இரண்டாம் பரிசு:
பா. அனோஜா,
காத்தான்குளம், வட்டக்கண்டல்.

மூன்றாம் பரிசு:
திருமதி.ரி.எஸ். லீலாவதி,
இல:76/100, சாந்திபுரம், மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 58 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 54 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 131ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. தே. ஆன் லக்ஷனா, சிறுக்கண்டல், முருங்கன்.
2. ச. கனிஸ்ரா, பாலைப்பெருமாள்கட்டு, வட்டக்கண்டல்.
3. ஜெ. ஜெனிஜன், புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி
4. ற. பிரசாந், பறப்பாங்கண்டல், உயிலங்குளம்.
5. ச. நிக்கோதேம்ஸ், மாதிரிக்கிராமம், வங்காலை.
6. ஸ். டினோறி, அச்சங்குளம், நானாட்டான்.
7. யோ. தயாநிதி, மாதா கிராமம், மடுறோட்.
8. செ. சுரேக்கா, இத்திக்கண்டல், அடம்பன்.
9. எஸ். டென்சியா பெரோரா, 8ம் வட்., அன்ரனீஸ் வீதி, பேசாலை.
10. வி. ஆன் கில்டா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
11. அ. புளோறன்ஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
12. ஜெ. ஆன் றுபினா, பெரியகுஞ்சுக்குளம், மடுறோட்.
13. ஜெ.கொண்சில்டா, 16ம் வீட்டுச்சந்தி, பெரியபண்டிவிரிச்சான், மடு.
14. எஸ். யோசப்பினா, கிறிஸ்து அரசர் மாணவியர் இல்லம், முருங்கன்.
15. அ. அபிஷன், பெரியகுஞ்சுக்குளம், மடுறோட்.
16. நீ. மரிய நிசோபனா, குருவில், வட்டக்கண்டல்.
17. ச. டெலான்சன், புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.
18. வி. மேரி கலிஸ்ரா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
19. லோ. சியோனா பறுனாந்து, 8ம் வட்டாரம், பேசாலை.
20. ச. டிலைக்ஷன், புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.
21. பா. சுலியானம்மா, குழந்தையேசுபுரம், மன்னார்.
22. நே. எட்மன் றிச்சட், சிறுக்கண்டல், முருங்கன்.
23. எவ். கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
24. எ. நி. டெறின் லெம்பேட், தலைமன்னார் மேற்கு.
25. ச. நிவாரகா குலாஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
26. யே. யூக்கலிஸ்ரா, இத்திக்கண்டல், அடம்பன்.
27. ஞா. மரிய ஜெனிஸ்ரின், டிமெல்லோ இல்லம், மூதூர்.
28. அ.கரோலினி கீர்த்திக்கா, 57, தபால் நிலையவீதி, திருகோணமலை.
29. எ. விந்தனா, பாலைக்குழி, நானாட்டான்.
30. வெ. சுஜா, பொன்தீவுகண்டல், அளவக்கை.
31. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, சின்னக்கடை.
32. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
33. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
34. எவ். பிவிலியன், தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
35. பா. அருட்பிரதீபன், பெரியகுக்சுக்குளம், முருங்கன்.
36. எஸ். நோயல் கிறிஸ்ரிறோச், மாவட்ட நீதிமன்றம், மன்னார்.
37. நி. செபமாலை மரியம்மா பீரிஸ், 8ம் வட்டாரம், வங்காலை.
38. சௌமியா மோகன்ராஜ், தபால் கந்தோர் வீதி, மன்னார்.
39. ப. பஸ்ரியன், புதுக்கமம், உயிலங்குளம்.
40. பு. கீர்த்திகா, மாவிலங்கேணி, அளவக்கை.
41. என். ஜெகஜீவன் றோச், இல: 146/28, பள்ளிமுனை கிழக்கு.
42. பா. யசோதரறாஜ், ஒல்லிமோட்டை, மன்னார்.
43. க. கான்ஷிகன், கட்டையடம்பன், மடுறோட்.
44. இசைக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
45. எஸ். ஷார்மி பெரேரா, நொச்சிக்குளம், நானாட்டான்.
46. அ. ஒசின் சோபியா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
47. ஈ. நிஷாந்தினி கூஞ்ஞ, குழந்தை யேசு வீதி, 8ம் வட்., பேசாலை.
48. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
49. ஆர் கிங்ஸ்ரினோ, கபித்தாமோட்டை, அடம்பன்.
50. இ. கிஷான், அச்சங்குளம், நானாட்டான்.

## இல.131 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ❋ | ந[04] | ரி | லை | ❋ | ஐ[09] | ம[21] | ரி | யா | ❋ |
| யோ[17] | ❋ | ச[08] | மா[13] | ரி | ய | ர் | பொ[07] | ❋ | சா[03] |
| னா | வு | மா[28] | ர் | போ[02] | ம் | த | ய் | ம் | க[26] |
| மி[29] | டி | ஓ[05] | த் | கி | ங் | தூ[16] | க் | க | வ |
| ❋ | மு[23] | ய் | தா | ❋ | ❋ | ய் | ❋ | மே[27] | லை |
| நி[14] | றை | வு | ர் | தே | அ[10] | மை | தி[12] | நீ[20] | ❋ |
| ன் | ம[19] | லை | சே | ட | து | வி | ரை | து | இ[24] |
| றா | ழை | லே | ஆ[01] | ட் | சி | ஆ[18] | வீ | ர் | ங் |
| ர் | ❋ | ர | டை | மூ[06] | ன் | று | தூ[25] | ❋ | கே |
| ❋ | கை | கு[15] | ங் | தீ[11] | ❋ | பே[22] | து | ரு | ❋ |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.132ற்கான முடிவுகளை 2013ம் ஆண்டு செப்ரம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.



**கட்டண விபரம்**


கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=

# நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 03 1928

உதிர்வு 06 08 2012



### தரு. பெதுரு இராயப்பு

(7ம் வட்டாரம், தூய இயாகப்பர் வீதி, விடத்தல்தீவு.)

*"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கைகொள்பவர் இறப்பினும் வாழ்வார்."*

அன்பான இறைவா!
எம்முடைய அப்பாவிற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம்.
அவர் எம்மை விட்டுப்பிரிந்த இவ் ஒரு வருடத்துள்,
அவருடைய வாழ்வின் இனிய பண்புகளை,
அவர் கற்றுத்தந்த வாழ்வின் அனுபவங்களை
நாம் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.
இவரை உமது நித்திய பேரின்ப ஒளியாகிய
இறையரசில் சேர்த்துக்கொள்ளுமாறு உம்மை
இரந்து வேண்டுகின்றோம்.
*அன்புடன் : குடும்பத்தினர்.*

## 15ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 04 1967

உதிர்வு 03 08 1998



### திரு. யக்கோப்பிள்ளை பாஸ்கரன்

(இத்திக்கண்டல், அடம்பன்.)

பதினைந்து ஆண்டுகள் பறந்து சென்றாலும்
பரிதவிக்கின்றோம் பாரினில் உம் நினைவுகளோடு
பாலகராய் பூவுலகில் நாம் தவிக்க
பரமனிடம் எமக்காய் பரிந்துரைக்கச் சென்றீரோ?

பத்தாண்டுகள் இல்லறத்தில் இன்பம் கண்டீர்
பாதியிலே மக்களின் தீக்கிரை யாகினீரோ
அப்பா என்று அரவணைக்க நாம் துடிக்க
அனைவரையும் மறந்து சென்றதேனோ?

இப்புவிமீதில் உம் பெயர் சொல்லி
விழிநீரின் வேதனையில் உங்கள் முகம் தேடி
அன்பிற்காய் அலைகின்றோம் எம் தந்தையே

அரவணைக்க நீர் எப்போ வருவீர் என்று
அழியாது உங்கள் ஆன்மா இறைவனில் சங்கமிக்க
உமக்காய் என்றும் இறைபதம் வேண்டுகின்றோம்.
*பிரிவால் துயருறும் : மனைவி, பிள்ளைகள்.*

## 25ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 09 1944

உதிர்வு 11 08 1988



### திரு. பி. கிறிஸ்துராசா பீரிஸ்

(முத்தரிப்புத்துறை)

அன்பில் உயர்ந்தவராய் பாசத்தின் உறைவிடமாய்
ஆசையோடு எமைப் போசித்து வளர்த்த
அன்புத் தந்தையாம் கிறிஸ்துராஜா பீரிஸ்

குடும்பத்தின் தலைவனாய்
குவலயம் போற்ற வாழ்ந்த உத்தமரே!
நோயின் தாக்கம் உமைவருத்தும்போதும்
எமக்காகச் சுமைகளைத்தாங்கி
நீங்காத அன்புடன் எம்முடன் கலந்தவரே.

ஆண்டுகள் இருபத்தைந்து ஆனாலும்
எம்முடன் உடன் இருப்பவரே
என்றும் இறைவனின் சந்நிதியில்
இன்புற்று வாழ இறைவனைப் பிராத்திக்கிறோம்.
*பாசமுடன் மனைவி, மகன்மார், மகள்மார், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.*

## 20ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 09 1982

உதிர்வு 31 08 1993



### சுதர்சினி யேசுதாசன்

ஆண்டுகள் இருபது ஆனாலும், உன் இழப்பை எப்படி நாம் மறப்போம்? எப்படி ஆறுதல் அடைவோம்? காலையில் எம் தோட்டத்தில் பூக்கும் மலர்களைக் காணும்போது அதில் உள்ள அழகிய மலராக நீ மணம் தந்து எம் மனதைத் தொட்டுச் செல்கின்றாய். நடைபாதையில் என்றும் நீ எம் வழித்துணையாய் நடந்து வருகின்றாய். மாலையில் வீசும் இளம் காற்றில் நீ கலந்து எம்மை இதமாக வருடிச் செல்கின்றாய். இனிய நல்மொழி பேசி, இதயத்தால் அனைவரையும் இணைத்து, ஆற்றல்கள் பல பெற்ற நீ, அன்று, எம்மையெல்லாம் விட்டு, சொல்லாமல் கொள்ளாமல் பட்டென்று பறந்து போனாயே, அழகிய உன் முகம் காண ஏங்குகின்றோம். மீண்டும் நீ எம்மிடம் வாராயோ?

*உன் பிரிவினை நினைந்து உருகும் : அம்மா, அப்பா, தம்பி, உறவுகள்.*

## 07ம் ஆண்டு நினைவஞ்சலி  05ம் ஆண்டு நினைவஞ்சலி





### சவிரி சந்தியோகுப்பிள்ளை இராஜதுரை    திருமதி. திரேசம்மா இராஜதுரை

(பாலைக்குளி, அடம்பன்.)

மலர்வு 25-12-1921 மலர்வு 20-05-1933

உதிர்வு 02-09-2006 உதிர்வு 10-09-2008

அன்பான பெற்றோரே! நீங்கள் இறைபதமெய்தி ஆண்டுகள் சில கடந்தாலும் உங்களை எப்படி நாம் மறப்போம்? உங்களின் அன்பை யார் எமக்கு ஈடுசெய்வார்? எமது மகிழ்வின் நற் செய்திகளை பகிர்ந்துகொள்ள பக்கத்தில் நீங்கள் இல்லையே. அன்போடு எமை அணைத்து நானிலத்தில் நலமாய் வாழ வழிசெய்தீர். உங்களின் இனிய நல் நினைவுகள் இதயத்தில் என்றும் நிறைந்துள்ளது. உங்கள் பிரிவுத் துயர், உள்ளத்தில் உயர்ந்து எழுகின்றது. பிறப்பவர் எல்லாம் இறப்பது நியதி, எனினும் உங்கள் பிரிவுத்துயர் நெஞ்சமதில் நீங்காது நிற்கின்றது.

பிரிவால் துயருறும் :
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 04 1957

உதிர்வு 05 09 2012



### லூக்காஸ் மெற்றில்டஸ் புனிதசீலி பீரிஸ்

(தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.)

*"தீங்கு அனைத்திலிருந்தும் அவர் என்னை விடுவித்துத் தம் விண்ணரசில் சேர்த்து எனக்கு மீட்பளிப்பார்." (2 திமோத்தேயு 4:18)*

*(இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 05.09.2013 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு தலைமன்னார் புனித லோறன்ஸ் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.)*

பத்துமாதம் சுமந்து ஈன்றெடுத்து பாலூட்டி, தாலாட்டி, சீராட்டி
வாழ்வினிலே உயரவைத்த அன்புத் தெய்வமே, அம்மா!
வருடம் ஒன்று சென்றதம்மா, ஆறவில்லை என் துயரம்!
அழியவில்லை உம் நினைவு!

கண்ணீரில் நான் தோய என்னைப் பிரிந்து ஏன் சென்றீர்?
இவ்பூவுலகில் நான் பூத்திருக்கும் காலம்வரை
என் உயிரோடு உறைந்திருக்கும் அம்மா என் இனிய அம்மா!
*உம் பிரிவால் துயருறும் :*
*உம் அன்பு மகன், உயிர் வைத்த உறவுகள்.*

## 06ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 03 1968

உதிர்வு 07 09 2007



### இராசையா யோகராஜா

(கோவில்குளம், வவுனியா.)

ஆண்டு ஆறு ஆனாலும் உன் இழப்பை எப்படி நாம் மறப்போம்? ஆறுதல் அடைவோம்? தோட்டத்தில் காலையில் பூக்கும் மலரில் ரோஜா மலர்களாக மணம் தந்து எம்மைத் தொட்டுச் செல்வாய். நடைபாதையில் என்றும் நீ எம் வழித்துணையாய் நடந்து வருவாய் மாலையில் வீசும் இளங்காற்றில் நீ கலந்து எம்மையெல்லாம் மகிழ்வுறச்செய்தாய். ஆற்றல் பல பெற்ற நீ பட்டென்று மின்னல்போல் ஏன் பறந்தாய் அழகிய உன் முகம் பார்க்க ஏங்கித் தவிக்கின்றோம்.

*உன் பிரிவால் தவிக்கும் அம்மா, ஐயா, மனைவி, மழலைச்செல்வம், சகோதரர், சகோதரி, மச்சான்மார், மாமி, மாமாமார், மருமக்கள்,*

*தகவல் : இ. இராசையா, ஆலடிவீதி, கோவில்குளம், வவுனியா.*

## சந்தாவைப் புதுப்பியுங்கள்!

- மன்னாவை நேரடியாகப் பெறுவோர் பத்திரிகைப் பணத்தை காலம் தாழ்த்தாமல் கொடுத்து ஒத்துழையுங்கள்.
- தபால் மூலம் பெறும் உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதாரர் மறக்காமல் உங்கள் சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள். சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கான பத்திரிகையை எதுவித அறிவித்தலுமின்றி நிறுத்திவிடுவோம் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம். - மன்னா நிர்வாகம்.

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# மன்னா

## இணைபிரியா இல்லற வாழ்வில் 25வது ஆண்டு நிறைவு விழா வாழ்த்து




17.08.1988 - 17.08.2013

### திரு. திருமதி. யோசப் கிறிஸ்ரோப்பர் பேர்ணதேத்

(நறுவிலிக்குளம், வங்காலை)

"என் அறிவுரையை மறவாதே, என் கட்டளைகளை உன் இதயத்தில் இருத்திக்கொள். அவை உனக்கு நீண்ட ஆயுளையும், பல்லாண்டு வாழ்வையும், நலன்களையும் அளிக்கும்." (நிதிமொழி 3:1-2)


இனிய இளம் உள்ளங்கள் இரண்டு
இல்லறமே நல்லறம் எனக் கண்டு
இல்வாழ்வினில் தோழமை கொண்டு
இரு கரம் கோர்த்தனர் அன்று.

கலை பல கற்ற நல் உள்ளங்களாய்
கள்ளம் கபடமற்ற நெஞ்சங்களாய்
கல்வியின் கலங்கரை விளக்குகளாய்
கடவுள் கருணையில் மிளிர்கின்றீர் இங்கு.

மண வாழ்வின் வெள்ளி விழா அதனை
மங்களகரமாய் நிறைவு செய்யும் எம்
மதிப்பிற்குரிய பெற்றோரை பல்லாண்டு வாழ்கவென
மனதார வாழ்த்துகின்றோம் சேயர்கள் இன்று!

வாழ்த்துவோர் : கி. பசில், கி. நொறிஸ் (பிள்ளைகள்)

## இணைபிரியா இல்லற வாழ்வில் 40வது ஆண்டு நிறைவு விழா வாழ்த்து



29.08.1973 - 29.08.2013

### திரு. திருமதி. பேதிரு நவரட்ணம் பற்றிமா றோஸ்

(இல. 180, ஒல்லிமோட்டை, சாவற்கட்டு, மன்னார்)

இருமனம் கலந்த திருமண வாழ்வில்
நாற்பது ஆண்டுகளை நலமுடன் கடந்து
இன்புற்று மகிழும் இனிய இந்நாளில்
இதுவரை காத்த இறைவனை
இருகரம் கூப்பி வணங்கிடுவோம்.
அன்பு பொங்கிட வாழ்ந்திடுவீர்
நற்சுகத்தோடு மகிழ்ந்திடுவீர்
பல்லாண்டு காலம் பாரினில் வாழ்ந்திட
வாழ்த்துகிறோம் மனம் மகிழ்ந்து போற்றுகிறோம்.

வாழ்த்துவோர் :
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் றதிஷன், கெய்டன், எவபிறிற்னி

## இணைபிரியா இல்லறவாழ்வில் 50வது ஆண்டு நிறைவு விழா வாழ்த்து



31.08.1963 - 31.08.2013

### திரு. திருமதி. அந்தோனிப்பிள்ளை மரிய றெஜினா

(ஆத்திக்குளி, முருங்கன்)

"திருமணத்தில் அடங்கியுள்ள மறைபொருள் பெரிது. இது திருச்சபைக்கும் கிறிஸ்துவுக்கும் பொருந்துவதாகக் கொள்கிறேன்." (எபே. 5:32)

இணைந்து வாழ்ந்திடுக!
இன்னும் பல நூறாண்டு!
நல்லறம் புரிந்திட இல்லறம் புகுந்து
நானிலம் போற்றிட நலம் பல கண்டு
வள்ளுவன் சொன்ன, வாழ்நெறி வழுவாது
வாழ்ந்த காலங்கள் வனப்புற அமைந்து
போற்றுதற்குரிய பெருமைமிகு வாழ்வில்
பொன் விழாக் காணும் புகழுறு தம்பதியர்
இறை ஆசி பெற்ற, இல்லற வாழ்வில்
இணைந்து கழித்திட்ட ஆண்டுகள் ஐம்பது
உலகில் வானும், நிலவும் வலம்வரும் நாள்வரை
உயர்வுறு நலங்கள் யாவையும் பெற்று
இன்பமுடன் இன்னும் பல்லாண்டுகள்
ஈடிணையற்று வாழ வாழ்த்துகிறோம்.
வாழ்க நலமுடன்! வாழ்க வளமுடன்!
வையகத்தில் வளர்க உங்கள் வாழ்வு.

பாசமுடன் வாழ்த்துவோர் : சகோதரர்கள், பிள்ளைகள்,

## இணைபிரியா இல்லறவாழ்வில் 50வது ஆண்டு நிறைவு விழா வாழ்த்து



(17.08.1963 - 17.08.2013)

### கலைத்தவசி தம்பதியினர்
### திரு. திருமதி. செபமாலை றோஸ்மேரி

தடைக்கற்களை – வாழ்வுப்
படிக்கற்கள் ஆக்கியவர்கள் நீங்கள்!
சவால்களை – பெரும்
சாதனைகள் ஆக்கியவர்கள் நீங்கள்!

சிலுவைகளை – நாளும்
சுகமாகச் சுமந்தவர்கள் நீங்கள்!
இல்லற வாழ்வில் பொன்விழாக்காண
இறையவன் அருள் கூர்ந்தான்!

அவர் புகழ் போற்றப்படுவதாக – உம்மால்
அவர் பெயர் புகழப்படுவதாக!

பாசமுடன் வாழ்த்துவோர் :
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

## இணைபிரியா இல்லற வாழ்வில் 50வது ஆண்டு நிறைவு விழா வாழ்த்து



(26.08.1963 - 26.08.2013)

### திரு. திருமதி. செபஸ்தியாம்பிள்ளை அனுசுயா தேவி

(வண்ணாங்குளம், அடம்பன்.)

"ஆண்டவரை நான் எக்காலமும் போற்றுவேன் அவரது புகழ் எப்பொழுதும் என் நாவில் ஒலிக்கும்"

இல்லறம் என்னும் நல்லறம் தன்னில்
இனிதே இணைந்து ஆண்டவன் அருளால்
ஐவரைப் பெற்று
அவனிதனில் மகிழ்வுறச் செய்தீர்கள்
அல்லும் பகலும் எமக்காய் உழைத்தீர்கள்.
ஐம்பது வருடங்கள் இல்லற வாழ்வில்
தடம் பதித்து நிறைவினைக் காணும் உங்களை
இறையருள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகிறோம்.

பாசமுடன் வாழ்த்துவோர் :
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 08 1942



உதிர்வு 12 08 2012

### திருமதி. தாசன் மேரி ஜெயமணி

(பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்.)

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்துவிட்டேன்."
(2 திமெத்தேயு 4:7)

ஆண்டொன்று சென்றிடினும்
அம்மா உன் அன்பு முகம்
மாண்டதுபோல் தோன்றாது - எம்
மனக்கண்முன் நிற்கிறதே.
நீண்ட செபதபமும்
நிறைவான ஒழுக்கமும்
பூண்ட உமதான்மா
புண்ணியனின் உறைவிடமாய்
ஆண்டவனின் சந்நிதியில்
அமைதியுடன் இளைப்பாற
வேண்டுகிறோம் இளைப்பாற
விண்ணரசர் இயேசுவிடம்!

இவரின் பிரிவால் துயருறுவோர் :
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.